உலகம் மறுபடியும் விழுந்து போகுதல்

The World Is Again Falling Apart

63-11-27



உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

உலகம் மறுபடியும் விழுந்து போகுதல்

இந்தச் செய்தியானது ஏழாம் தூதன் (வெளி. 10:6) சகோதரன் வில்லியம் மரியன் பிரன்ஹாம் அவர்களால் 1963-ம் வருடம், நவம்பர் மாதம், 27-ம் தேதி, ஷிரிவ்போர்ட், லூசியானா, அமெரிக்காவில் பிரசங்கிக்கப்பட்டது. இப்புத்தகம் முழுமையாக அச்சிடப்பட்டு, ***Word of Life Ministry*** மூலமாக இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

வெளியிடப்பட்டது: செப்டம்பர் 2026

Word Of Life Ministry

Bro. Peniel Ebi

5/337, Durga Garden,

Nagama Naicken Palayam,

Coimbatore-641016

Phone: 9047268278 /9487972418

Web: www.wordoflife.in

உலகம் மறுபடியும் விழுந்து போகுதல்

The World is Again Falling Apart

63-11-27

 ஆமென். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் உட்காரலாம். மறுபடியும் வீட்டிற்கு வரவும் உங்கள் அனைவரையும் பார்க்கவும், இன்றிரவில் நான் உள்ளே நுழைந்தபோது, நீங்கள் அனைவரும் கர்த்தரைத் துதித்துக் கொண்டிருப்பதைக் கேட்பதிலும், மிகுந்த நல்லுணர்வு உண்டாகிறது. நான் இங்கே இருந்தபோது, கடைசியாக நடந்த நன்றி செலுத்தும் கூட்டம் நடந்ததிலிருந்து, இப்படிப் பட்ட கூட்டத்தையும், மறுபடியும் என்னுடைய கூடாரத் திற்கு வருவதையும், நான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். (சபையார் "ஆமென்" என்று கூறுகின்றனர்-ஆசி.) அவர் எங்கே சென்றார் என்று எனக்குத் தெரியவில்லை. அதோ அங்கே, அவர் இங்கே தான் இருக்கிறார். இப்பொழுதுகூட அவர், "ஆமென்" என்று கூறுவாரா என்று வியப்படை கிறேன், உங்களுக்குத் தெரியும் (சகோதரன் மூர் "ஆமென்" என்று கூறுகிறார்). எப்பொழுதும் நான் இங்கே இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். நான் ஏற்கனவே கூறினதுபோல கடைசியாக நடந்த நன்றி அறிவிப்பு கூட்டத்திலிருந்து, நான் முன்னானவைகளை நோக்கிப் பார்க்கிறேன்,.

2. நாங்கள் இப்பொழுதுதான் நியூயார்க் பட்டணத்தை விட்டு வந்தோம், அங்கே நாங்கள் மிகச்சிறந்த ஒரு கூட்டத்தைக் கொண்டிருந்தோம். கர்த்தர் எங்களை ஒரு வல்லமையான வழியில் ஆசீர்வதித்தார். நாங்கள் மோரிஸ் அரங்கத்தில் (Morris Auditorium) இருந்தோம், கூட்டம் அரங்கத்தை நிரப்பியிருந்தது, தெருக்களில் மேலும் கீழுமாக கூட்டம் நிரம்பி வழிந்தது. அவர்கள் அங்கே வெளியே நின்றுகொண்டு காத்திருந்தனர். ஒருவேளை,

யாராவது ஒருவர் பார்வையாளராக வந்தால்- இன்னொரு வர் பக்கத்தில்தான் நிற்கவேண்டும், உங்களுக்குத் தெரியும், அவைகளை நினைத்துப்பார்க்கிறேன், நல்லது, ஏதோ ஒன்று; சில ஜனங்களை நீங்கள் அறிவீர்கள், சபைக்கு செல்கிறார்கள், அதன்பின் அவர்கள் முதலாவது செய்யும் காரியம், ஏதோ சொல்வதைக் கேட்கிறார்கள், அதை அவர்கள் விரும்புவதில்லை, உடனே எழுந்திருந்து வெளியே நடந்து சென்றுவிடுவார்கள். அவர்கள் வெளியே வந்தவுடன், அந்த இருக்கையை யார் எடுத்துக் கொள் வார்கள் என்று அவர்கள் வெளியே நின்று ஓட்டெடுப்பு நடத்துவார்கள். ஒவ்வொரு இரவும் நான் வருவேன், ஏறக்குறைய அந்தப் பட்டணத்தார் அனைவருமே அங்கு வந்திருப்பார்கள், தெருக்களில் மேலும் கீழும் குவிந்து கிடப்பார்கள். இவ்விதமாக கர்த்தர் எங்களை ஆசீர்வதித்து, சில ஆத்துமாக்களை தந்தார், அதுவுமின்றி மகத்தான சுகமாக்குதலும் உண்டாயிருந்தன.

3. பிறகு வர்த்தக புருஷரின் காலை உணவின்போது, நாங்கள் ஒரு அற்புதமான நேரத்தைக் கொண்டிருந்தோம், அனுமதிச்சீட்டு (tickets) எல்லாம் விற்றுத் தீர்ந்துவிட்டன. அதன்பிறகு, அவர்கள் நூற்றுக்கணக்கானவர்களை உள்ளே அனுப்ப வேண்டியதாயிற்று, அனுமதிச்சீட்டு அவர்களிடம் இல்லாமல் போய்விட்டது. தாழ்வாரத்திலும், சுவர்களைச் சுற்றிலும், உள்புறம், கதவுகளைச் சுற்றிலும், இன்னும் பல இடங்களிலும் ஜனங்கள் நிரப்பி விட்டார்கள். நாங்கள் ஒரு அதிசயமான நேரத்தை உடையவர்களாய் இருந்தோம். ஒரு எபிஸ்கோபலியன் போதகர் கூட அங்கு வந்திருந்தார். கர்த்தர் எங்களை பெரிதும் ஆசீர்வதித்தார்.

4. அதன்பின் நாங்கள் எங்கள் வீடுகளை அடைந் தோம், என்னுடைய இன்னொரு வீடு, அது ஜெபர்ஸன் வில்லில் இருக்கின்றது. உண்மையாகவே, நான் இப்பொழுது அரிசோனாவில் உள்ள டூசான் (Tucson) என்னுமிடத்தில்

வாழ்ந்துவருகிறேன், கடந்த இரண்டு வருடங்களாக நான் அங்குதான் இருக்கிறேன், நீங்கள் அதை அறிவீர்கள்.

5. இப்பொழுது நான் மறுபடியும் டூசான் சென்று கொண்டிருக்கிறேன், ஃபீனிக்ஸில் (Phoenix) அடுத்த வாரம் நடக்கவிருக்கும் வர்த்தக புருஷரின் காலை உணவில் கலந்துகொள்ள வேண்டும். அங்கே, வருடத்தின் தொடக்கத் திலேயே உடனடியாக, ஒரு கூட்டத்தை தொடங்குவோம், அது பன்னாட்டு வியாபாரிகள் கூட்டத்திற்கு சிலநாட்கள் முன்பதாகவே இருக்கும், தேசிய கன்வென்சன் கூட்டம்– இராமதா இன் (Ramada Inn) என்ற இடத்தில் நடத்தப்படும் என்று நம்புகிறேன்.

6. இன்றிரவு இங்கு–இந்த அழகான ஸ்ரிவ்போர்ட் (Shreve port) பட்டணத்தில் இருப்பது மிகவும் நன்றாக இருக்கிறது.

7. இப்பொழுது, வழக்கமாக நான் நீண்டநேரம் பேசு வேன், ஆனால் அதைக் குறைத்துக்கொள்வதற்கு கூடுமான வரையில் நான் முயற்சி செய்யப்போகிறேன், மூன்று அல்லது நான்கு மணிநேரங்கள், எப்படியாயினும், இந்த வேளையில் குறைத்துக்கொள்வேன். உங்களை நான் களைப்படையச் செய்கிறேன் என்பதை அறிவேன், ஆனால், பாருங்கள், நான் அடிக்கடி உங்களைச் சந்திப்பதில்லை. அநேகர் என்னைவிட முன்பே வீட்டிற்கு சென்றுவிட்டார்கள். நான் மகிமைக்குள் செல்வதற்கு முன்பாக... உங்களை மறுபடியும் சந்திக்க முடியுமா என்று நினைக்கிறேன். "நல்லது, நீங்கள் செல்வதற்கு முன், இதுவே நாம் பூமியில் சந்தித்து ஒருவரோடொருவர் உரையாடிக்கொள்ளும் கடைசி தருணமாக இருக்கும்" என்று நான் நினைக்கிறேன். கடந்த ஆண்டில் இதே நேரத்திலிருந்த அநேகர் ஏற்கனவே சென்றுவிட்டார்கள், என்பதில் சந்தேகமில்லை. ஒருவேளை கர்த்தர் வர தாமதித்தால் அடுத்த வருடமோ அல்லது வேறு

சமயத்திலேயே மறுபடியும் சந்திக்க வாய்ப்பு கிடைத்தால், இன்றிரவு இங்கே இருக்கிறவர்களில் இன்னும் கூடுதலாக சிலர் இல்லாமல் போயிருக்கலாம். அதில் நானும் இருக்க கூடும். எந்த நேரத்தில் அழைக்கப்படுவோம் என்று நமக்குத் தெரியாது. மேலும் இந்த ஆராதனைகள் இன்றிரவு முடிவடையும் முன்பே கர்த்தராகிய இயேசு வரக்கூடும் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

8. இப்பொழுது, நீங்கள் என்னை அறிந்துள்ளபடி, நான் சிறந்த பேச்சாளன் அல்ல, சொற்பொழிவாளனும் அல்ல, நான் கர்த்தரை நேசிக்கிறேன்,அவருடைய மகிமைக்கென்று என்னால் முடிந்ததைச் செய்து வருகிறேன். இந்த மேடை யில் நான் நிற்கும்போது சகோதரன் மூர் மற்றுமுள்ள அநேக மகத்தான மனிதர்கள் இந்த மேடையில் நின்றிருக் கிறார்கள் என்பதை அறிந்திருக்கிறேன், அது என்னை ஒருவகையாக உணரச்செய்கிறது. ஒருவகையாக... தவறான இடத்தில் இருக்கிறேன் என்று சொல்லவில்லை. நான் அதை அவ்வாறு பொருள் கொள்ளவில்லை, ஆனால், என்னு டைய இலக்கணம் மற்றும் உள்ள காரியங்களையே நான் பொருள்கொள்கிறேன், ஜனங்கள் என்னை உண்மையாக, நேசிக்கவில்லை என்றால், நான் பிரசங்க மேடையில் வந்த உடனே அவர்கள் எழுந்து வெளியே சென்றுவிடுவார்கள் போல உணர்கிறேன். ஆனாலும், அவர்கள் என்னை பொறுத்துக் கொள்கிறார்கள், அதற்காக நன்றி உள்ளவனாக இருக்கிறேன். இப்போது...

9. ஆனால் நான் எப்பொழுதும் – இந்தக் நோக்கத் தோடுதான் வருகிறேன். வெறுமனே எல்லோரும் என்னைப் பார்க்கவேண்டும் என்பதற்காக நான் இங்கே வரவில்லை; அவ்வாறு நான் செய்தால், நான் உங்கள் வீட்டிற்கே வந்து உங்களை சந்தித்திருப்பேன்,, பாருங்கள். நான் இங்கு வருவதன் நோக்கம் இங்கே இருக்கும் காலத்தில் கர்த்த ராகிய இயேசு கிறிஸ்துவிற்காக என்னால் முடிந்த

மிகச்சிறந்த ஒன்றைச் செய்வதற்காகவே வந்துள்ளேன், அவருக்கு சேவை செய்வதைத் தவிர வேறு ஒரு நோக்கத் திற்காக நான் இங்கு வரவில்லை, அதை எவ்வாறு சிறந்த முறையில் செய்வது என்பதை நான் அறிவேன், எனக்குக் கொடுக்கப்பட்ட விதமாகவே அவருடைய வார்த்தையை உங்களிடம் கொண்டு வருவதற்கும், நோயாளிகளுக்கும் துன்பப்படுகிறவர்களுக்கும் ஜெபிப்பதற்காகவும், தவிர வேறு எந்த நோக்கமும் எனக்கில்லை. இப்பொழுது ஒரு இரவு அல்லது இரண்டு இரவுகளில், சகோதரன் மூரூம் நானும் சேர்ந்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கப் போகிறோம்.

10. அதன்பின், ஒவ்வொருநாள் இரவும், கிறிஸ்தவர் அல்லாத ஒவ்வொருவரும், கிறிஸ்தவர்களாக வேண்டும் என்பதே எங்கள் விருப்பம் அதற்காக, ஏதாவது சொல்லப் படவோ, செய்யப்படவோ செய்தால், நீங்கள் ஒரு கிறிஸ்தவர் ஆகிவிடுவீர்கள், என்று நம்புகிறோம். ஒரு வேளை நீங்கள் அவ்வாறு இல்லாமல், ஏற்கனவே நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நானம் எடுத்திருந்தும், இன்னும் பரிசுத்த ஆவியைப் பெறாமல் இருந்தால், இந்த வாய்ப்பை தவறவிடாதீர்கள். இது உங்களுடைய இரவாக இருக்கட்டும். ஏனென்றால், அந்தப்புத்தகத்தில் அநேகப் பெயர்கள் உள்ளன, என்பதை நினைவுகூறுங்கள், கடைசிப்பெயர் அதில் சேர்க்கப்பட்டவுடன், அது எல்லாவற்றிற்கும் முடி வாக இருக்கும். அதை முடித்துவைப்பது உங்களுடைய பெயராக இருக்கக்கூடும்.

11. ஆட்டுக்குட்டியானவர் வந்து சிங்காசனத்தில் வீற்றி ருந்தவருடைய வலது கரத்திலிருந்த புத்தகத்தை எடுத்த போது, அது மீட்பின் புத்தகமாக இருந்தது. அதில் உள்ள பெயர்கள் அனைத்தும் உலகத்தோற்றத்திற்கு முன்பே எழுதப்பட்டிருந்தன. அந்தக் கடைசிப்பெயர் அழைக்கப்

படும் போது, அந்தப்புத்தகம், அந்தத் திட்டம், மற்ற அனைத்தும் அப்பொழுது வெளிப்படுத்தப்பட்டிருக்கும், ஆட்டுக்குட்டியானவரால் ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு விட்டன. முழு வேதாகமத்தின் இரகசியங்களும் அதில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. நமக்கு சமயம் மட்டும் இருக்குமானால், எல்லாவற்றையும் கூற விரும்புகிறேன்.

12. சமீபத்தில்தான் அந்த ஏழு முத்திரைகள் பற்றிய செய்தியை முடித்தோம். மீண்டும் ஒருமுறை அவைகளின் வழியாக கடந்துசெல்ல விரும்புகிறேன். கர்த்தர் எவ்வள வாய் நம்மை ஆசிர்வதித்தார்! உங்களில் அநேகர் அதைக் கேட்டீர்கள், லைப் இதழிலும் (Life Magazine) மேலும் பல இடங்களிலும், அந்தச் சமயத்தில் நடந்தவைகளையும் அறிவீர்கள். நாம் மேற்கு நோக்கி சென்றபோது முன்னறவிக்கப்பட்டபடியே அந்த ஏழு தூதர்களின் படம் எடுக்கப்பட்டது. அது எங்கு நிகழும், நான் எவ்வாறு அங்கு நின்று கொண்டிருப்பேன் என்பதையும் அவர் மூன்று மாதங்களுக்கு முன்பே எனக்குக் கூறினார்; அது அப்படியே நடந்தது. மேலும் - அந்தப் புகைப்படக் கருவிகள், ஓ, பலநூறு மைல்களுக்கு அப்பால், அந்தப் படங்களை துல்லியமாக, மிகச்சரியாகப் படம்பிடித்தது. அவைகள் முன்னுரைக்கப்பட்டபடியே துல்லியமாக இருந்தது! மேலும் என்னுடைய ஜீவியத்தில் நான் ஊக்கு விக்கப்பட்டு பிரசங்கம் செய்திருந்தால், அது அந்த ஏழு முத்திரைகளைப்பற்றிய செய்தி தான். ஆகவே நாம் முடிவு காலத்தில் இருக்கிறோம் என்பதை அறிந்திருக்கிறேன்.

13. அந்தப் புத்தகத்தில் கடைசிப்பெயர் செல்லும் போது போது, அல்லது அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டிருந்த அந்தக் கடைசிப்பெயர், அப்பொழுது எல்லாமே முடிந்து போயிருக்கும், அவர் மீட்கப்பட்டவர்களை உரிமைகோர வருகிறார். அது ஒரு விநோதமான நேரமாக இருக்கும். இதை நீங்கள் எப்பொழுதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?

ஜனங்கள் தொடர்ந்து பிரசங்கம் செய்துகொண்டே இருப் பார்கள், சபையும் நாங்கள் ஜனங்களை இரட்சித்து கொண் டிருக்கிறோம் என்று நினைத்துக்கொண்டே இருக்கும். ஆனால் அப்பொழுது காலம் தாமதமாகி யிருக்கும், எல்லாம் முடிந்துபோயிருக்கும், பாருங்கள், பின்னர் அந்த செய்தி முற்றிலும், இழக்கப்பட்டவர்களுக்குச் செல்லும்; நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, அவர்கள் ஏழு நாட்கள் பேழைக்குள் இருந்தார்கள், சோதோமின் நாட் களிலும் அப்படியே நடந்தது, இயேசுவும், அவருடைய ஊழியத்தின் மூன்றாம் கட்டத்தில், நித்தியமாக இழந்து போன ஆத்துமாக்களிடம் மனம் திரும்பாத, காவலி லுள்ளவர்களிடத்தில் சென்று பிரசங்கித்தார். அவர்கள் நோவாவின் நாட்களில் தேவன் நீடிய பொறுமையுடன் காத்திருந்த போது மனந்திரும்பாதவர்கள். மேலும் இந்தக் காரியங்கள் எப்பொழுது நடைபெறும் என்பதை நாம் அறியோம்.

14. இது நமக்கு எச்சரிப்பாக இருக்கட்டும். நாம் வெறுமனே நின்றுகொண்டே இருக்காமல், அதற்காக ஏதாவது செய்வோம். தேவனோடு நாம் சரியாய் சீர் பொருந்தவில்லை என்றால், இப்பொழுதே தேவனோடு சீர் பொருந்துவோம்.

15. ஒருசமயம், அது மத்தேயு 11-வது அதிகாரம் என்று நான் நினைக்கிறேன், அது 6-வது வசனம் என்று விசுவாசிக்கிறேன். அது எனக்கு உறுதியாக தெரியவில்லை, அது 11-வது அதிகாரம்தான் என்பதை நிச்சயமாக அறிந்துள்ளேன். ஒருசமயம், யோவானுடைய சீஷர்கள் யோவானால் அனுப்பப்பட்டிருந்தார்கள், அவர்கள் கர்த்த ராகிய இயேசுவை பார்த்து, உண்மையிலேயே வருகிறவர் நீர்தானா, அல்லது வேறு ஒருவரை எதிர்பார்க்க வேண் டுமா? என்று அவரிடத்தில் கேட்பதற்காக அனுப்பினார். அவர் ‘‘நீங்கள் கேட்கிறதையும், காண்கிறதையும்

யோவானிடத்தில் போய் அறிவியுங்கள்" என்று கூறினார். "என்னிடத்தில் இடறலடையாதிருக்கிறவன் எவனோ அவன் பாக்கியவான்" என்று அவனுக்கு சொல்லுங்கள் என்றார்.

16. அதன்பிறகு அவர்கள் மலையைக் கடந்து செல்கையில், இயேசு, ஒருவேளை அவர்களைக் கவனித்திருக்க வேண்டும், "எதைப் பார்க்கப் போனீர்கள்?" என்றார். அவர்கள்... "மெல்லிய வஸ்திரம் தரித்த மனிதனையா பார்க்கச்சென்றீர்கள்?" என்றார். "அப்படிப்பட்டவர்கள் இராஜாவின் அரண்மனைகளில் இருக்கிறார்கள், காற்றினால் அசையும் நாணலையா?" "ஒரு தீர்க்கதரிசியைப் பார்க்கப் போனீர்களா?" "நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தீர்க்க தரிசியைக் காட்டிலும் மேலானவரையே, ஏற்றுக்கொள்ள மனதாயிருந்தால் ஏற்றுக்கொள்ளுங்கள். மல்கியா 3-ல் தீர்க்கதரிசியால் உரைக்கப்பட்டவர் இவரே, "இதோ நான் என் தூதனை அனுப்புகிறேன்."

17. சீஷர்கள் ஒருசமயம் இந்தக் கேள்வியைக் கேட்டார்கள். "இவைகள் எல்லாம் சம்பவிப்பதற்கு முன்னே எலியா முந்தி வரவேண்டும் என்று வேதபாரகர்கள் சொல்லுகிறார்களே அதெப்படி என்று கேட்டார்கள். இப்பொழுது ஞாபகம் கொள்ளுங்கள், அவர் சீஷர்களிடம் பேசிக் கொண்டிருந்தார், பரிசேயர்களிடத்தில் அல்ல. சீஷர்கள், "எலியா முந்தி வரவேண்டும்" என்று வேதபாரகர்கள் ஏன் கூறுகிறார்கள்" என்று அவர்கள் கேட்டார்கள்.

18. "எலியா வந்தாயிற்று, அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள், அதை நீங்கள் அறியவில்லை" என்று அவர் பதில் அளித்தார்.

19. உபத்திரவக்காலம் வந்துவிட்டது என்பதை ஒரு நாளில் கண்டுகொண்டால் எப்படி இருக்கும், அப்பொழுது, "நல்லது, முதலில் எடுத்துக்கொள்ளப்படுதல் நடக்கும் என்று நான் நினைத்தேன்" என்று நீங்கள் கூறுவீர்கள். "எடுத்துக்

கொள்ளப்படுதல் ஏற்கனவே நடந்துவிட்டது" அதை அறிய வில்லை என்று ஒருசத்தம் எழும்பி சொல்லும்.

20. "நோவாவின் நாட்களில் நடந்ததுபோல, தண்ணீரி னால் எட்டு ஆத்துமாக்கள் காக்கப்பட்டார்கள், மனுஷ குமாரன் வருகையிலும் அவ்வாறே நடக்கும்." ஜனங்கள் எப்பொழுதும் போல, தாங்கள் சரியானபடியே காரியங் களைச் செய்கிறோம் என்று நினைத்து வழக்கம்போல் தொடர்ந்து செல்கிறார்கள். ஒருநாள் எல்லாமே முடிந்து போயிருக்கும். ஓ, தேவனே எங்கள் மீது இரக்கம் கொள் வீராக! நம்மை நாமே ஆராய்ந்து அறிவோமாக, இப்பொ ழுதே வருகிற சில இரவுகளில், நாம் எங்கு இருக்கிறோம் என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.

மறுபடியும் நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்துவோமாக.

21. கர்த்தராகிய இயேசுவே, இந்தக் காரியங்களை சிந்தையில் கொண்டவனாய், இந்தச் சபைக்கும் இந்த ஜனங் களுக்கு முன்பாகவும் அறிவிக்கிறேன்; தேவனே, இந்த ஸ்ரீரிவ்போர்ட்டில் இந்த முறை அந்தப் புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கும் ஒவ்வொரு ஆத்மாக்களையும், நீர் இரட்சிக்க வேண்டுமாய் நான் ஜெபிக்கிறேன். இங்கே இன்னும் இரட்சிக்கப்படாதவர்கள் யாரேனும் இங்கிருந்தால், பிதாவே, இது அவர்கள் இரட்சிக்கப்படுவதற்கான நேரமாக இருக் கட்டும். இந்தக் கூட்டத்தில் அப்படிப்பட்டவர்கள் யாரேனும் இருந்தால், இந்த இரவு அவர்களுக்குரியதாய் இருக்கட்டும்.

22. சகோதரன் மூரையும், சகோதரி மூரையும் அவர் களுடைய குடும்பத்தாரையும், அவர்களுடைய பிள்ளை களையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் ஆசிர்வதியும். தேவனே, அவர்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். மேலும் சகோதரன் லைல் (Lyle) சகோதரன் பிரவுன் (Brown) இங்கு சபையில் இருக்கிற மற்ற சகோதரர்கள், சகோதரன் டான் (Don), இந்த சிறந்த கூட்டமாகிய

ஜனங்கள், இங்கே உள்ள இங்கிருக்கும் எல்லா அங்கத் தினர்கள், சபை மக்கள், இவர்கள் யாவருக்காகவும் உமக்கு நன்றி கூறுகிறோம்

23. மேலும், பரலோகப் பிதாவே, நாங்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து இந்த நன்றி அறிவிப்புக் கூட்டத்தில்... பூமியி லேயே நாங்கள் இவ்விதமாக ஒன்றுகூடி நன்றி கூறுகிற கடைசி கூட்டமாக இருக்க கூடும், ஆகவே, தேவனே, இந்த நேரத்தை பயன்படுத்தி அதை பயனுள்ளதாக்கி கொள்வோமாக. மேலும் காலம் மிகவும் தாமதமாகிக் கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். கர்த்தராகிய இயேசு வருவதற்கு முன் நம்மால் இயன்ற எல்லாவற்றையும் செய்து, அவருக்காக கிரியை செய்து முடிக்க விரும்புகிறோம். எப்படியாயினும், நாம் அந்த வேலையை செய்து முடிப்பதற்காக அவர் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார் என்று நான் உணர்கிறேன். நாம் அந்த வேலையை முடிக்கவேண்டும். ஆகையால் கர்த்தாவே, இன்றிரவு எங்களுக்கு உதவிசெய்யும். நாங்கள் ஒவ்வொருவரும், தனிப்பட்ட நபர் என்ற முறையில், மற்றவர்களைக்குறித்த அக்கறை உள்ளவர்களாய் இருந்து, நாம் தெருக்களுக்கும் அண்டை வீடுகளுக்கும் சென்று - இழந்து போனவர்களை அழைத்து வந்து, அவர்களும் இரட்சிக்கப்படும் படியாக செய்ய கிருபை புரியும்.

24..உம்முடைய வார்த்தையை ஆசீர்வதியும் கர்த்தாவே. உம்முடைய வார்த்தையே சத்தியம், அவை அனைத்தும் சத்தியமே. ஆகையால் இந்த ஜீவ அப்பமாகிய சத்தியத்தை ஜனங்களுக்கு பங்கிட்டு அளிக்க முயற்சிக்கையில் கல்வாரியில் பாவம் நொறுக்கப்பட வேண்டியிருந்ததால், அந்த நொறுக்கப்பட்ட சரீரத்தின் காரணத்தால், பரிசுத்த ஆவியானவர் வந்து மறுபடியும் தம்மைத்தாமே எங்கள் மத்தியில் அவர் எங்களுக்குப் பகிர்ந்தளித்து, நாங்கள்

வார்த்தையைச் சுற்றிலும் ஐக்கியம் கொள்ள ஜெபிக்கிறோம். இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

25. இப்பொழுது, உங்களால் கூடுமானால், என்னோடு கூட நீங்கள் திருப்பவேண்டும் என்று நான் விரும்புகிறேன். அநேகர் ஒரு ஊழியக்காரனோ அல்லது ஒரு சுவிசேஷ கரோ வாசிக்கும் வேதப்பகுதியை தங்களுடைய வேதாகமத் திலும் பின்பற்ற விரும்புவார்கள். இன்றிரவு நான் உபாகமம், 4-வது அதிகாரத்தில் 7-வது வசனம் தொடங்கி 14-வது வசனம் வரையும் மேலும் எபிரெயர் புத்தகம் 14-வது அதிகாரம், (12- வது அதிகாரம்) 25-வது வசனத்தி லிருந்து 29-வது வசனத்தையும் சேர்த்து. உபாகமம்-4 ம் அதிகாரம்.

நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?

இந்நாளில் நான் உங்களுக்கு விதிக்கிற இந்த நியாயப் பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங்களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதியும் எது?

ஒரேபிலே உன் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக நீ நிற்கும்போது, கர்த்தர் என்னை நோக்கி: ஜனங்களை என்னிடத்தில் கூடிவரச்செய்து, என் வார்த்தைகளை அவர்கள் கேட்கும்படி பண்ணுவேன்; அவர்கள் பூமியில் உயிரோடு இருக்கும் நாளெல்லாம் எனக்கு பயந்திருக்கும்படி அவைகளைக் கற்றுக்கொண்டு, தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கடவர்கள் என்று சொல்லிய நாளில்,

உன் கண்கள் கண்ட காரியங்களை நீ மறவாதபடிக்கும், உன் ஜீவனுள்ள நாளெல்லாம் அவைகள் உன் இருதயத்தை விட்டு நீங்காதபடிக்கும் நீ

எச்சரிக்கையாயிருந்து, உன் ஆத்துமாவைச் ஜாக்கிரதையாய்க் காத்துக்கொள்; அவைகளை உன் பிள்ளைகளுக்கும் உன் பிள்ளைகளின் பிள்ளைகளுக்கும் அறிவிக்ககடவாய்.

நீங்கள் சேர்ந்துவந்து, மலையின் அடிவாரத்தில் நின்றீர்கள்; அந்த மலையில் வானத்தை அளாவிய அக்கினி எரிய, இருளும் மேகமும் அந்தகாரமும் சூழ்ந்தது.

அந்த அக்கினியின் நடுவிலிருந்து கர்த்தர் உங்களோடே பேசினார்: வார்த்தைகளின் சத்தத்தை நீங்கள் கேட்பீர்கள்; அந்த சத்தத்தை நீங்கள் கேட்டதேயன்றி, ஒரு ரூபத்தையும் காணவில்லை.

நீங்கள் கைக்கொள்ளவேண்டும் என்று அவர் உங்களுக்கு கட்டளையிட்ட பத்து கற்பனைகளாகிய தம்முடைய உடன்படிக்கையை அவர் உங்களுக்கு அறிவித்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் எழுதினார்.

நீங்கள் சுதந்தரித்துக்கொள்ளப்போகிற தேசத்தில் நீங்கள் கைக்கொள்ளவேண்டிய கட்டளைகளையும் நியாயங்களை யும் உங்களுக்குப் போதிக்கவேண்டுமென்று அக்காலத்திலே கர்த்தர் எனக்குக் கட்டளையிட்டார்.

26. இப்பொழுது எபிரேயர் புத்தகம், 14-வது அதிகாரம், 25-வது வசனத்திலிருந்து.

(தீர்க்கதரிசி 12-வது அதிகாரம் என்பதற்குப்பதிலாக 14-வது அதிகாரம் என்று கூறியிருக்கிறார் – தமிழாக்கியோன்).

பேசுகிறவருக்கு நீங்கள் செவிகொடுக்க மாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில், பூமியிலே பேசினவருக்குச் செவிகொடுக்க மாட்டோமென்று விலகின வர்கள் தப்பிப் போகாமலிருக்க, பரலோகத்திலிருந்து

பேசுகிறவரை நாம் விட்டு விலகினால் எப்படித் தப்பிப்போவோம்?

இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையா தவைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப்பட்டவைகள்போல் மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது.

ஆதலால், அசைவில்லாத இராஜ்ஜியத்தைப் பெறுகிற வர்களாகிய நாம் பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக் கொள்ளக்கடவோம்.

நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே.

27. இப்பொழுது என்னிடத்தில் சில குறிப்புகளையும் சில வேத வசனங்களையும் எழுதி வைத்துள்ளேன். அவற்றை குறித்து சில நிமிடங்கள் பேச விரும்புகிறேன். இதற்கு நான் சற்று விநோதமான தலைப்பையே வைக்க விரும்புகிறேன். மேலும் இந்த ஒலிநாடாக்கள் எல்லா நேரங் களிலும் கிடைக்கும், விரும்புகிறவர்கள் அவைகளைப் பெற்றுக்கொள்ளலாம். இங்கு இருக்கும் திரு.மாகுயர் (Mr.Maguier) அவைகளை உங்களுக்கு கொடுப்பார். இந்தப் பாடத்திலிருந்து ஒரு பொருளை எடுக்க விரும்புகிறேன், அல்லது இவ்விதமாக "**உலகம் மறுபடியும் விழுந்து போகுதல்**."

28. நேற்று அல்லது கடந்த சாயங்காலம் நாங்கள் டென்னஸியில் உள்ள மெம்பிஸ் வழியாக, வந்து கொண்டிருந்தோம், மத்தியானத்திற்குப்பிறகு அல்லது சாயங் கால நேரத்தின் ஒருபகுதியில் நாங்கள் அங்கே வந்து சேர்ந்தோம். நாங்கள் தெருக்களின் ஊடாகக் கடந்து வருவது அவ்வளவு சிரமமாக இருந்தது, ஏனெனில் பிள்ளைகளும், ஜனங்களின் கூட்டமும் அவ்வளவாய்

பெருகியிருந்தது. அப்பொழுது நான் "இது என்னவாக இருக்கலாம்?" என்று எண்ணினேன். அந்த ஜனங்கள் ஒருவேளை நம்முடைய அருமை சகோதரர்களான பில்லி கிரஹாம் அல்லது ஓரல் ராபர்ட்ஸ் அவர்களுடைய மதக்கூட்டத்திற்குகென்று வந்தவர்களைப் போல அவர்கள் உடையணிந்திருக்கவில்லை. மேலும் அந்தச் சமயத்தில் அவர்கள் அந்தப் பகுதியில் இருந்தார்கள் என்றும் நான் நினைக்கவில்லை. பெண்கள் கால்சட்டைகள் அணிந்திருந் தார்கள். அவர்களோடு இருந்த சிறு பிள்ளைகள் வெறும் ஓவர்ஆல்ஸ் (overalls) உடைகளையும்(ஓவர்ஆல்ஸ் என்பது மார்புபகுதி வரை நீண்டு செல்லும் ஒரு பிட் கொண்ட கால்சட்டை ஆகும்.) கவரால்ஸ் (coveralls) உடைகளையும் (கவரால்ஸ் என்பது ஜம்ப் சூட் போன்ற ஒரு முழுஉடல் ஆடையாகும்) அணிந்திருந்தனர்.அது என்ன நிகழச்சியென நான் வியப்படைந்தேன், கடைசியாக அது என்னவென்று நாங்கள் கண்டுகொண்டோம். அவர்கள் ஒரு - ஒரு சாண்ட்டாகிளாஸ் (Santa claus Parade) அணிவகுப்பை கொண்டிருந்தனர். ஆயிரக்கணக்கான ஜனங்கள் தெருக் களில் நின்று இதை கவனித்துக்கொண்டிருந்தனர், ஆகை யால் மெம்பிஸ் வழியாக செல்ல எங்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. ஏனென்றால் கிறிஸ்மஸ் காலம் நெருங்கி கொண்டிருந்தது.

29. மேலும் கிறிஸ்துமஸ் என்பது இக்காலத்தில் மிகப்பெரிய வணிக நாளாக மாறிவிட்டபடியால் அது நன்றி செலுத்தும் நாளை ஏறக்குறைய காட்சியிலிருந்து, எடுத்து போட்டுவிட்டது. ஏனென்றால்... வணிகம் நிறைந்த உலகில், எப்படியாயினும்; அது ஏனென்றால் – வணிக உலகில் கிறிஸ்மஸ் காலம் மிகப்பெரிய தாக்கத்தைக் கொண்டுள்ளது, ஏனென்றால் அநேக ஜனங்கள் பொருள் வாங்குவதில் ஈடுபடுகிறார்கள். அவர்களுக்கு நன்றி செலுத்தும் நாள் என்பது சற்று கடந்துசெல்லும் ஒன்றாகவே இருக்கிறது.

இப்போது கிறிஸ்மஸ் காலம் மறுபடியும் நெருங்கி வந்து கொண்டிருப்பதை நாம் காணும்போது இந்தப் பொருளில் பேசுவது நன்றாக இருக்கும் என்று நான் எண்ணினேன். அதைப் பார்க்கும்போது, உண்மையிலேயே, கிறிஸ்துமஸ் என்பது அதுவல்ல....

30. நாம் இந்த டிசம்பர் மாதம் 25-ஆம் தேதியை கிறிஸ்துவின் பிறந்த நாளாக ஆசாரிக்கிறோம். ஆனால், உண்மையிலேயே, அது கிறிஸ்துவின் பிறந்தநாள் அல்ல என்பதை எவரும் அறிவர். அது ரோமருடைய சூரிய – தெய்வத்தின் பிறந்த நாளாகும். சபையானது மாற்றப்பட்டு அது கத்தோலிக்க மார்க்கத்திற்குள் கொண்டு வரப்பட்டு, நிசாயா சங்கம் அமைக்கப்பட்டபோது அப்படி செய்யப் பட்டது. சூரிய – தெய்வத்தின் பிறந்த நாளாயிருந்ததை அவர்கள் "தேவ குமாரனுடைய" பிறந்த நாளாக மாற்றி னார்கள். அப்பொழுதுதானே, சூரியன், 20-ஆம் தேதி தொடங்கி... 21-ஆம் தேதி தொடங்கி, 25-ஆம் தேதி வரைக்கும், அது ஒரு குறிப்பிட்ட நிலையிலிருக்கும். அதை என்ன பெயரிட்டு நீங்கள் அழைக்கிறீர்கள் என்பதை நான் மறந்துவிட்டேன், இப்பொழுது அந்த நிலையில் அது கடந்து செல்லும்போது ஒரு வினாடி அல்லது இரண்டு வினாடிகள் மட்டுமே ஆகும். அது சூரிய – தெய்வத்தின் பிறந்தநாள், அவர்கள் தங்களுடைய அஞ்ஞான பாரம் பரியத்தோடு அதை (கிறிஸ்துமஸ்) இணைத்துக்கொள்ளும் படியாக சூரிய தெய்வம் (sun –god) என்பதற்கு பதிலாக "தேவகுமாரன்" (sun of god) என்று வைத்து அதையே அவருடைய பிறந்த நாளாக ஆக்கினார்கள். ஆனால் அது எந்த விதத்திலும் கிறிஸ்துவின் பிறந்த நாளல்ல.

31. அந்தச் காலத்தில் அவர் பிறந்திருக்கவே முடியாது, ஏனெனில் யூதேயா தேசம் பூமத்திய ரேகையை ஒப்பிடு கையில், இங்குள்ள நிலைக்கு ஒத்த இடத்திலே அமைந் துள்ளது. அது அப்படி இருக்கையில், யூதேயாவில்

குளிர்காலமாக இருக்கும் என்பதை நாம் காண்கிறோம், டிசம்பர்-25- ம் நாள், தேசத்தில் கடுமையான பனிப்புயலும் கடுங்குளிரும் உண்டாயிருக்கும். மேய்ப்பர்கள் மலைகளில் தங்கியிருக்க முடியாது. இன்னும் பல காரணங்களினால் அவர் அந்த நாளில் பிறந்திருக்க முடியாது.

32. மேலும், அவர் இயற்கையின் ஒழுங்கினபடியே பிறந்தார். மற்ற எல்லா இயற்கை சீருஷ்டிகளும் பிறப்பது போலவே, அவரும் பிறந்தார். அவர் வசந்தகாலத்தில் பிறந்தார். வழக்கமாக ஆட்டுக் குட்டிகள் பிறக்கும்போது, அது வசந்தகாலமாக இருக்கும், அவரோ ஆட்டுக்குட்டியா யிருந்தார். இப்பொழுது நான் விசுவாசிப்பது என்ன வென்றால் அவர் மார்ச் மாதத்திலோ, ஏப்ரல் மாதத்திலோ அல்லது அந்த சமீபமான வசந்தகாலத்தின் தொடக்கத்தில் அவர் பிறந்தார்.

33. ஆனால், அவர்கள் அதிலிருந்து ஒரு வியாபார நாளாய் ஆக்கிவிட்டதை நாம் பார்க்கிறோம். ஜனங்கள் வீதிகளில் திரண்டு, ஒருவரோடுவருவர் உரசிக்கொண்டு பல காரியங்களைக்குறித்து சலசலப்பு செய்து, ஒருவருக்கு ஒரு பரிசு கொடுக்க வேண்டும் என்று எண்ணி அதற்காக அவர்கள் எவ்வளவாய் பணத்தை செலவு செய்கிறார்கள்.

34. அன்றொரு நாள் நான் ஒரு இடத்தில் நின்று கொண்டிருந்தபோது, இரண்டு பெண்கள் தங்கள் தகப்பனா ருடைய பிறந்த நாளுக்கு என்ன கொடுக்கலாம் என்று பேசிக்கொண்டிருந்தனர்... அல்லது இந்த வருட கிறிஸ்துமஸ் தினத்திற்கு என்ன பரிசு கொடுக்கலாம். என்று பேசிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருத்தி, "நான் அவருக்கு ஒரு கால் பங்கு விஸ்கி வாங்கியுள்ளேன்" என்றாள். மற்றொருத்தி, "நான் அவருக்கு ஒரு பொட்டலம் அல்லது ஒரு அட்டைபெட்டி சிகரெட்டுகள் வாங்கினேன்" என்றாள். அல்லது அதற்கு ஒத்த வேறொன்றைக் கூறினாள். பின்னர் விஸ்கிக்காக ஒருவர் செலவிட்ட தொகை சிகரெட்டு

களுக்காக மற்றவர் செலவிட்டதை விட அதிகம் என்று அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

35. அப்பொழுது நான், "தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நினைவாக ஒரு பரிசை கொடுப்பதற்கு அல்லது பரிமாறிக்கொள்வதற்கு இதை விட வேறு எத்தகைய மோசமான வழி இருக்க முடியும்" என்று எண்ணினேன். அது எவ்வளவு மரணத்தை நோக்கிய தேடலாக இருக்கிறது

36. இப்பொழுது இருக்கிற நம்முடைய உலகம் எவ்வளவு துக்ககரமான நிலையிலிருக்கிறது. என்பதை நான் காண்கிறேன். அது எல்லாப் பக்கங்களிலிருந்தும் கெட்டுப் போய் இருக்கிறது, அது மறுபடியும் இருந்த நிலைக்குத் திரும்ப வருவதற்கு எந்த வழியும் கிடையாது, ஆகையால் இந்நாட்களில் நாம் என்ன செய்துகொண்டிருக்கிறோம் என்பதைக்குறித்து நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். ஏனென்றால் இப்பொழுது நாம் ஒரு பெரிய துயரச் சம்பவத்தினிமித்தம் துக்கம் கொண்டிருக்கிறோம். மேலும் அது மிகப்பெரிய சம்பவங்களில்... இதுபோன்ற காரியம் அமெரிக்காவில் நடைபெறும் என்று நாம் ஒருபோதும் நினைத்துக்கூட பார்க்கவில்லை, ஆனால் எப்படியாயினும் அது இங்கேயே நடந்துவிட்டது. சுவிஷேத்தின் காரியத்தில் நம்மிடத்தில் ஏற்பட்ட தளர்ச்சியினிமித்தம் அது இத்தகைய காரியங்களினால் புழு அறிக்கப்பட்டு கெட்டு போயிருக் கிறது. அது இன்னும் மோசமாகவே போகும். அது தொடர்ந்து மேலும் மேலும் மோசமடைந்து கொண்டே போகும் என்பதில் எந்த சந்தேகமும் என் சிந்தையில் இல்லை.

37. ஆனால் இந்த கிறிஸ்துமஸ் காலத்தில் நாம் இந்தப் பொருளுக்கு வருவோம், இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இயேசு கிறிஸ்து வந்தபோது உலகம் இருந்த அதே நிலையிலேயே இன்றைய உலகமும் இருக்கிறதென்பதை

காண்கிறோம். அப்பொழுதிலிருந்து உலகம் பெரிதாக மாறவில்லை. ஏனென்றால், இந்த, உலகம் விழுந்து போவதை அந்த கிறிஸ்மஸ் கண்டது. அதை ஒன்றை பற்றிப்பிடித்து நிறுத்தி உதவி செய்வதற்கு ஒரு மேசியாவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இன்றும் ஏறக் குறைய அதே நிலைதான். நாமும் அதே காரியத்தையே செய்து கொண்டிருக்கிறோம். உலகம் மறுபடியும் விழுந்து கொண்டிருக்கிறது.

38. இப்பொழுது, அது இங்கே அமெரிக்காவில், மட்டுமல்ல, உலகமெங்கும் அதே நிலைதான். நீங்கள் எங்கு சென்றாலும் அவ்வாறு இருக்கிறது, மத சம்பந்தமான உலகம், அரசியல் உலகம் மற்றும் எல்லாமும் –தார்மீக உலகம் (ஒழுக்கத்தின் உலகம் அது இனி இல்லை என்றே சொல்லலாம். அது சற்றே... ஒழுக்கம் என்பது நல்ல ஜனங்களிடத்தில் மட்டுமே எஞ்சியிருக்கிறது. அத்தகைய வர்களை கண்டுபிடிப்பதும் அரிதாயிருக்கிறது. அது வெட்கக்கேடானது. அரசியல் மற்றும் எல்லாமும் சீர்கெட்டு போயிருக்கிறது. முழுமையும் வியாதிப்பட்டும், அழுகிப் போன புண்களாக, தலையில் இருந்து கால் வரைக்கும், முழு உலகமே அப்படியாய் நாற்றம் எடுக்கிறது. நம்முடைய அரசியல் அமைப்பு, நம்முடைய மதங்களின் அமைப்பு, நம்முடைய ஒழுக்க முறைமை, நாம் பெற்றிருந்த எல்லாமும் போய்விட்டது! இனி அவற்றை ஒன்றாய் சேர்த்துக்கொண்டு வருவதற்கு ஒருவழியும் கிடையாது. அவள் அவ்வளவுதான் முடிந்துபோய்விட்டாள்!... நாம் சாலையின் முடிவிற்கே வந்துவிட்டோம். (நம்முடைய பயணத்தின் முடிவில் இருக்கிறோம்) அதற்கு மேலாக ஒன்றுமில்லை.

39. நாம், இதைக்குறித்து நீண்ட காலமாக பேசி விட்டோம் என்பதை நான் அறிவேன், ஆனால் இந்நாட்களில் ஒன்றில் இவற்றை குறித்து பேசுவதற்கான

காலம் ஒரு நாள் கடந்து போய்விடும். அது ஒரு சரித்திர நிகழ்வாகப் போகிறது. இந்த நேரத்தில் நாம் விழிப் பாயிருந்து கவனிக்கவில்லை என்றால், நாம் வெளியில் நிற்கிறவர்களாக காணப்படுவோம்.

40. நான் அதிசயிருக்கிறேன், நாம் இந்த கிறிஸ்துமஸ் ஸில் அவர் இரண்டாயிரம் ஆண்டுக்குமுன் செய்தது போலவே, தேவன் அவரை அனுப்புவாரானால், இந்த 1964-ல் அவர் நம்மிடத்தில் அவரை அனுப்புவாரானால், அன்று அவர்கள் அவருக்குச் செய்ததுபோலவே, நாமும் அவருக்கு செய்யாமல் இருப்போமா என்று நான் வியப்படைகிறேன். மேலும் அவருடைய வருகையின் போது, அரசியல் உலகத்திலேயோ அல்லது மத சம்பந்த மான உலகத்திலேயோ அவர் அந்நாளில் பெற்ற வரவேற்பை விட இன்று அதிக வரவேற்பை பெறுவாரா என்று வியப்படைகிறேன். அவர் அந்நாளில் வந்தபோது இருந்ததை விட இன்று அவரை ஏற்றுக்கொள்ள தகுதியான நிலையிலிருக்கிறோமா என்றும் நான் வியப்படைகிறேன். ஆனால் அவர் புறக்கணிக்கப்பட்டார் என்பதை நாம் அறிவோம்.

41. அவர் வருவாரானால் அவருக்கு நாம் என்ன செய்வோம்? ஒருவேளை நான் அடிப்படையாக கொண்டி ருக்கிற இந்த மார்க்க சம்பந்தமான உலகம், முன்பு அவருக்கு செய்ததுபோலவே, இப்போதும் அவருக்கு செய்யும். அவர்களால் முடிந்தால் அவரை சிலுவையில் அடித்து விடுவார்கள் (அவர்களில் எந்த மாற்றமும் இல்லை). அந்நாளில் அவர்கள் செய்த அதே காரணத்தினிமித்தமே.

42. அவர்கள் ஏன் அதைச் செய்தார்கள் ? அவர்களை இரட்சிக்கவும், மிகவும் குழப்பம் நிறைந்த இந்த உலகத்தில் இருந்து அவர்களை விடுவிக்கவும், அவர் பூமிக்கு வரவேண்டும் என்று ஜெபித்துக் கொண்டிருந்த அந்த

ஒருவரையே அவர்கள் சிலுவையில் அறைந்தார்கள்? அவர்களுக்கு இருந்த ஒரே நம்பிக்கையை சிலுவையில் அறைந்தார்கள், ஏன்? அவர்கள் ஏன் அதைச் செய்தார்கள்? ஏனென்றால், தேவன் அவர்களுடைய ஜெபத்திற்கு பதிலளிக்கும்போது, அவர்கள் எதிர்பார்த்தபடி அவர் களுக்குப் பதில் அளிக்கவில்லை, அவர் வரும்போது அவர்களுடைய வேதசாஸ்திரத்தின் விருப்பத்தின்படி அவர் ஒருபோதும் அவ்வாறு வரவில்லை.

43. இன்று, அவர் மறுபடியும் வருவார் என்றால், அவர் அதே விதமாகவே வருவார். உலகத்தின் ருசிக்கேற்பவோ, வேதசாஸ்திர ருசிக்கேற்பவோ அல்லது அவர்கள் அவரைக்குறித்து எண்ணுகிற விதத்தின் படியே வர மாட்டார். இவைகளுக்கு அப்பாற்பட்டவராகவே வருவார். அவர் எப்பொழுதும் தேவனாகவே வருவார். ஜனங்கள் உபத்திரவத்தில் அகப்பட்டு ஜெபிக்கும்போது, தேவன் அவர்கள் கேட்டுக்கொண்டதை கொடுக்கிறார். ஆனால் அவர்களுக்கு நன்மையாயிருக்கிற விதத்தில் அதைக் கொடுக்கிறார். அவர்களோ அதை ஏற்றுக்கொள்வதில்லை, அது தாங்கள் நினைத்த படி வராத காரணத்தினால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். தேவனு டைய அபிஷேகம் பெற்ற வார்த்தையை புறக்கணித் தார்கள். மேலும் அவர் வார்த்தையாகவே இருக்கிறார்.

44. இப்பொழுது, தேவன் எல்லா யுகங்களிலும், எல்லா காலங்களிலும், எல்லா நேரங்களிலும், அவர் தொடங்கும் போது, "பூர்வ காலங்களிலும் தீர்க்கதரிசிகள் மூலமாக, காலாகாலமாக அவர் அவருடைய வார்த்தையை திருவுளம் பற்றினார், இந்தக் கடைசி நாட்களில் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாக திருவுளம் பற்றுகிறார்," அந்தத் தீர்க்கதரிசனங்கள் ஒவ்வொன்றும், ஒவ்வொரு காலத்திற்கும் பொருந்துவதாக இருந்தது என்பதை நாம் கண்டோம். இராஜாவாகிய நேபுகாத்நேச்சர்

இந்தச் சொப்பனத்தைக் கண்டதுபோல, புறஜாதி உலகம் தலையில் இருந்து பாதம் வரைக்கும் அதைப் பற்றி அறிந்தது; தானியேல் அந்தச் சொப்பனத்திற்கு வியாக்கி யானம் கொடுத்தான்; அதுஒரு - முழு உலகத்திற்கும் உரிய ஒரு தீர்க்கதரிசனமாக இருந்தது, அது மாறாததாய், புறஜாதி இராஜ்யத்தின் ஒவ்வொரு பாகமும் எப்படி அது தலையில் இருந்து பாதம் வரைக்கும் எவ்வாறு தொடர்ந்து வரும் என்பதை வெளிப்படுத்துகிற தீர்க்கதரிசனமாயிருந்தது. மேலும் ஒவ்வொரு காலத்திலும் தொடர்ந்து சம்பவிக்க வேண்டிய காரியங்களை குறித்து தீர்க்கதரிசிகள் எப்பொழுதும் வார்த்தைகளை பேசியிருக் கிறார்கள். தேவன்..

45. ஜனங்கள் இடுக்கண்ணில் அகப்படும்போது, தேவன் அவர்களுக்குப் பதில் அளிக்கிறார். அவர் ஒரு அபிஷேகம் பண்ணப்பட்ட தீர்க்கதரிசியை அனுப்புகிறார் அல்லது ஒருவகையான செய்தியாளனை அனுப்புகிறார், ஏனென்றால் அந்தக் காலத்திற்கென்று தேவன் நிர்ணயிக்கப் பட்ட அவருடைய வார்த்தையிலிருந்து அவர் பின்வாங்க முடியாது, ஆனால், அவர் என்ன செய்கிறார் என்றால் அந்தக் காலத்திற்கான வார்த்தையை ஜீவிக்கும்படி செய்ய அவர் ஒரு செய்தியாளனை அனுப்பி அந்தப் பாகத்தை நிறைவேற்றுகிறார். எப்பொழுதும் அதை அவ்வாறே செய் கிறார், பாருங்கள். தொடக்கத்தில் அவர் அவருடைய வார்த் தையை உருவாக்கினார். தொடக்கத்தில் இருந்து முடிவு வரைக்கும் உள்ளவைகளை அவர் அறிவார். அவர் தம்முடைய வார்த்தையை உரைத்தார். ஒவ்வொரு காலத்திலும், அவர்கள் இடுக்கண்ணில் அகப்படும்போது, அவர்கள் ஜெபிப்பார்கள், அப்பொழுது தேவன் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவரை அனுப்புவார். அபிஷேகம் பண்ணப்பட்ட அந்த ஒருவர், அந்தக் காலத் திற்கு என்று முன்னுரைக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை முற்றிலுமாக ஜீவிக்கச் செய்வார். எல்லாக் காலங்களிலும்

அவ்வாறே அவர் செய்கிறார். தேவன் அவருடைய திட்டத்தை ஒருபோதும் மாற்றுவதில்லை. இப்போது தேவன் மாறுகிறார் என்பதை நாம் ஒருபோதும் கண்டதில்லை.

46. ஒரு சமயம் தேவன் அதற்கு தீர்வு கண்டார், மனிதனை எவ்வாறு அவர் இரட்சிக்கப் போகிறார், அது ஏதேன் தோட்டத்தில், சிந்தப்பட்ட இரத்தத்தின்கீழ் இருந்தது, அத்தி இலைகளில் இருந்து தொடங்கி கல்வி, உளவியல், ஸ்தாபன முறைமைகள், இன்னும் பலவகையான முறைகள் மற்றும் எல்லா வழிகளையும் முயற்சித்தோம். அவை ஒவ்வொன்றும் புறக்கணிக்கப்பட்டது. அது ஒரு போதும் கிரியை செய்ததில்லை. இனியும் செயல்படாது. தேவன் மனிதனை சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழாக மட்டுமே சந்திக்கிறார், அந்த ஒரு இடமே அவனை அவர் சந்திக்கும் இடமாகும், ஏனென்றால் அதுவே அவருடைய முதல் தீர்மானமாயிருந்தது. அவர் ஒருபோதும் ஒழுக்கநெறி சார்ந்த முறைமையின்படி மனிதனை சந்திக்க மாட்டார். அவர் ஒருபோதும் அவ்வாறு செய்வதில்லை, செய்ததும் கிடையாது, உலகத்தில் எந்த வழியும் கிடையாது; தேவன் துவக்கத்தில் கூறிய வழிக்கே சரியாக வரவேண்டும், அவர் முதலில் கூறியது அதுவே. அவர் எல்லையற்றவராயிருக்கிறார், அவர் மாறமுடியாது, அவர் எப்பொழுதும் மாறாத வராய் இருக்கிறார். அங்குதான் அவர் மனிதனைச் சந்திக்கிறார், அந்த ஒரு இடத்தில்தான். அதன் காரணமாகவே இன்று நம்மால் ஐக்கியம்கொள்ள முடியவில்லை, அதன் காரணமாகவே சபை மிகவும் பிரிந்திருக்கிறது, ஏனென்றால் ஒவ்வொன்றும் ஒரு கோட்பாட்டின் அடிப் படையில் பிரிந்துக்கிடக்கிறது, அவ்வாறு அவர்கள் தங்களைப் பிரித்துக்கொள்ளும்போது, அதன்பின் தேவன் அவர்களை கவிழ்த்துப் விடுகிறார், அவர் இரத்தத்தின் கீழேயே சந்திக்க விரும்புகிறார், அங்கே சிலுவையண்டை யில் நாம் எல்லாவற்றையும் பொதுவாக வைத்துள்ளோம், அதுவே தேவன் அதைச் செய்வது தேவனுடைய ஒரே

நோக்கமாக இருக்கிறது! தேவன் எப்பொழுதும் அவருடைய வார்த்தையை அனுப்புகிறார்.

47. இன்று உலகம் அந்நாளில் எப்படி இருந்ததோ அப்படியே இருக்கிறது என்பதை காண்கிறோம். அதைப் பார்க்கும்போது, அதனுடைய அரசியலமைப்பு, மற்றும் எல்லாமும், எல்லாமே விழுந்துகொண்டிருக்கிறது, அவை எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து பற்றி நிறுத்துகிற ஒரு மேசியாவை அது எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது .

48. இப்பொழுது, மேசியா என்ற சொல்லின் பொருள் என்னவென்றால், "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்ப தாகும், அபிஷேகம் பண்ணப்பட்ட ஏதோஒன்று. தேவன்! இது இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்படுத்துதலாய் இருக்கிறது, முழுப்புத்தகமும் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதலாகிய, ஏழு முத்திரைகளால் முத்திரை யிடப்பட்டுள்ளது. இயேசு கிறிஸ்து ஆதியாகமத்தில் இருந் தார். இயேசு கிறிஸ்து புத்தகத்தின் மத்தியிலும் இருந்தார். கிறிஸ்து யாத்திராகமத்திலும் மற்றும் ஆதியாகமத்திலும் இருந்தார், அவர் புத்தகத்தின் மத்தியிலும் இருந்தார் மற்றும் புதிய ஏற்பாட்டிலும் - அவர் இருந்தார், வெளிப்படுத்தின விசேஷத்திலும், கடைசி வரையிலும் அவர் "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராக" இருக்கிறார். அனைத்துமே தேவன்!

49. "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனோடு இருந்தது, அந்த வார்த்தை தேவனாக இருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி நம்மத்தியில் வாசமாயிருந்தார்.

50. "பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும், வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம்பற்றின தேவன்," தேவனுடைய வார்த்தை தீர்க்க தரிசிகளுக்கு வரும்போது, அவர்களுக்கு மட்டுமே வரு கிறது, ஏனென்றால் அவர்கள் வார்த்தையினால்

அபிஷேகம் பண்ணப்பட்டவர்களாய் இருக்கிறார்கள், இருந்தார்கள், வார்த்தையை வியாக்கியானம் செய்ய அவர்களுக்கே உரிமை இருந்தது. தேவன் அவர்கள் மூலமாக கிரியை செய்து, அந்த வார்த்தை சத்தியம் என்பதை நிரூபித்தார். நான் அவ்வாறு இருந்தால்... உங்களில் ஒருவன் ஆவிக்குரியவனாக இருந்தால், அல்லது ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தால், கர்த்தராகிய நான் என்னை அவனுக்கு அறியப்பண்ணுவேன். அவன் சொன்னது நிறைவேறுமானால், அப்பொழுது அவனுக்குச் செவிகொடுங்கள். அது நிறைவேறவில்லை என்றால்,அவனுக்குச் செவிக்கொடாதிருப்பீர்களாக," எந்த மனிதருக்கும் அதைவிட சிறந்த காரணம் எதுவும் இல்லை.

51. இப்பொழுது நாம் இங்கு இந்தக் கடைசி நாட்களில், கர்த்தர் மறுபடியும் வருவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற வேளையில் இருக்கிறோம் என்பதை காண்கிறோம். .

52. நல்லது, இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் எனக்கு ஞானஸ்நானம் கொடுத்த அந்த வயதான பாப்டிஸ்ட் பிரசங்கியாரை நினைவுகூறுகிறேன், அப்பொழுது நான் சிறுவனாக இருந்தேன். யோவான் ஸ்நானனைக் குறித்து, அந்தப் பொருளில் என்னுடன் கலந்துரையாடுவார். "சகோதரன் பில்லி", என்று அவர் என்னை அழைத்து, "யோவான் அப்பொழுது... அவர் இப்பொழுது எனக்கு இடம் கொடு" என்று அவர் சொன்னபோது, பின்பு அவருக்கு இடம் கொடுத்தான். "பின்பு யோவான் ஞானஸ்நானம் கொடுத்தார்... இயேசு யோவானுக்கு ஞானஸ்நானம் கொடுத்தார், ஏனென்றால் யோவான் ஒருபோதும் ஞானஸ்நானம் எடுத்துக்கொள்ளவில்லை, ஆனாலும் அவர் ஞானஸ்நானத்தைக்குறித்துப் பிரசிங்கித்தார்", என்று அவர் கூறினார். நல்லது, அது எப்பொழுதும் சிறிதளவு எனக்குத் வியப்பாய் இருந்தது.

53. அதன்பிறகு, இங்கே, நீண்ட நாட்களுக்கு முன்பாக அல்ல, அது எனக்கு வெளிப்படுத்தப்பட்டது, இந்த வழியாக, அந்தக் குளத்திலே அவர்கள் சந்தித்தபோது அந்த தண்ணீர் நிறைந்த இடத்திலே, உலகம் ஒருபோதும் கண்டிராத மகத்தான செய்தியாளர்கள் சந்தித்தார்கள்: "ஒருவர் – எல்லாத் தீர்க்கதரிசிகளுக்கும் மேலான ஒரு மனிதன், அது யோவான். ஏனெனில் "ஸ்திரியினிடம் பிறந்த வர்களில், அவனை விட, பெரியவன் ஒருவனும் எழும்புன தில்லை". மற்றொருவர் மாம்ச சரீரத்தில் வெளிப்பட்ட தேவனே ஆவார். இருந்தார். மேலும் நினைவுகூறுங்கள், "கர்த்தருடைய வார்த்தை தீர்க்கதரிசியினிடத்தில் வருகிறது" என்று வேதாகமம் நமக்கு கூறுகிறது. வார்த்தை மாம்ச மானபோது, இங்கு தீர்க்கதரிசி தண்ணீரில் நின்று கொண்டிருந்தான். வார்த்தையும் தீர்க்கதரிசியும் ஒன்றாக சந்தித்து கொண்டனர். அவர்கள் ஒருவரை ஒருவர் அறிந்திருந்தனர்; அது சரியா. வார்த்தை தானே, மாம்சமாக, தேவனுடைய குமாரனாக அவதரித்து தீர்க்கதரிசியினிடத் தில் தண்ணீரில் வந்தார்.

54. "நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டிய தாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா?" என்று தீர்க்கதரிசி கேட்டான் .

55. அதற்கு அவர், "இப்பொழுது இடம்கொடு, இப்படி எல்லாம் நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக் கிறது" என்றார்.

56. கவனியுங்கள்! யோவான் ஒரு தீர்க்கதரிசியாய் இருந்து, அவர்தான் பலியாக ஒப்புக்கொடுக்கப்போகிறவர் என்பதை அறிந்திருந்தான். பலி செலுத்தப்படும் ஆடு, பலி செலுத்தப்படுவதற்கு முன் கழுவப்படவேண்டும். அதன் காரணமாகவே அவர் ஞானஸ்நானம் பெற வேண்டியதாய் இருந்தது.

57. ஓ, இன்று, நம்முடைய நாட்களுக்கென்றுள்ள எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு உகந்ததாய் இருக்கிறது. அந்த வேளை இங்கு வந்துவிட்டது. இந்த நாட்களில் என்ன சம்பவிக்க வேண்டும் என்பதை வேதாகமம் நமக்குக் கூறுகிறது. இந்நாளிலே என்ன நடைபெறும் என்று வேதாகமம் உரைக்கிறது என்பதை நாம் அறிந் திருக்கிறோம். இவைகள் எல்லாம் சம்பவிக்கும் மட்டும், நாம் தேவனைச் சார்ந்து இருப்பது நம்மைப் பொறுத்தது. இதுதான் அந்தநேரம்! நாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற, நமக்கு விடுதலை அளிக்கக்கூடிய அபிஷேகம் பெற்ற வருக்காக ஜெபியுங்கள், ஏனென்றால் தேவன் அதை வாக்குத்தத்தம் செய்துள்ளார்.

58. அங்கே, அவர்கள் தேவனுடைய அபிஷேகம் பெற்ற வார்த்தையைப் புறக்கணித்தார்கள், ஆகவே அது விழவேண்டும், விழுந்துபோயிற்று. இந்த நேரத்தில், நாம் மறுபடியும் பார்க்கிறோம், அது மறுபடியும் விழுந்து கொண்டிருக்கிறது. நான் கண்டது, நான் கூறினதுபோல, நம்முடைய அரசியல் கெட்டுபோயிருக்கிறது, நம்முடைய சபை ஜீவியம் கெட்டுபோயிருக்கிறது, என்ன நடந்தது? இதுவே அதற்கு காரணம். நீங்கள் எப்பொழுதாவது, தேவனுடைய திட்டத்தைவிட்டு விலகி செல்லும்போது, அங்கே அழிவை காண்பீர்கள். அது நிலைத்து நிற்காது, தேவனுடைய வார்த்தை தவறாததாயிருக்கிறது. அந்த ஸ்தானத்தை வேறொன்றும் எடுக்க முடியாது. ஒருபோதும் முடியாது.

59. நம்முடைய கல்வி அமைப்பு, நம்முடைய ஸ்தாபனங்களின் முறைமை, இவைகள் எல்லாம் பரிசுத்த ஆவியின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, சபையை நடத்திச் செல்கிறது. ஊழியகாரர்களுக்கு கொடுக்கப்படும் நம்முடைய பெரிய சிறந்த பயிற்சிகளும், மற்றுமுள்ள காரியங்கள், பரிசுத்த ஆவியின் இடத்தை எடுத்துக்

கொண்டுவிட்டது. முழுஇரவு ஜெபக் கூட்டங்கள், தேவனுக் கென்று அடைவதற்குள்ள பழங்காலத்து வழிகளை நாம் கொண்டிருந்தோம். இப்பொழுது, பிரசங்கியார்களை உடையவர்களாய் இருப்பதற்குப் பதிலாக, பேராசிரியர்களை உடையவர்களாய் இருக்கிறோம். வார்த்தையை நன்றாக அறிந்தவர்கள், அவர்கள் அங்கே உட்கார்ந்து, அதை ஒரு விதமாய் ஒன்றுசேர்த்து விளக்கும்போது அது மற்றவர்கள் வியக்கும்வண்ணம் பிரசங்கம் செய்வார்கள். அவர்களால் என்ன செய்யமுடியும் என்பதைக் காட்டுவார்கள். அவர்கள் அதன் இயங்குமுறையை (Mechanics) தெரிந்தவர்களாக இருப்பார்கள், ஆனால் அவைகள் செயல்படுத்தும் வல்ல மையை (Dynamics) கொண்டிருக்கவில்லை. செயல்படுத்தும் மகத்தான வல்லமை நமக்கு வேண்டும். அந்த இயங்கு முறையைப் பற்றி நான் கவலைப்படவில்லை; செயல் படுத்தும் வல்லமையையே அறிய விரும்புகிறேன். அது என்ன செய்கிறது?

60. வெளியே ஓடிக்கொண்டிருக்கும் அந்த வாகனம் எவ்வாறு இயங்குகிறது என்பதை நான் அறியேன். அதிலே பிஸ்டன்களும் சிலிண்டர்களும் இருக்கின்றன. அது எவ்வளவு அழுத்தத்தைப் பயன்படுத்துகிறது என்பது எனக்குத் தெரியாது. நான் அறிந்திருப்பதெல்லாம் ஒன்றே ஒன்றுதான், அது செயல்படுத்தும் வல்லமையாகும். (Dynamics) அதுவே அதை இயங்கச் செய்கிறது.

61. அதை தான் நாம் அறிந்திருக்கிறோம். தேவன் வாக்குத்தத்தம் செய்துள்ளார், "மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன், அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லு வார்கள்" அதை அவர் எவ்வாறு செய்யப் போகிறார்? நான் உங்களுக்கு அதைக் கூறமுடியாது. தேவனுடைய திட்டத்தின் செயல்படுத்தும் வல்லமை எவ்வாறு கிரியை

செய்கிறது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதுவே முக்கியமான காரியம் ஆகும்.

62. இன்று நாம் இயங்கு முறையை குறித்து அவ்வள வாய் ஆராய்ந்திருக்கிறோம். எல்லாமே இயந்திரத்தனமாக ஆகிவிட்டது. அதை இயக்குவதற்கான ஏதாவது ஒன்று இல்லாவிட்டால், ஒரு வாகனத்தினால் என்ன பயன்? மின்சாரம் அதற்குள் செல்லவிட்டால் விளக்குகளினாலோ அல்லது அவற்றின் சாதானங்களினாலோ என்ன பயன்? பாருங்கள், எல்லாவிதமான இயங்குமுறைகளையும் நாம் பெற்றுள்ளோம், நாம் பள்ளிகளைக் கொண்டுள்ளோம், கற்றுக்கொடுப்பவர்கள், மற்றவர்களையும் கொண்டுள் ளோம், அவர்களால் ஒரு மனிதனுக்கு பயிற்சியைக் கொடுத்து, எல்லா கண்ணியமான தோற்றத்துடன் பிரசங்கப் பீடத்தில் நின்று சிறந்த தங்குதடையற்ற பேச்சாளனாக இருக்குமளவு பயிற்சியைக் கொடுக்க முடியும். அப்படி யிருந்தும், அது தேவனுடைய வல்லமையை கொண்டு வராது. வழக்கமாக சபையில் இருந்த தேவனுடைய வல்லமை எங்கே? சபைகள் மூலமாக பாய்ந்தோடிய பெந்தேகோஸ்தே ஆசீர்வாதம் எங்கே? நம்முடைய உலகம் விழுந்து கொண்டிருக்கிறது, அதுதான் காரணமாகும், ஏனென்றால், தேவனுடைய உண்மையான மூல விதிகளை விட்டு நாம் தூரம் போய் மனிதர்களுக்கு கல்வி கற்பித்து முறைமைகளுக்குள்ளும் மற்ற காரியங்களுக்குள்ளும் கொண்டு வந்துவிட்டோம். அதுவே இன்று நாம் இருக்கிற இந்த நிலைக்கு காரணமாயிருக்கிறது. நம்முடைய உலகம் விழுந்துகொண்டிருப்பதற்கான காரணம் அதுவே என்று நான் விசுவாசிக்கிறேன்.

63. இந்த நீண்ட தொடர்கதை நோவாவின் காலத்தி லிருந்தே பூமியில் இருக்கிறது. தேவன்... நோவாவைக் கொண்டிருந்தபொழுது, அந்தத் தீர்க்கதரிசி நீதியுள்ள தீர்க்கதரிசியாக இருந்தான், அவருடைய செய்தியுடன்

சென்றுக் கொண்டிருந்தார், அந்த நாட்களில் அங்கே ஒழுக்கக் கேட்டின் தொடர்கதை சென்றுக்கொண்டிருந்தது. பரிசுத்த வேதாகமம் கூறுகிறபடி "புசித்தும், குடித்தும், பெண்கொண்டும், பெண்கொடுத்தும்" இருந்தது. அந்நாட்களில் அவர்கள் பெருந்தீனிக்காரர்களாகவும், மற்றும் ஒழுக்கக் கேடானவைகள், இன்னும் அதுபோன்ற, மற்றவைகளும் அந்நாட்களில் பெருகியிருந்ததை நாம் காண்கிறோம். அப்பொழுது அதன்பிறகு உலகம் விழுந்து போயிற்று. ஏனென்றால் அந்த நாளுக்குரிய தேவனுடைய செய்தியை ஜனங்கள் புறக்கணித்தார்கள். நோவா தேவனால் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாய் இருந்தான். தேவனிடத்திலிருந்து ஒரு செய்தியுடன் தேவனால் அனுப்பப்பட்டிருந்தான், அவன் நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன்பாக ஜனங்களுக்கு எச்சரிப்பை கொடுத்தான். ஆனால் அவர்களோ பரியாசம்செய்து சிரித்து, அதை கேளிக்குரிய தாய் ஆக்கினார்கள், ஏளனம் பண்ணினார்கள். அந்நாளில் முழு உலக அமைப்பும் விழுந்துபோனது, அவர்கள் சமுத்திர நீருக்கு கீழாக மூழ்கிப்போனார்கள். அது சரியா. ஏன்? அந்த மணிநேரத்திற்குரிய செய்தியை அவர்கள் புறக்கணித்தார்கள்.

64. அதே காரியம் எகிப்திலும் சம்பவித்தது என்பதை நாம் காண்கிறோம். மோசே இஸ்ரேல் புத்திரரை வெளியே அழைத்துக்கொண்டு போனபோது, முழு எகிப்திய முறையும் கெட்டுப்போயிருந்தது. இப்பொழுதும், அதே காரியம் மறுபடியும் நிகழ்ந்ததை காண்கிறோம். தேவன் அவருடைய வார்த்தைக்காக, அபிஷேகம் பண்ணப்பட்ட செய்தியாளனை அனுப்பினபோது, அவருடைய வார்த்தையை அது நிறைவேற்றுவதாக இருந்தது.

"அது அவருடைய வார்த்தையை நிறைவேற்றுவதற்காகவா இருந்தது?" என்று நீங்கள் கேட்கலாம்.

65. ஆபிரகாமினிடத்தில் அவர் இதையே செய்வேன் என்று கூறியிருந்தார். ஆகையால் அந்த நேரத்தில், அவர்களுக்கு முன்பாக அந்த வார்த்தையை ஜீவிக்கச் செய்வதற்கு யாரோ ஒருவர் காட்சியில் வரவேண்டிய தாயிருந்தது. தேவன் அவருடைய மோசேயை அங்கே அனுப்பினார், அவர் செய்வேன் என்று வாக்களித்த அதே காரியத்தைச் செய்வதற்கு, அவன் (மோசே) அதைச் செய்தான், ஏனென்றால் அந்த மணிநேரத்திற்குரிய அபி ஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையாக இருந்தான். அது (அந்த வார்த்தை) உலகத்தை நியாயம் தீர்க்கும் என்று சொன்னார். "நான் அந்த ஜாதியை வல்லமையுள்ள அற்புதங்கள் மற்றும் அடையாளங்களைக் கொண்டு நியாயம் தீர்ப்பேன்" என்று தேவனுடைய வார்த்தை சொல்லிற்று.

66. அங்கே ஒரு மனிதன் நின்றான். உங்களையோ, என்னையோ போன்ற ஒரு சாதாரண மனிதன். அவன் தேவனிடமிருந்து வார்த்தையை பெற்றுக்கொண்டு, வெளியே சென்று அவன் சிருஷ்டிப்பை பேசியபோது, அது காட்சியில் தோன்றியது. அங்கே அவன் மணலைக் கையில் எடுத்து "பூமியிலிருந்து வண்டுகள் உண்டாகக் கடவது" என்று சொன்னார். தேவனுடைய வார்த்தை, அந்தத் தீர்க்கதரிசியின் வாயின் மூலமாக, அது எப்பொழுது உரைக்கப்பட வேண்டுமோ, அந்த சரியான நேரத்தில், உரைத்தபோது வண்டுகள் பூமி முழுவதையும் நிரப்பிற்று. அவர் தவளைகளாலும், பேன்களாலும், அதை மூடினார். அவர் எல்லா வகையான – வாதைகளினாலும் வாதித்தார். ஏனென்றால், தேவன் வாக்குத்தத்தம் பண்ணி யிருந்தார், அதை அபிஷேகம் பண்ணுவதற்கான நேரம் அங்கே இருந்தது. அவர்கள் வாழ்ந்து வந்த அந்த, மணி நேரத்திற்குரிய அபிஷேகம் பெற்ற வார்த்தையாயிருந்தது.

67. அதுதான் நமக்கு இன்று தேவையாயிருக்கிறது, ஏதோ ஒரு வேத கல்லூரி முறைமை அல்ல, ஆனால் நாம் வாழ்கிற இந்த மணிநேரத்திற்குரிய அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையே நமக்குத் தேவை, அது இயேசு கிறிஸ்துவை மறுபடியும் உலகத்திற்குக் கொண்டு வரும். "நேற்றும், இன்றும், மாறாதவராய் இருக்கிறார்." இந்த நாளுக்கென்று ஒரு ஒரு திட்டம் இருக்கிறது, தேவனுடைய ஒரு வாக்குத்தத்தம் உண்டு. நாம் சரியான நிலைக்குள் வருவதற்கான ஒரே ஒருவழி, அந்த வார்த்தை அபிஷேகம் பண்ணப்பட நாம் அனுமதிக்க வேண்டும். அது சரியா. எல்லா நேரங்களிலும் அவ்வாறே நடந்து வந்துள்ளது, ஆம்.

68. மிகப்பெரிய ஒழுக்கக்கேடு நேபுகாத்நேச்சாரின் நாட்களில் நடந்தது என்பதை நாம் பார்த்தோம். தேவன் ஒரு அபிஷேகம் பெற்ற மனிதனை வைத்திருந்தார். சுவற்றில் கையெழுத்து தோன்றினபோது, அதை வாசிக்கும் படி ஒரு மனிதனை அவர் (தேவன்) கொண்டிருந்தார்.

69. லோத்தின் நாட்களிலும், சோதோமின் நாட்களிலும் இருந்தது போல உலகம் மறுபடியும் விழுந்துகொண்டிருக் கிறதை நாம் பார்க்கிறோம். அவர்களிலிருந்து யாரை இரட்சிக்க முடியுமோ அவர்களை தேவன் இரட்சித்தார்.

70. இயேசு கிறிஸ்துவின் நாட்களில், மனிதர்களால் உருவாக்கப்பட்ட கோட்பாடுகள் உலகத்தைப் பற்றிப் பிடித்து, அந்தவிதமான நிலைக்கு உட்படுத்தியது என்பதை நாம் பார்க்கிறோம், மேலும் அந்நாட்களில் இருந்த அரசியல் அமைப்பு எல்லாம் முழு உலகமும் விழுந்து போகும் நிலைக்கு வந்தது. அந்த முதல் கிறிஸ்மஸ் காலத்திலே.

71. இப்பொழுதும், நாம் அந்த காரியத்தையே செய் திருக்கிறோம். வார்த்தையிலிருந்து பின்வாங்கி முறைமைப் படுத்தப்பட்ட மதத்தினால் தேவனுடைய வார்த் தையைக்

சீர்குலைந்து விட்டோம். அனைத்தும் விழுந்து போகும் அளவிற்கு வந்துவிட்டதை நாம் காண்கிறோம். இப்பொழுது அந்த முறைமைகளில் ஒன்றை நாம் சார்ந்திருக்க முடியுமா? எந்த ஒரு முறைமையினடத்தில் நாம் சேரமுடியும், மெத்தடிஸ்ட், பாப்டிஸ்டு, பிரஸ்பிட் டேரியன், அல்லது பெந்தேகோஸ்தே முறைமையா, எதில் சேர முடியும்? நம்மால் ஒன்றும் செய்ய முடியாது, இந்த மணிநேரத்திற்கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அபிஷேகம் பண்ணப்பட்ட, வார்த்தைக்குத் திரும்ப வருவதை தவிர, நாம் வேறு ஒன்றும் செய்ய முடியாது. இந்த ஸ்தாபன முறைமைகள் பலவீனமாக உள்ளது, அவைகள் நிலைத்திருக்க முடியாதவை. அவைகள் அனைத்தும் மனிதனால் –உண்டாக்கபட்ட முறைமைகள், அவைகள் உங்களை இரட்சிக்கமாட்டாது. அவைகளுக்குள் ஜீவன் இல்லை. தேவனுடைய வார்த்தையில் மட்டுமே ஜீவன் உண்டு. அதுவே ஜீவனாயிருக்கிறது.. அவ்வாறு அவர் சொல்லி இருக்கிறார்.

72. அந்நாளில் வழி அப்படியாய் இருக்குமானால், நோவாவின் நாட்களிலும், மோசேயின் நாட்களிலும் நடந்ததுபோல் ஜனங்கள் தங்களுடைய பயணத்தின் முடிவையோ அல்லது இனிமேல் தொடர முடியாத நிலையையோ அடைந்த போது, அவர்கள் ஜெபிக்க தொடங்கினார்கள். தாங்கள் இனிமேல் ஒருபடியும் முன்னே செல்ல முடியாது என்பதை உணரும்போது அவர்கள் ஜெபிக்கத் துவங்கினர். அவர்கள் ஜெபிக்கத் தொடங்கின போது, தேவன் எப்பொழுதும் அதற்கு பதில் அளிக்கிற வராய் இருக்கிறார். அதன்பிறகு இயேசு பிறந்தார்.

73. அந்நாளிலிருந்த உலகம், நான் சொன்னதுபோல, விழுந்துபோயிற்று. ஒவ்வொரு தேசமும் ஒரு மேசியாவை எதிர்நோக்குகிறது, நாம் இன்றைக்கு எதிர்பார்ப்பதுபோல, ரோம் தங்களுக்குள்ளே இருந்து தோன்றக்கூடிய ஒரு

மகத்தான அறிவு பெருத்த நபரை எதிர்பார்த்தது. ஒரு மகத்தான மனிதன் எல்லாவிதமான இராணுவ நுணுக்கங்களை அறிந்த ஒருவன், அவன் சென்று கிரேக்க நாட்டையும், முழு உலகத்தையும் தான் காலடியில் மிதித்து வெள்ளக்கூடியவனாய் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க் கிறது. கிரேக்க நாடும் அப்படிப்பட்டவன் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறது. உலகத்தின் மற்ற பகுதிகளை எவ்வாறு வெற்றிக்கொள்ளலாம் என்பதை அவர்களுக்கு கற்றுக்கொடுக்கும் ஒருவனை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

74. அந்த நாட்களில் யூதமார்க்க உலகம் தங்களுக்கு ஒரு தளபதி வேண்டும் என்று எதிர்பார்த்துக் கொண்டி ருந்தார்கள். பரலோகத்தில் இருந்து ஒரு மேசியா வருவார் என்றும், அவருடைய கரங்களில் ஒரு பெரிய இரும்புக் கோல் இருக்கும் என்றும் எண்ணினார்கள், அவர் வந்து ரோம சாம்ராஜ்ஜியத்தை அடித்து நொறுக்கிக் கீழே தள்ளுவார். தன் கால்களால் பலமாக மிதித்து அவர்களை சமுத்திரத்திற்குள்ளாக தூரத்திவிடுவார் என்று எண்ணி னார்கள். அங்கே இருந்த அனைவரும் அப்படிப்பட்ட ஒரு மனிதனையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர் களுக்கு ஒரு தளபதி வேண்டும் என்று விரும்பினார்கள்.

75. இன்று இருக்கிற எல்லா ஸ்தாபனங்களைப்போலவே நம்முடைய ஸ்தாபனங்கள் ஒரு மாமனிதனை(superman) எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேசமும் ஒரு மாமனிதனை எதிர்பார்க்கிறது. ரஷ்யா தேசம் ஒரு மாமனிதனை எதிர்பார்க்கிறது. கிழக்கத்திய உலகம் அப்படிப்பட்ட ஒரு மனிதனைத் எதிர்பார்க்கிறது. ஐக்கிய நாடுகள் அப்படிப்பட்ட ஒரு மனிதனைத் எதிர்பார்க்கிறது. சபைகளும் அப்படிப்பட்ட ஒரு மனிதனை எதிர்பார்க்கிறது. ஆனால், எப்படிப்பட்ட ஒரு மனிதனைக் காணவேண்டும் என்று அவர்கள் விரும்புகிறார்கள்?

76. ரஷ்யா ஒரு மூளை அறிவால் அபிஷேகம் பண்ணப்பட்ட மேசியாவைக் காண விரும்புகிறது. அவன் எவ்வாறு வெளிமண்டலங்களை ஜெயங்கொள்ள வேண்டும் என்பதை அறிந்தவனாகவும் சந்திரனுக்கு செல்வதில் மற்ற அனைவரையும் முந்திக்கொள்ளவும் அவற்றை அறிந்திருப் பவனாயிருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்பு கிறார்கள். அவர்கள் உலகத்தை ஜெயிக்க விரும்புகிறார்கள். அது தான்...

77.ஆனால், பாருங்கள், இந்தக் காரியங்களை அவர்கள் கேட்கும்போதும், இதை வேண்டிக்கொள்ளும் போதும், இயேசு சொன்னபடி அவர்கள் கேட்பதில்லை. நாம் தேவனை ஒரு வேலைக்கார பையனைப்போல நடத்த முயற்சிக்கிறோம், "கர்த்தாவே. நீர் எனக்காக இதைச் செய்யும்! எனக்காக இதைச்செய்யும்! நீர் அங்கே சென்று அதையும் செய்து முடியும்," என்று அவருக்கே என்ன செய்யவேண்டும் என்று நாம் கட்டளையிடுகிறோம்.

78. நீங்கள் ஜெபிக்கும்போது, இவ்விதமாக ஜெபம் பண்ணுங்கள், "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்ஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் செய்யப் படுவதாக" என்று இயேசு கூறினார். இயேசு கூறிய விதமாக செய்வதை நீங்கள் எங்கே காணமுடியும்? நாம் எப்பொழுதும் தேவன் நமக்காக ஒரு வேலைக்காரனாக வேலைகளை செய்து தர வேண்டும் அல்லது அவர் ஏதாவது நமக்காக செய்யவேண்டும் என்பதையே விரும்பு கிறோம். ஆனால் நாம் "உம்முடைய சித்தமே செய்யப்படக் கடவது" என்று சொல்ல மனதாயிருக்கும் போது, நாம் அவரிடத்தில் நம்மை ஒப்புக்கொடுப்போம், நம்முடைய வழிகளை அவரிடத்தில் ஒப்புக்கொடுப்போம், நாம் பெற்றிருக்கும் எல்லாவற்றையும் அவரிடம் கொடுப்போம். அப்போதுதான் தேவன் செயல்படுவார். நீங்கள் அவரை

உங்களுக்காக வேலை செய்ய வைக்காமல், அவர் உங்கள் மேல் செயல்பட அனுமதிக்க மனதாயிருக்கும் போது அப்பொழுது தான் கிரியை செய்வார்.

79. அவர் உங்களுக்குச் சொல்லட்டும், நீங்கள் அவருக்குச் சொல்ல வேண்டாம், அதைப் புரட்டிப் போடக்கூடாது. "ஓ, தேவனாகிய கர்த்தாவே, எங்களுடைய கோட்பாட்டிற்குள் வந்துவிடும், எல்லோரையும் மெத்தடிஸ்டு களாக ஆக்கும், எல்லோரையும் பெந்தேக்கோஸ்தேயின ராக்கும், மற்றவர்களையும் ஆளுகை செய்யும். நாங்கள் பெந்தேக்கோஸ்தே ஜனங்களாயிருக்கிறோம் இருக்கிறோம், நாங்கள் மெத்தடீஸ்டுகளாகவும், பாப்டீஸ்டுகளாகவும் இருக் கிறோம்." ஒரு சிறந்த மேதை வேண்டும் என்று விரும்புகிறோம் என்று நாம் கூறுகிறோம். நாம் வேதபாட சாலைகளை கொண்டுள்ளோம், பெரிய பெரிய கட்டிடங் களைக் கொண்டுள்ளோம். "காலத்தின் முடிவு சமீபமாய் இருக்கிறது, கர்த்தருடைய வருகை சமீபமாய் இருக்கிறது" என்று கூறுகிறோம், மில்லியன் - மில்லியன் டாலர்கள் மதிப்புள்ள வேத பாடசாலைகளையும், இன்னும் பலவற்றை யும் கட்டிக்கொண்டிருக்கிறோம், எதைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறோம்? நமக்கு ஒரு மேசியாவைப் பெற்றுக் கொள்ள முயற்சிக்கிறோம். அதுசரி.

80. எங்கிருந்தாவது, ஏதோஒன்றை கர்த்தர் எழுப் பட்டும், ஒவ்வொரு ஸ்தாபனமும், அதே வகையான ஒன்றைத் தங்களுக்காக உருவாக்கிக்கொள்ள முயற்சிக் கிறது. அது முற்றிலும் உண்மை. அதைக் கவனித்து பாருங்கள். தெய்வீக சுகமளித்தல் வெளிப்பட்டபோது, எத்தனை தெய்வீக சுகம் அளிப்பவர்கள் தோன்றினார்கள்? ஒவ்வொருவரும் ஒரு தெய்வீக சுகமளிப்பவராக இருக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

81. அவர்கள் வெளியே புறப்படும் அந்தநாளில் அங்கே மோசே ஒருவன் இருந்தான். ஒரு எலியா அங்கே

இருந்தான், ஒரு எலிசா, ஒரு ஏசாயா இருந்தான், இப்படி இன்னும் அநேகர் இருந்தார்கள்.

82. இப்பொழுது உலகமானது தங்களுக்கென்று ஒரு மேசியா வேண்டும் என்று விரும்புகிறது. ரஷ்யா அவர் களுக்கு ஒரு மேசியா வேண்டும் என்றும், அமெரிக்க ஐக்கிய நாடுகள் தங்களுக்கென்று ஒரு மேசியா வேண்டும் என்றும், சபை உலகம் தங்களுக்கென்று ஒரு மேசியா வேண்டும் என்றும் விரும்புகிறார்கள். ஒவ்வொருவரும் தங்களுக்கென்று ஒரு மேசியாவை விரும்புகிறார்கள், ஆனால் அவர்கள் விரும்புகிறவிதம் என்னவென்றால் – அந்த மேசியாவை அவர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் வைக்கக்கூடிய வகையிலே விரும்புகிறார்கள். அந்த மேசியா மீது ஆதிக்கம் செலுத்தவும், அவரை தங்களு டைய கட்டுப்பாட்டில் வைக்கவுமே விரும்புகின்றனர். ஓ, நிச்சயமாக. ஆம், அவர்கள், அப்படிப்பட்ட ஒருவரை அவர்கள் கொண்டிருக்கக் கூடுமானால், தேவன் அவர்கள் சொந்த விருப்பப்படி அதை அனுப்புவார் என்றால், நிச்சயமாக அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள். ஆனால், நீங்கள் பாருங்கள், தேவன் அவர்கள் தேவையை அறிந் திருக்கிறார், அவர், நாம் விரும்புகிறபடியும், நாம் கேட்கிற படியும் நமக்கு அதை அனுப்புவதாக அவர் வாக்குத்தத்தம் கொடுக்கவில்லை, ஆனால் நம்முடைய தேவைக்கேற்பவும் அதைச் செய்கிறார்.

83. தங்களுக்கு ஒரு தளபதி வேண்டும் என அவர்கள் விரும்புகிறார்கள்; அவர்கள் ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டார்கள். பாருங்கள், அதுதான் அவர்களின் தேவை அவர்களுக்கு ஒரு குழந்தை தேவைப்படுகிறது (எதற்காக?) அவர்களை அவமானப்படுத்தத்தக்கதாக, அவர்களைத் தாழ்த்துவதற்காக.

84. வேதாகம அடிப்படையின்றி தங்கள் சுய பாணியில் தனக்குத் தானே பெயரிட்டுக் கொண்டுள்ள சபைகளுக்குத்

தேவையானது அதுவே, அது மீண்டும் தன்னை தாழ்த்திக் கொள்ள வேண்டும். பாவ அறிக்கை செய்யப்படாத மற்றும் ஜனங்களுக்குள் சுபாவ அன்பற்ற ஒரு நிலையை சபை அடைந்து விட்டது. அது நாளுக்கு நாள் மரித்துக் கொண்டிருக்கிறதுபோல் காணப்படுகிறது. சபை குளிர்ந்து போய்விட்டது. எல்லா இடங்களிலும், எழுப்புதல் என்பது முடிந்துவிட்டது என்பதை நீங்கள் பார்க்கலாம், அவ்வாறு குளிர்ந்த நிலையை அடைந்துவிட்டது என்பதைக் காண லாம். தாழ்மைப்படுத்தப்படுதல் நமக்குத் தேவையாயிருக் கிறது. மேலும் நாம்...

85. அவர்கள் தங்களுக்கு ஒரு தளபதி வேண்டும் என்று கேட்டார்கள், ஆனால் ஒரு ஆட்டுக்குட்டியைப் பெற்றுக்கொண்டார்கள். ஏன்? தேவன் அவர்களுக்கு என்ன தேவை என்பதை அறிந்திருந்தார். அதுவே அவர்களுக்கு தேவையாயிருந்தது. அவர்களுக்கு ஒரு இரட்சகர் தேவைப் பட்டார், தாங்கள் இரட்சிக்கப்பட்டதாக அவர்கள் எண்ணி னார்கள், ஆனால் அவர்கள் இரட்சிக்கப்படவில்லை என்பதை தேவன் அறிவார்.

86. இன்று உலகத்திற்கு அதுதான் தேவையாய் இருக் கிறது, மறுபடியும், ஒரு இரட்சகர், இந்த நிலைமையிலிருந்து இரட்சிக்கும் ஒரு இரட்சகர். எல்லவற்றையும் ஒன்றாக நிலைநிறுத்தக்கூடிய ஒரு இரட்சகர் தேவை. நமக்கு தேவையானது காற்று தேர்ந்தவர்களின் ஆட்சி அல்ல: ஏதோ ஒரு இயந்திரமயமான முறைமையோ அல்லது ஒரு வகையான கல்வி முறையோ அல்ல. நமக்குத் தேவையாய் இருப்பது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையும் இரட்சிக்கும் கிருபையும், மீண்டும் சபைக்குள்ளாக வேண்டும் என்பதே. அப்பொழுது மனிதர்களும், ஸ்திரீ களும், பையன்களும், பெண்பிள்ளைகளும் இரட்சிக்கப் படக்கூடும்.

87. நாம் அதிகநேரம் காத்திருந்துவிட்டோமா? இனி ஒருபோதும் உள்ளே வராமல் வெளியிலே இருப்பவர் அநேகரா? கடைசிப் பெயர் (நபர்) மீட்கப்பட்டுவிட்டாரா? அதுதான் இன்றைக்குள்ள காரியமா? அதுவாக இருக்கலாம், நீங்கள் அறிவீர்கள். அது மிக எளிதான காரியம் என்பதையும் அறிவீர்கள், வேத வசனங்களை ஒருபோதும் இடையூறு செய்யாது, ஒருபோதும் இல்லை அது இருந்த வண்ணமாகவே இருக்கும். ஆகவே, இப்பொழுது நமக்குத் தெரியாது, நாம் எச்சரிக்கையுடன் இருப்போமாக.

88. ஆனால் தாங்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டோம் என்று அவர்கள் எண்ணினார்கள், மேலும் அவர்களை விட தேவன் நன்றாக அறிவார். அதே காரியம் தான் இன்றும் நடக்கிறது.

89. அந்த நாளுக்காக தேவன் அவர்களுக்கு கொடுத் திருந்த வார்த்தையை அவர்கள் எடுத்துக் கொண்டார்கள். அவர் வரும் அந்த நாளை அவர்கள் அறிந்திருக்க வேண்டியிருந்த அந்த வார்த்தையை அவர்கள் ஒரு பாரம்பரியமாக மாற்றிவிட்டார்கள். நீங்கள் தேவனுடைய வார்த்தையை எடுத்து உங்கள் பாரம்பரியங்களினால் அதை அவமாக்குகிறார்கள் என்று இயேசு கூறினார்.

90. மார்க்க சம்பந்தமான அமைப்புகளைக் கொண்ட நம்முடைய உலகத்தில் இன்று அதே காரியம் நடக்கிறது. உலக அமைப்பு தேவனுடைய வார்த்தையை எடுத்து அதைப் பாரம்பரியமாய் ஆக்கிவிட்டார்கள். அதன் காரணமாகவே அதில் எந்த விளைவும் சத்துவம் இல்லாமல், கிரியை செய்யாமல் போய்விட்டது. அதிலிருந்து ஒன்றும் வருவதற்கில்லை, ஏனென்றால் அவைகள் அனைத்தும் கலப்படமாகிவிட்டது.

91. உண்மையான தானியக் கதிரை மண்ணைத் தவிர வேறு எதிலே வைத்தாலும் அது மூளைக்காது. நீங்கள் அதைச் சூரிய வெளிச்சத்தில் வைக்கலாம், அதை சூரிய

வெளிச்சத்தில் வைத்து சூடாக்கலாம், நீங்கள் என்ன வெல்லாம் விரும்புகிறீர்களோ அவை யாவற்றையும் செய்ய முடியும், ஆனால் அதற்கு ஏற்ற ஒரு குறிப்பிட்ட வகையான மண் இருக்க வேண்டும். அது அங்கு இருக்கவேண்டும். அது புதைக்கப்பட வேண்டும். அது முளைத்து அது கனி கொடுக்க வேண்டுமெனில் அதற்கு சரியான சீதோஷன நிலையின் கீழ் இருந்தாக வேண்டும்.

92. தேவனுடைய வார்த்தையையும் அதுபோலத்தான்! நீங்கள் ஒரு சில பாரம்பரியத்தின் அடிப்படையில் நீங்கள் ஒரு சபையை ஜீவன் பெறச் செய்ய முடியாது. நீங்கள் அங்கத்தினர்களை மில்லியன் கணக்கில் சேர்த்துக் கொள்ள லாம். ஆனால் நாம் மறுபடியும் மூல வார்த்தைக்குத் திரும்பும் வரை, மறுபடியும் அஸ்திபாரமான வார்த்தைக்கு திரும்பும் வரை, இரத்தத்தினிடத்தில் திரும்பும் வரை, இயேசு கிறிஸ்துவினிடத்திற்கு திரும்பும் வரை, பழங் காலத்து ஜெபக்கூட்டங்களுக்கு திரும்பும் வரை, தேவ னிடம் திரும்பும் வரை, ஒருபோதும் தேனுடைய வல்லமையை கீழே கொண்டு வரமுடியாது. ஒருவேளை நாம் மிகத் தூரமாய் சென்றிருக்கலாம், இப்பொழுது, அந்த மணிநேரம் தூரம் கடந்துபோயிருக்க கூடும். ஆனால் எவ்வாறாயினும் சுவிசேஷம் பிரசிங்கிக்கப்பட வேண்டும். அதை நாம் நிதானிக்க கூடாது.

93. அவர்களுடைய தேவை என்ன என்பதைத் தேவன் அறிவார், ஆகவே அவர்களுக்கு என்ன தேவையோ அதை அவர்களுக்குக் கொடுத்தார். ஆகவே மறுபடியும், அவர்கள் எதைப் பெற்றிருந்தார்கள், அதே காரியத்தை நாமும் செய்தோம் என்பதைப் பார்க்கிறோம்.

94. ரஷ்யா மற்றுமுள்ள ஏனைய நாடுகளும் எல்லாமும் தங்களுக்குரியதை விரும்புகிறார்கள். பலவிதமான விஞ்ஞா னிகள் ஒவ்வொருவரும் தங்களுக்குப் பெரிய பெயர் உண்டாக வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஒவ்வொரு

தேசமும் தங்களுக்கென்று ஒரு புத்திசாலியான மனிதனை கொண்டிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். நமக்கும் அப்படிப்பட்டவர் வேண்டும் என்று விரும்புகிறோம். அதில் முறை சார்ந்த கல்வி இருக்க வேண்டும் என்று விரும்புகிறோம். ஸ்தாபன முறைமைகள் வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அதை மிகச் சரியாக நாம் பெற்றுக் கொண்டிருக்கிறோம். அதைத்தான் நீங்கள் செய்தீர்கள். அதைத்தான் நீங்கள் விரும்பினீர்கள், அதையே தேவனும் உங்களுக்குக் கொடுத்தார். இப்பொழுது, அதைப் பெற்றுக்கொண்ட பிறகு அதைக் கொண்டு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

95. இன்னும் ஒரு நிமிடம் நேரம் ரஷ்யாவைக்குறித்து பேசப்போகிறோம். விண்வெளியை மேற்கொள்ளக்கூடிய ஒரு மனிதனை நாடிக்கொண்டிருக்கிறார்கள். எவ்வளவு துரிதமாக, வேக வேகமாக அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க முடியுமோ அவ்வாறு பயிற்சி கொடுக்கின்றனர். அப்படிப்பட்ட ஒருவனை அவர்கள் பெற்றுக்கொள்வார் களானால் என்ன நடக்கும், அவர்களுடைய மேசியாவை அவர்கள் பெற்றுக் கொண்டால் என்ன நடக்கும், அதை வைத்து நாம் என்ன செய்யப்போகிறோம்? அப்படிப்பட்ட ஒருவனை அவர்கள் பெற்றுக்கொள்வார்களானால் தேவன் நம்மேல் இரக்கமாய் இருப்பாராக! நீண்ட காலத்திற்கு முன்பாக அல்ல, முன்பொரு காலத்தில் அல்ல, ஜெர்மனி அவர்களுக்குரிய மேசியாவைப் பெற்றுக்கொண்டது, ஒரு ஹிட்லரை, ஞாபகம் வைத்துக்கொள்ளுங்கள். அது அவர்களுக்கு என்ன செய்தது என்பதை நாம் அறிவோம்.

96. இப்பொழுது சபையைக்குறித்த காரியம் என்ன, இன்று எப்படிப்பட்ட மேசியாவை சபை எதிர் நோக்கு கிறது? சபையாகிய நீங்கள், பலத்த சத்தமாய் அழுது முறையிட்டீர்கள். ஆகவே, ஒரு மேசியாவுக்காக நாம் கூக்குரலிடுகிறோம், அது என்ன, நாம் ஆரவாரம் செய்வது

என்ன? "எங்களுடைய நாட்களில் ஒரு எழுப்புதல்! இது, அது, மற்றுமுள்ளவைகள் எல்லாவற்றையும்," இதை செய்வதற்காக அவர்கள் எதை நாடிக்கொண்டிருக்கிறார்கள்? உங்களுக்கு இன்னும் என்ன வேண்டும்? எப்படி யானாலும், சபை என்ன விரும்புகிறது?

97. நாம் ஏற்கனவே அதைப் பெற்றுக் கொண்டிருக் கிறோம்! தேவன் அதை நமக்குக் கொடுத்துவிட்டார். அது இந்த மணிநேரத்திற்குரிய அவருடைய வாக்குத்தத்தமாக இருக்கிறது. அதை நாம் பரிசுத்த வேதாகமத்தில் பார்க் கிறோம், வேதாகமம் முழுக்க எல்லா இடங்களிலும் அதை நாம் காண்கிறோம். அபிஷேகம் பெற்றவர்கள் தோன்றி, அந்தந்த வேளைக்குரிய வார்த்தையை அந்த வேளையிலே மீண்டும் ஜீவிக்கும்படி செய்தார்கள். நாம் மேசியாவைப் பெற்றுக்கொண்டுவிட்டோம். இது அவர்தான், வார்த்தை! "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்தில் இருந்தது, அந்த வார்த்தை தேவனா யிருந்தது." வார்த்தை தேவனாகவே இருந்தது, எபிரேயர் 13:8, "நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்." இந்த நாட்களில் என்ன சம்பவிக்க வேண்டும் என்பதை நாம் அறிந்து இருக்கிறோம். நமக்கு ஒரு மேசியா வேண்டும் என்று விரும்புகிறோம். தேவன் நமக்கு மேசியாவைக் கொடுத்துவிட்டார். அது இந்த நாளுக்குக் கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட அவருடைய வார்த்தை ஆகும். அது சற்றே விசுவாசத்தோடு ஒருவர் வந்து, அதை அபிஷேகம் செய்து, மறுபடியும் அதை ஜீவிக்க செய்ய வேண்டும் என காத்துக்கொண்டிருக்கிறது. ஆம், ஐயா. அதுவே உண்மையான மேசியா. அது தேவனுடைய வார்த்தையே. "வானமும் பூமியும் ஒழிந்து போம், ஆனால் என்னுடைய வார்த்தையோ ஒருபோதும் ஒழியாது" என்று இயேசு கூறினார்.

98. ஆனால் சபையோ ஆவிக்குரியபடி மரித்துப்போன நிலையிலே அமர்ந்திருக்கிறது, அது மரித்துபோய் விட்டது, அந்த வேளை அவர்களை விட்டு கடந்துபோய்விட்டது. அவர்கள் விழுந்துபோன நிலையில் உள்ளனர், என்ன செய்யவேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியாமல், ஒருவர் இந்தப்பக்கமாக ஓடுகிறார், இன்னொருவர் அந்தப்பக்கமாக ஓடுகிறார்கள். ஆனால் தேவன் வேதாகமத்தில் ஒவ்வொரு வாக்குத்தத்தமும், அவைகள் ஒவ்வொன்றும், அவைகள் எப்பொழுதும் இருந்ததுபோல இப்பொழுதும் மிகச்சிறந்ததாக அங்கேயே இருக்கிறது. இதுவே அதற்குரிய வேளை. சபை இந்த நிலைமையை அடையும்படி என்ன நடந்தது? நாம் லவோதிக்கேயா சபையின் காலத்தில், அவள் இவ்விதமான நிலைக்கு வரவேண்டியிருந்தது. இதுவே அதற்கான நேரம்.

99. ஆனால் ஞாபகம்கொள்ளுங்கள், நித்திரையாயிருந்த கன்னிக்கைகள் எண்ணெய் வாங்க வந்த அந்த மணிவேளையில்தான், மணவாளன் வந்தார். இன்று நாம் எபிஸ்கோபலியின்ஸ் (Episcopalians), பிரஸ்பிட்டேரியன்கள் (Presbyterians) மற்றும் அநேக ஸ்தாபனங்களைப் பார்க்கிறோம். ஒரு சில வருடங்களுக்கு முன்னால், நீங்கள் சுற்றித் திரிந்து ஒரு கூட்ட பெந்தேகோஸ்தே விசுவாசி களின் நடுவே வரும்படி அவர்களை கூலிக்கு கூட அமர்த்த முடியாது. நிச்சயமாக முடியாது. ஆனால் பாருங்கள், இன்று அவர்களே உள்ளே வந்துகொண்டிருக் கிறார்கள். இயேசு என்ன கூறினார் என்பதை நீங்கள் அறிந்திருக்கவில்லையா? அவர்கள் எண்ணெய் வாங்க வரும்போது, "உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் தாருங்கள்" என்றார்கள். எண்ணெய் வைத்திருந்த வர்களோ, "அப்படி அல்ல, உங்களுக்கும் எங்களுக்கும் போதாமல் போய்விடதாபடிக்கு போய் விலை கொடுத்து அதை வாங்கிக் கொள்ளுங்கள்" என்றார்கள். அதை அவர்கள் வாங்க முயற்சித்தபோது, அதைப் பெற்றுக்

கொள்ள அவர்கள் முயற்சித்தபோது! பெந்தேகோஸ்தே ஜனங்களே நாம் எந்த மணிநேரத்தில் ஜீவித்துக் கொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்களா? அவர்கள் வந்தபோது, ஒருவேளை அவர்கள் குழப்பம் அடைந்திருக்க வேண்டும், அவர்கள் இதைச் செய்திருக்க வேண்டும், அதைச் செய்திருக்க வேண்டும் அல்லது மற்ற வேறு எதையோ செய்திருக்க வேண்டும், ஆனால் வேத வசனங்களின்படி, அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ள வில்லை. அதைப் பெற்றுக்கொள்ள, அதைச் செய்ய முயற்சித்தபோது, அவர்கள் எல்லாவிதமான உணர்ச்சி வசப்பட்ட அனுபவங்களையும் கடந்து சென்றிருக்க வேண்டும் மற்றும் எல்லாவிதமான கொள்கைகள், கோட் பாடுகளுடன், உணர்ச்சிகளுடனும் சென்றிருக்க வேண்டும், ஆனால் அவைகள் எல்லாவற்றையும் போலியாக நடப் பிக்க, பாவனை செய்ய பிசாசால் கூடும். அவர்கள் அதை வாங்கிக்கொண்டிருந்தபோது அல்லது அதைப் பெற முயற்சித்தபோது, மணவாளன் வந்துவிட்டார். எண்ணெய் வைத்திருந்தவர்கள் உள்ளே பிரவேசித்தார்கள்.

100. நாம் வாழும் இந்த மணிநேரம் அதுவாக இருக்கிறது. இதற்குமுன் நாம் ஒருபோதும் அதைப் பார்த்ததில்லை. அது அவ்வாறுதான் இருக்கும் என்று இயேசு கூறினார், ஆகையால் அது அப்படியே நடக்கிறது. நாம் என்ன பார்த்துக்கொண்டிருக்கிறோம்? இந்த நாளிலே சம்பவிக்கும் என்று தேவன் கூறிய வார்த்தை நம்முடைய கண்களுக்கு முன்பாகவே நிறைவேறிக் கொண்டிருப்பதை காண்கிறோம். "ஓ, அப்படியானால், கர்த்தருடைய பரிசுத்த வான்களே, விழித்தெழும்புகள், முடிவு சமீபமாய் இருக்கும் போது, ஏன் நித்திரையில் இருக்கிறீர்கள்; நாம் அந்தக் கடைசி அழைப்புக்கு ஆயத்தமாகுவோம்," அது எப்பொழுது இருக்கும் என்று நாம் அறியோம். ஆம்.

101. நம்முடைய உலக அமைப்பும், நம்முடைய சபை முறைமையும், நம்முடைய ஸ்தாபன முறைமையும், இப்படி நம்முடைய எல்லா அமைப்புகளும், மாசுபடிந்து கறை படிந்துள்ளது. நேற்று அவர்கள் என்ன பெற்றிருந்தார் களோ, அதிலே நாம் குறைவு உடையவர்களாக இருக் கிறோம். அது சரியே. சபைகள், வறண்டு போய்விட்டது போல் காணப்படுகிறது, வார்த்தையைக் கொண்டும், தேவனு டைய ஆவியைக்கொண்டும் ஜீவிக்கிற ஒரு சபையை காண்பது அவ்வளவு அரிதான காரியமாயிருக்கிறது; மகத்தான பெரிய காரியங்கள் நடந்து கொண்டிருக் கிறது, அது அநேக வருடங்களுக்கு முன்பு அல்ல.

102. இப்பொழுது, அவர்களுக்கு என்ன தேவை என்பதை தேவன் அறிவார் என்பதை நாம் பார்த்தோம், ஆகவே அவர் - எப்பொழுதும் தம்முடைய வாக்குத்தத் தின்படியே பதில் அளிக்கிறார். நாம் காண்கிற இந்த மகத்தான வார்த்தையே, அந்த வாக்குத்தத்தம் ஆகும், அந்த நாளில் என்ன நடக்கும் என்று மிகச்சரியாக தேவன் என்ன வாக்குப் பண்ணியிருந்தாரோ அதுதான் இது என்பதை அவர்கள் அறிந்திருக்க வேண்டியிருந்தது.

"எப்படி, என்ன சம்பவிக்க வேண்டியிருந்தது?" என்று நீங்கள் கூறலாம்.

103. ஏசாயா 9:6-ல் தீர்க்கதரிசி இவ்வாறு கூறினான்: "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; குமாரன், ஒரு பாலகன்; ஒரு குமாரன் பிறந்தார்; ஒரு பாலகன் கொடுக்கப்பட்டார்; அவருடைய நாமம் ஆலோசனை கர்த்தர் என்றும்; சமாதான பிரபு என்றும், வல்லமையுள்ள தேவன் என்றும், நித்திய பிதா என்றும் அழைக்கப்படுவார், கர்த்தத்துவம் அவருடைய தோளின் மேல் இருக்கும், அவருடைய இராஜ்ஜியத்திற்கு முடிவிராது."

104. அந்நாளில் ஒரு பாலகன் பிறக்க வேண்டும் என்பதை நாம் அறிவோம்; ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி

ஒரு பாலகனைப் பெறுவாள் என்றும் நாம் அறிந்திருக் கிறோம். ஆனால் அது அவர்களுடைய எந்த முறைமை யின் மூலமாகவும் வரவில்லை, ஆகவே அவர்கள் அத்துடன் எதையும் செய்ய விரும்பவில்லை. அவர்கள் அதை புறக்கணித்தார்கள். ஆனால் அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையாகிய, தேவன் (இம்மானுவேல்) அவர்கள் மத்தியில் மாம்சமாகி அங்கு நின்றார். உங்களில் யார் என்னை "பாவத்தைக்குறித்தும், அதாவது அவிசுவாசத்தைக் குறித்து குற்றப்படுத்தக்கூடும்"? என்று கேட்டார். வேதத்தை ஆராய்ந்துபாருங்கள், அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டு என்று எண்ணுகிறீர்கள். அவைகள், அவைகளே என்னைக்குறித்து சாட்சி கொடுப் பவைகளாக இருக்கின்றன. முற்றிலுமாக அந்த நாளுக்குறிய மேசியா என்று அடையாளம் காணப்பட்டார், அந்த நாளில் வரவேண்டிய மேசியா அவர்தான். ஆனால் அந்த முறைமைகள் ஜனங்களுடைய சிந்தையைக் குழப்பி விட்டன, அநேக பாரம்பரிய விதிகளினாலும் மற்றவை களினாலும் ஜனங்களின் சிந்தையை குழப்பி, தேவனுடைய வார்த்தையை செயல் இழக்கச் செய்தார்கள். அவர்தான் மேசியா என்பதை அவர்களால் கண்டுகொள்ள முடிய வில்லை.

105. அங்கு அவர்கள் செய்ததுபோலவே, மறுபடியும் அது இங்கே செய்யப்பட்டது. அது சரியே உலக பாரம்பரியங்கள் இயந்திர அமைப்புகளும் ஒரு பெரிய இயந்திரத்தில் புகை வெளியேறும் குழாய் இருக்க வேண்டிய இடத்தில் பிஸ்டன்களைப் பொருத்தியது போல ஆகிவிட்டன. அப்படியிருக்கும் போது, அது எப்படி இயங்கும்? அது இயங்கவே முடியாது. அது அந்த விதமாக உருவாக்கப்படவில்லை.

106. வார்த்தையின் மூலமாக, தேவனுடைய வல்லமை யின்றி சபை இயங்க முடியாது. தேவனுடைய வார்த்தையை

பரிசுத்த ஆவியானவர் மட்டுமே உறுதிப்படுத்துவார். ஏனெனில் அதைத்தான் அவர் செய்யும்படியாக இருக் கிறார். அபிஷேகத்தின் நோக்கம் வார்த்தையை உறுதிப் படுத்துவதே.

107. இயேசு அபிஷேகம் பண்ணப்பட்டவராவார், மாம்சமான வார்த்தை அவர். அதன் காரணமாகவே அங்கே அவர் அந்த தண்ணீருக்குள் நடந்துவந்தார். அவர் தீர்க்கதரிசியினிடத்தில் வந்த வார்த்தையிருந்தார். அந்த தீர்க்கதரிசியால் ஞானஸ்நானம் பெற்றார். அப்பொழுது அந்த தீர்க்கதரிசி எழுந்து, "நான் சிறுக வேண்டும், அவர் பெருக வேண்டும்" என்று கூறினார். அதுதான் தேவன் செயல்படும் வழிமுறை என்பதை நாம் காண்கிறோம்.

108. ஆனால், அவர்கள் அதை ஏற்றுக் கொண்டார் களா? அதை அவர்கள் அறிந்திருக்க வேண்டியிருந்தது. தேவனுடைய நடபடிகளை அவர்கள் கவனித்திருக்க வேண்டும். வார்த்தை நிறைவேறுவதை அவர்கள் கண்டார்கள். வேதவாக்கியம் அதைக்குறித்து கூறினதை அறிந்திருந்தார்கள். ஆனால் அது அந்த விதமாக வரும் என்பதை அவர்களால் விசுவாசிக்க முடியவில்லை, அது பரிசேயர்களிடத்திதிற்கோ அல்லது சதுசேர்களிடத்தில் வரவேண்டும் என்று அவர்கள் நினைத்தார்கள். அது பரிசேயர்களிடத்தில் வந்திருந்தால், சதுசேயர்கள் அதை ஏற்றுக் கொண்டிருக்கமாட்டார்கள். சதுசேயர்களிடத்தில் வந்திருந்தால், பரிசேயர்கள் ஏற்றுக் கொண்டிருக்க மாட்டார்கள். ஏனென்றால் பரிசேயர்கள் தான் அதைப் பெற்றுக்கொள்வார்கள் என்று அவர்கள் கூறினார்கள்.

109. இன்றும் அதே நிலைதான், நம்முடைய முறைமை கள், ஒட்டுமொத்தமும் அழுகிப்போய் மாசுபடிந்துள்ளது. ஓ, என்னே! நாம் வாழ்கிற இந்த மணிநேரம், உலகத்தைக் குருடாக்கிவிட்டது, அவர்கள் இருளில் நடக்கிறார்கள், உலகப் பாரம்பரியங்களுக்குத் தலை தாழ்த்திவிட்டார்கள்,

மேய்ப்பனில்லாத ஆடுகளைப் போல. அலைந்து கொண்டி ருக்கிறார்கள். ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தை அவர் களுக்கு முன்பாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தும், குருட்டுத் தனமாய் அவர்கள் அதை விட்டு வழிவிலகி, அதை விட்டுவிட்டு நடந்து சென்றபிறகு, வேறு எதை நீங்கள் எதிர்பார்க்கக்கூடும்? ஆமென். அங்குதான் நாம் இருக்கிறோம்.

110. அப்படியானால், உலகம் விழுந்துகொண்டிருக்கிறது. ஏன்? அதை ஒன்றாக கட்டி நிறுத்தியிருந்த, அதே வார்த்தை புறக்கணிக்கப்பட்டது. இதைக்குறித்து நாம் எபிரேயர் 11-ஆம் அதிகாரத்தில் பார்க்கிறோம்.

111. நியூயார்க் பட்டணத்தில், மற்றொரு ஐன்ஸ்டின் (Einstin) ஆற்றிய ஒரு சொற்பொழிவை கேட்டு கொண் டிருந்தேன். அவருடைய சொற்பொழிவுகள் எல்லாவற்றிலும் கடைசியாக ஆற்றிய சொற்பொழிவு அதுதான். அவர் ஒரு நட்சத்திரக் கூட்டத்தைப்பற்றி, தொலைதூரத்தில் காணப் படும் நட்சத்திர மண்டலத்தைக்குறித்தும் பேசினார், (அது நட்சத்திரக் கூட்டத்திற்குமேல் வெகு தொலைவில் உள்ளது என்று கூறினார்.) அவர் ஒரு மனிதன் ஒளியின் வேகத்தில் விண்வெளியில் பயணம் செய்தால்... அது என்ன, எட்டாயிரமா... (யாரோ ஒருவர், "நூற்று எண்பத்தாராயிரம்" என்று கூறுகிறார் –ஆசி.) நூற்று எண்பத்தாராயிரம் மைல்கள் ஒரு நொடிக்கு, "அந்த இடத்தை அடைவதற்கு அவனுக்கு 150 மில்லியன் ஒளி ஆண்டுகள் ஆகும்" என்றார். அவன் நித்தியத்தை கண்டுப்பிடித்தான். அதன்பிறகு மேலும், "அங்கிருந்து திரும்பிவருவதற்கு, அவனுக்கு இன்னொரு 150 மில்லியன் ஒளி ஆண்டுகள் தேவைப்படும். ஆக மொத்தம் 300 மில்லியன் ஒளி ஆண்டுகள் பிடிக்கும்" என்றார். ஆனால் பூமியை விட்டு சென்றிருந்த காலமோ வெறும் 50 ஆண்டுகளாகவே இருக்கும். அதுதான் காரியம். நித்தியத்தை அடைந்தது! ஓ,

என்னே! அவர் ஒரு சூரியனையும், அதைச் சுற்றிவரும் கோள்களையும் உண்டாக்கினபோது, அவருடைய மகத்துவம் எவ்வளவு பெரிதாயிருக்கிறது.

112. அண்டையில், ஒரு விண்வெளி வீரன், ரஷ்யாவின் மேல் பறந்துசென்று, அவன், "நான் தேவனையும், தூதர்களையும் காணவில்லை" என்று கூறினான். ஜனங்கள் எவ்வளவு அறியாமை உள்ளவர்களாக இருக்கிறார்கள்! அப்பொழுது...

113. தேவன்! இந்த முழு சூரிய குடும்பத்தையும் அவருடைய கரங்களிலிருந்து ஊதி உண்டாக்கினார். அதற்கும் மேலாக, பல மில்லியன் கணக்கான ஒளி வருடங்களுக்கும் மேலான தூரத்தில் அவர் வீற்றிருக்கிறார். இந்த முழு பிரபஞ்சமும் அவருடைய வல்லமையினாலும் அவருடைய வார்த்தையினாலும் தாங்கப்பட்டு நிற்கிறது. அல்லேலூயா! ஒவ்வொரு நட்சத்திரமும் அதினதின் ஸ்தானத்தில் தொங்கிக்கொண்டிருக்கிறது. ஆம், ஐயா! அப்படிப்பட்டவர், கீழே இறங்கி வருவதற்குத் தன்னை தாழ்த்தி நம்மில் ஒருவராக மாறி, நமக்காக மரிக்க வந்தார்; ஆகையால் நாம் போக்குச் சொல்ல முடியாது. அவைகளில் ஒரு நட்சத்திரம் அது பொருத்தப்பட்டிருக்கிற இடத்திலிருந்து இடம் பெயறுமானால், அது இருக்கிற இடத்திலிருந்து, அதன் சுற்றுப்பாதையை விட்டு வழி விலகுமானால், முழு அமைப்பையும் பாதிக்கும். முழு அமைப்பும் சரியாக மாற்றப்பட்டுவிடும், ஏனென்றால் ஒவ்வொன்றும் மற்றொன்றைச் சார்ந்து இருக்கிறது. ஆகவே முழு குடும்பமும் துல்லியமான ஒழுங்கில் இயங்க வேண்டியது அவசியம்.

114. தேவனுடைய அந்த ஒழுங்கு முறை, அது அவருடன் பூரண ஐக்கியத்தில் பூரணமாய் இசைந்திருக்கும்போது, முழுஅமைப்பும் பரிபூரணமாய் கிரியை

செய்யும். அது சரியே, ஏனென்றால் அது அவ்வாறுதான் கிரியை செய்ய வேண்டும்.

115. ஆனால் சபை ஒருபோதும் தேவனுடைய அந்த முறையை எடுத்துக்கொள்ளவில்லை, அது தன்னுடைய முறையை ஏற்ப்படுத்திக் கொண்டது. அதன் காரணமாகவே நாம் ஒருமனம் இல்லாமல் இசைவற்ற நிலையில் இருக்கிறோம். அதன் காரணமாகவே சபையானது மிகவும் குழப்பமடைந்து இருக்கிறது. அதன் காரணமாகவே உலகம் இன்று விழுந்துகொண்டிருக்கிறது, ஏனென்றால் நம்முடைய சொந்த முறைமைகளை தெரிந்து எடுத்துக் கொண்டோம். அதன் காரணமாகவே அரசியல் உலகம் விழுந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகவே மார்க்கச் சம்பந்தமான உலகம் விழுந்து போயிற்று, ஏனென்றால் தேவன் ஒவ்வொரு காலத்திற்கென்றும் வைத்திருந்த நித்திய திட்டத்தை, எடுத்துக்கொள்வதற்கு பதிலாக சொந்த திட்டங்களை எடுத்துக்கொண்டோம். ஆமென். உலகத்தில் உள்ள பிரச்சனையும் அதுதான். அது மிகவும் தவறான தாகும், ஏனென்றால் வேறொன்றைத் தெரிந்து கொண்டு விட்டார்கள். அவ்விதகமாக அது ஜனங்களைப் பற்றிக் கொண்டு, "நான் பிரஸ்பிட்டேரியன், நான் மெதடிஸ்ட், நான் ஒருத்துவம், நான் திரித்துவம் மற்றும் நான்..." என்று கூறுகிறோம்... ஓ, இரக்கமாயிரும்! நாம் ஒன்று சேர முடியாமல் இருப்பது ஒன்றும் அதிசயம் அல்ல, நம்மை ஒன்றுசேர்ப்பதற்கு ஒன்றுமே இல்லை.

116. அண்மையில் திரு.நிக்சன் மிகவும் சிறந்த ஒரு கருத்தை கூறினார். கடந்த சில வருடங்களில் அப்படிப் பட்ட ஒரு கருத்தை ஜனாதிபதியோ அல்லது உதவி ஜனாதி பதியோ கூறவில்லை, அவர், "அமெரிக்கா ஜனங்களுக்கு என்ன ஆயிற்று, அவர்கள் ஒருவருக்கொருவர் கொண்டுள்ள அன்பையும், மரியாதையையும் இழந்து விட்டார்கள்" என்று கூறினார். அமெரிக்க பிரஜைகளே

தெருக்களில் ஒருவரை ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொள்கின்றனர். நம்மால் என்ன செய்ய முடியும்? நாம் என்ன செய்யக் கூடும்? என்னே!

117. ஒரு மனிதனுடன் கருத்து வேறுபடக்கூடியவர் களாயிருந்தும், அதே சமயத்தில் அவனை நேசிக்கவும் உங்களால் முடியவில்லை என்றால் பேசாமல் மௌன மாயிருங்கள். உங்களால் ஒரு தகப்பன் தன் குமாரனை சிட்சித்து, பின்னர் அன்பான தன் கரங்களால் அவன் கழுத்தை சுற்றிப்போட்டு, அணைத்துக் கொள்வதைப்போல நீங்கள் அவனுக்கு செய்ய முடியவில்லை என்றால் அந்த காரியத்தை விட்டுவிடுவது உங்களுக்கு நல்லது. நீங்கள் பேசுகிற காரியத்தை நீங்களே அறிந்து கொள்ளும் அளவிற்கு, நீங்களே இன்னும் முன்னேறவில்லை. அது சரியே நான் ஒரு மனிதனுடன் கருத்து வேறுபடலாம். நிச்சயமாக; அவ்வாறு இருந்தும் அவன் என்னுடைய சகோதரனாய் இருக்கிறான், நான் அவனுடைய கையைப் பிடித்துக்கொள்வேன். அவன் தவறில் இருக்கிறபோது அப்படியே அவனை விட்டுவிடமாட்டேன்; அவ்வாறு நான் செய்தால், அவனிடத்தில் அதை சொல்லாமல் இருந்தால், அவனுக்கு நான் ஒரு உண்மையான சகோதரன் அல்ல. அது சரியானது. ஆனால் நான் அவனுக்கு சொல்லமுடியும், அதே சமயத்தில் நான் அவனை நேசிக்கிறேன் என்று சொல்லி, என அன்பை அவனுக்கு நிரூபிக்கவும் முடியும்.

118. அவனை தெருவிலே, அவனை சுட்டு வீழ்த்த வேண்டியது இல்லை. நான் திரு.கென்னடியின் அரசியல் கருத்துகளோடும், அவருடைய மதக்கொள்கைகளோடும், முரண்படுகிறேன், ஆனால் அவர் அதற்குத் தகுதியுள்ளவர் அல்ல. இல்லை, ஐயா. இல்லை, நிச்சயமாக அதற்கு ஒரு மனிதனும் தகுதி உள்ளவன் அல்ல.

119. ஆகவே, முழு உலகமே சீர்கெட்டுப்போயிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய தேசம், அரசியல்,

மார்க்க முறைமைகள் மற்றும் எல்லாமும், சீர்கெட்டுப் போயிருக்கின்றன.

120. அது காத்துக்கொண்டிருக்கிறது. இந்த நாளுக் கென்று தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட தேவனுடைய வார்த்தை, அதை உறுதிப்படுத்துவதற்காக யாரோ ஒருவர் வரவேண்டும் என்பதற்காகக் காத்துக்கொண்டிருக்கிறது. ஒருவேளை அவர் அதை ஏற்கனவே செய்துவிட்டாரா? என்று வியப்புறுகிறேன். அவர் அதை ஏற்கனவே செய்து முடித்துவிட்டார் என்றால், அப்பொழுது நாம் எங்கே இருப்போம்? அவர் அதை செய்து முடித்துவிட்டார் என்றால், நம்முடைய நிலை என்ன? மிகவும் பரிதாபகரமான நிலை!

121. அநேக முறை, நான் திருமதி. கென்னடியைக் குறித்து கடினமான வார்த்தைகளைக் பேசியிருக்கிறேன், உலகத்திற்கே நாகரீக முறைகளை உருவாக்குகிறவர்களாக, இந்த "நீர்க்கோர்த்த தலைபோன்ற தலைமுடி வெட்டும் (water-head haircut) (water-head என்றால் மூளையில் அதிகளவு சேரும் நிலை, அதினால் தலை வழக்கத்தை விட பெரிதாக தோன்றும்.) நம்முடைய சகோதரிகளும் அவர்களுடைய தலைமுடியைக் கத்திரித்துக்கொண்டு, திருமதி.கென்னடியைப் போலவே ஆடை உடுத்திக்கொள் கிறார்கள்," என்று நான் கூறியிருக்கிறேன். "பழைய ஏற்பாட்டுக் காலத்திலிருந்த யேசபேலைப் போல" என்றும் நான் கூறினேன். அது உண்மை. அதை நான் விசுவாசிக் கிறேன். ஆயினும் நான் இன்றிரவு தன்னுடைய குழந்தை களுடன் அங்கே இருக்கிற சிறிய தாயாருக்காக நான் வருந்துகிறேன்.

122. ஆனால் உங்களிடம் நான் ஒன்று கேட்கட்டும். ஜாக்குலின் கென்னடி உங்களில் சில பெந்தேகோஸ்தே யினர்போல, நான் பிரசங்கித்த, தலைமுடியைக் கத்தரித்துக் கொள்வது மற்றும் உள்ள காரியங்களைப்பற்றியச்

செய்தியை கேட்டிருந்தால், ஒருவேளை அவள் கூட தன் தலைமுடியை ஒட்ட கத்தரித்துக்கொண்டிருக்கமாட்டாள். ஆனால் நீங்கள் பெந்தேகோஸ்தே ஜனங்கள், அப்படி இருந்தும்கூட நீங்கள் அதைச் செய்கிறீர்கள்: ஊ– ஹுஃ. ஊ ஹுஃ. அவளுக்குத் தருணம் கிடைத்து செய்தியைக் கேட்டிருந்தால், அவள் அவ்விதகமாகச் செய்திருக்க மாட்டாள், பாருங்கள் நீங்களோ கேட்டிருக்கிறீர்கள். அங்கு தான் நீங்கள் இருக்கிறீர்கள். நாம் மிகமோசமான இடத்தின் கூட்டத்திலும் இருக்கிறோம். மிகச்சரியாக அதுவே உண்மை. ஆம், உண்மையாக. ஓ, தேவனே, ஒழுக்கமும், மற்றுமுள்ளவைகளும் எவ்வாறு...

123. பெண்மை என்பது நம்முடைய தேசத்தை ஒன்றாக நிலைநிறுத்திக்கொண்டிருக்கும் காரியங்களில் ஒன்றாகும். அதுவே முதுகெலும்பாக இருக்கிறது. பெண்மை, தேவன் ஒரு ஸ்திரிக்கு தாயாக இருக்கத்தக்கதாக அறிந்திருந்து அந்த உயர்ந்த நற்பண்பு.. ஏன், அது போய்விட்டது. இந்த உலகத்தின் பெண்கள், அவர்களின் உயர்ந்த பண்புகள், ஹாலிவுட் நாகரீக தேவதைக்குமுன் தலைதாழ்த்தி பணிந்து விட்டார்கள்; அவர்களை முன்மாதிரியாய் ஆக்கிக் கொண்டு, அவர்களைப் போலவே உடை உடுத்துவதும் ஹாலிவுட் நட்சத்திரங்களில் சிலர் செய்வது போலவே நடந்து கொண்டும் இருக்கிறார்கள். மேலும் அநேக நேரங்களில், தேவபக்தியற்ற அவலட்சணமான ஆடைகள் உடுத்துவது, காம உணர்வைத் தூண்டும் அலங்காரமும், இவைகள் எல்லாம் சபைகளில் நாகரீகம் என்ற தகுதியைப் பெற்றுள்ளது. மேலும் பிரசங்க பீடத்திற்கு பின்னால் நிற்கிற மேய்ப்பர்களுக்கோ அதை தவறென்று ஜனங்களுக்கு சொல்லுவதற்கு தேவையான தைரியம் இல்லை- பரிசுத்த ஆவியின் வல்லமை இல்லை. லோத்து அங்கே (சோதோமிலே) உட்கார்ந்துகொண்டு இருந்ததைப்போல, அது அவன் ஆத்துமாவை நாள்தோறும் துக்கப்படுத்திக் கொண்டிருந்தாலும், தன்னுடைய வயிற்றுப்பிழைப்புக்காக

தன்னுடைய வாழ்வாதாரத்தை விடக்கூடாது என்ற பயத்தில் அது தவறு என்று ஜனங்களுக்கு எடுத்துரைக்க அவன் துணியவில்லை. ஆம்.

124. இன்று நமக்கு தேவையானது அவைகளை வேரோடு பிடுங்கிப் போடுகிற ஒரு சுத்திகரிப்பாகும். ஆனால் ஒருவேளை அந்த சுத்திகரிப்பை செய்வதற்கே நாம் மிகவும் தாமதித்திருக்கலாம். அந்த மணிநேரம் ஒரு வேளை கடந்துபோயிருக்கலாம். வேறு ஒரு எழுப்புதலை நாம் அடையப்போவதில்லை. நீங்கள் அதற்காக எதிர்பார்க் கிறீர்கள் என்பதை நான் அறிவேன், ஆனால் அதைக் குறித்து நான் வேதத்தில் காணவில்லை.

125. நான் ஒரு எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன், ஏனென்றால் அதில் செல்வது ஒரு சிறிய கூட்ட ஜனங்களாகவே இருப்பார்கள். அது சரி, மிகச் சிறிய கூட்டம் மட்டுமே. அவர்கள் உலகத்தில் இல்லாதது யாராலும் கவனிக்கப்படாது. அவர் கள் எடுத்துக்கொள்ளப்படும்போது, அவர்கள் சென்று விட்டார்கள் என்பதை ஒருபோதும் நீங்கள் அறிந்து கொள்ளவே மாட்டீர்கள். அது சரி. அது இரவில் திருடன் வருவதுபோல இருக்கும்.

126.மேலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் நிமித்தம், அவர் தம் கிரியைகளை துரிதமாய் முடிக்காவிட்டால்! நித்திய ஜீவனுக்கென்று தெரிந்துகொள்ளபட்டவர்கள் சிலர் இருக்கிறார்கள், என்பதை நாம் அறிவோம், நித்திய ஜீவனைப் பெற்றவர்கள் அனைவரும் தெரிந்துகொள்ள பட்டவர்கள். அவர்களுக்காக – அவர்களுக்காக... அல்லது அவர்கள் நிமித்தம் அந்த நாட்களை அவர் குறைக்காமல் போனால், எந்த மாம்சமும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது. இந்த உலகம் ஏற்கனவே அதன் நியாயத்தீர்ப்பை சந்தித்துவிட்டது. ஒவ்வொரு 2000 ஆண்டுகள் முடிவிலும் உலகத்தின் அமைப்புகள் விழுந்து விட்டன என்பதை

நாம் அறிவோம். நோவாவின் நாட்களில் அது விழுந்து போயிற்று. கிறிஸ்துவின் நாட்களில் அது விழுந்துபோயிற்று. இங்கே இப்பொழுது 1964 வந்துகொண்டிருக்கிறது, அது எதை விட்டுவைக்கப் போகிறது? மற்றும் ஒரு 2000 ஆண்டிற்கு 36 வருடம் மட்டுமே இருக்கிறது; 21-வது, 21-ஆம் நூற்றாண்டு வந்து கொண்டிருக்கிறது. என்ன நடக்கிறது? அந்த நாட்கள் இன்னும் குறைக்கப்பட்டே ஆக வேண்டும். சீர்கெட்டுப்போன இந்த நாட்களைக்குறித்து, "கூடுமானால் தெரிந்துகொள்ளபட்டவர்களும் வஞ்சிக்கப் படுவார்கள், அவர்கள் இரட்சிக்கப்பட மாட்டார்கள்" என்று இயேசு சொன்னார். அந்த நாட்களில்தான் நாம் இருக் கிறோம். மேலும் நாள்காட்டி நமக்கு என்ன கூறுகிறது என்றால், விஞ்ஞானத்தின் அடிப்படையில், நாம் அதற்கு பதினைந்து வருடங்கள் பின்தங்கி இருக்கிறோம் என்று காட்டுகிறது. ரோமன் நாள்காட்டியின்படியும் நாம் பின்னால் இருக்கிறோம், யூத நாள்காட்டியின்படி, நாம் சுமார் 15 அல்லது 20 வருடங்கள் பின்தங்கி இருக்கிறோம்.

127. ஆகவே, நாம் எங்கே இருக்கிறோம்? தேசங்கள் உடைவதை நாம் பார்க்கிறோம், இஸ்ரேல் விழித்தெழும்பு வதைப் பார்க்கிறோம், இந்த நாளுக்கென்று வேதாகமம் முன்னுரைத்த அடையாளங்கள் நிறைவேறிக் கொண்டிருப் பதை நாம் காண்கிறோம். இயந்திர மயமான காரியங்கள் நடந்துகொண்டு இருப்பதை நாம் பார்க்கிறோம். இப்பொழுது ஆவியானவர், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட செயல்படுத்தும் வல்லமை (Dynamics), தம்முடைய சபைக் குள் பிரவேசித்து அவர்களை, அங்கு இருக்கிற கல்வாரிக் கும், பின்னர் எடுத்துக்கொள்ளப்படுதலுக்குள்ளும் நடத்தி செல்ல வேண்டிய நேரம் வந்துவிட்டது! அங்குதான் நாம் இருக்கிறோம்.

128. நாம் ஏன் விழுந்துகொண்டிருக்கிறோம் என்பதில் வியப்பொன்றும் இல்லை, அங்கே ஒன்றுமில்லை... எது

இந்தப் பூமியை சிருஷ்டித்த அதே காரியமே, இந்த பூமி இயங்கும்படியாக இங்கே வைக்கப்பட்டது. அதேகாரியம், எல்லா முறைமைகளும் மற்றும் எல்லாமுமே, இதைச்சுற்றி சுழலவேண்டிய மையமாக வைக்கப்பட்டிருந்ததும் அதுவே. அவருடைய வார்த்தையைக் கொண்டு உலகங்களை உண்டாக்கினார். ஐன்ஸ்டீன் தன்னுடைய உரையில் இவ்வாறு சொன்னார், வேதவாக்கியத்தை வியாக்கியானப் படுத்துகிறது... இந்த உலகம் இருப்பதற்கான ஒரே ஒரு விளக்கம்தான் உண்டு." என்று கூறினார், "அது எபிரேயர் 11-ஆம் அதிகாரமாகும். "விசுவாசத்தினாலே நாம் உலகங்கள்... தேவனுடைய வார்த்தையினால் உண்டாக் கப்பட்டது" என்று கூறுகிறது. அவ்வளவுதான். இந்த பூமி எவ்வாறு ஆகாயவெளியில் தொங்கிக்கொண்டிருக்கிறது என்பதையோ, எவ்வாறு அது பூமத்திய ரேகையை மையமாகக்கொண்டு அது எவ்வாறு தன்னுடைய சுழற்சியில் 24 மணிநேரத்தில் ஒரு சுற்றை முடித்து விடுகிறது என்பதையோ, எவ்வாறு தன்னுடைய சுற்றுப் பாதையில் இடைவிடாமல் சுழன்று, மறுபடியும் அதே இடத்திற்கு வந்து, ஒரு நொடியைக் கூட தவறாமல் இயங்குகிறது என்பதையோ, யாராலும் விளக்க முடியாது. ஒவ்வொரு நட்சத்திரமும் தன்னுடைய நியமிக்கப்பட்ட சுற்றுவட்டத்தில் சுழன்று கொண்டே ஒன்றுக்கொன்று உதவிசெய்து, தங்களுக்குரிய ஒழுங்கில் இயங்கி கொண்டிருக்கின்றன.

129. அந்த சந்திரன் எவ்வாறு மேலே இருந்து சமுத்திரத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிறது என்பதை பாருங்கள்! அந்த சந்திரன் எப்போதாவது அதன் ஸ்தானத்தைவிட்டு விலகுமானால், ஒரு கணப்பொழுதில் நாம் 100 அடி உயரமுள்ள தண்ணீரினால் மூழ்கடிக்கப் படுவோம், அந்த சந்திரன்! கவனியுங்கள், இங்கே உங்களால் ஒரு துளை போட முடியுமானால், நீங்கள் எண்ணெய் எடுப்பதற்காக துளை போடுகிறீர்கள்,

ஆழமாகப் போடுகிறீர்கள். கடற்கரை உங்களிடமிருந்து எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதை பாருங்கள்? நீங்கள் இந்தப் பூமியில் ஒரு துளையை போட்டுவிட்டு, சாயங்காலத்தில் அதைக் கவனியுங்கள், கடலில் அலைகள் வரும்போது, அந்த உப்புத்தண்ணீர் உங்கள் குழாய் குள்ளாகவே மேலே எழும்பி வருகின்றன. நிச்சயமாக. அது என்ன? தூரத்தில் இருக்கிற சந்திரன் அதைக் கட்டுப்படுத்துகிறது.

130. அது தேவனுடைய அமைப்புமுறையாகும். அது தேவனுடைய திட்டமாகும். அது தேவனுடைய கட்டளை யாய் இருக்கிறது. ஆனால் நாமோ நமக்கென்று நம்முடைய சொந்த முறைமைகளை உருவாக்கிக் கொள் கிறோம், அவருடைய பிரமாணங்களை நாம் எடுத்துக் கொள்கிறதில்லை. இப்போது, இதை முடிப்பதற்காக நாம் சற்று துரிதமாகச் செல்வோம். அந்நாளில் எப்படி இருந்ததோ அதுபோலவே, இந்த கிறிஸ்துமஸிலும் நம்முடைய உலகம் விழுந்துகொண்டிருக்கிறதை நாம் பார்க்கிறோம். ஓ!

131. தேவன் தம்முடைய வார்த்தையை அபிஷேகம் செய்து, அவருடைய வார்த்தையை வாக்குத்தத்தம் செய்துள்ளார். அவர் முன்னமே நம்மை அபிஷேகம் செய்துவிட்டார், மேலும் அவர் நமக்குச் சொன்னார்... அவர்களிடம் சொன்னார், "அவர் இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் செய்தபோது..." பெந்தேகோஸ்தே நாளன்று பேதுரு கூறினான். பலத்தை செய்கைகளையும், அற்புதங் களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளி னாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார்; அதை நீங்களே அறிந்திருக்கிறீர்கள்" என்றான். அவர்கள் அதற்கு சாட்சிகளாய் இருக்கிறார்கள். மேலும் அந்த ஜீவாதிபதியை நீங்கள் அடித்து அக்கிரமக்காரர்களுடைய கைகளினாலே சிலுவையில் ஆணி அடித்துக் கொன்றீர்கள்,

அவரை தேவன் எழுப்பினார். அவர், "உயிர்த்தெழுந்த பின்பு, அவர் என்னவெல்லாம் செய்தார்! அதற்கு நாங்கள் சாட்சிகளாய் இருக்கிறோம்" என்று அவன் கூறினான். நிக்கோதேமு எவ்வாறு வந்து, "ரபீ, நாங்கள் அறிவோம். நாங்கள் பரிசேயர்களாய் இருக்கிறோம், சனகரின் சங்கம் அங்கே இருக்கிறது, நீர் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு போதகராக இருக்கிறீர் என்பதை நாங்கள் அறிந்திருக் கிறோம், தேவனாலேயன்றி, நீர் செய்கிற கிரியைகளை ஒரு மனிதனாலும் செய்ய முடியாது" என்றான். அந்த வாக்குத்தத்தம் அந்த நாளுக்குறியது என்பதை அவர்கள் அறிவார்கள், அது நிறைவேறியிருக்கிறது என்பதையும் அவர்கள் அறிவார்கள், ஆயினும், அவர்களுடைய முறைமைகள் அவர்கள் ஒன்றுமே செய்யாதபடி அவர்களை கட்டிப்போட்டிருந்தது

132. இன்றும் அதுதான், அதே காரியம். முற்றிலும் அதே காரியம் தான் நடைபெறுகிறது. உங்களால் செய்ய முடியாது, நீங்கள் அதைச் செய்யும் முதல்முறையே, உங்களுடைய ஐக்கியச் சீட்டை இழக்க நேரிடும். ஒருமுறை தேவனுடைய அந்த வார்த்தையின் பக்கமாக உறுதியாக நின்று பாருங்கள், என்ன சம்பாவிக்கிறது என்பதைப் பாருங்கள். அவ்வளவுதான் உங்கள் கதை முடிந்துவிட்டது. நீங்கள் பிரசித்தபெற்ற மனிதனாய் இருக்கமாட்டீர்கள். அவர்கள் உங்களைத் தங்கள் நடுவிலிருந்து உதைத்துத் தள்ளிவிடுவார்கள், அதனோடு மற்ற எல்லாக் காரியங் களையும் செய்வார்கள்.

133. ஓ, ஒரு சிறிய ஊழியத்தை நீங்கள் பெற்றிருந்தால், அதன்மூலம் ஒரு கூட்டத்தை சேர்த்து, எவ்வளவு பணம் பெற்றுக்கொள்ளலாம் என்று எண்ணி, உங்களை பிடித்துக் கொள்வார்கள். உங்களுடைய ஊழியத்தின் மூலமாக ஒரு பெரிய கூட்டத்தை இழுத்து கொண்டு வந்து, அதன்மூலம் பணத்தையும் மற்ற லாபங்களையும் பெற்றுக் கொள்வார்கள்.

ஆனால் சற்று கவனியுங்கள், வார்த்தை என்று வரும் பொழுது, அவர்கள் அதை விட்டு எவ்வாறு பின்வாங்கு கிறார்கள் என்பதை கவனித்து பாருங்கள். தேவனுடைய ஊழியக்காரன் அதை அறியாமல் இருக்கிறான் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா? ஏன், இயேசுவுக்கே யூதாஸ் அவர்களில் ஒருவனாக இருந்தான் என்பது தெரிந்திருந்தது. அப்படியிருக்க இயேசு, ஏன் யூதாஸினிடத்தில் ஒன்றுமே கூறவில்லை? இன்றும் அதே காரணம்தான், அப்படிப்பட்ட வஞ்சகம் வரும், அந்த மணிநேரம் வரை நீங்கள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அதுதான் சரி. அவர்கள் அதைப் பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்களுக்குறியதை பெற்றுக்கொள்வார்கள்.

134. கவனியுங்கள், ஆனால் அவர் வந்த விதத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை, அதுதான் இன்றைக்கும் சம்பவிக்கிறது. அந்நாளில் இருந்த சபைகள், தாங்கள் வைத்திருக்கிற பாரம்பரியம் அபிஷேகம் பண்ணப் பட வேண்டும் என்று விரும்பினார்கள். பரிசேயர்கள், பரிசேயருடைய அமைப்பு அபிஷேகம் பண்ணப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர், சதுசேயர்கள், சதுசேயருடைய அமைப்பு அபிஷேகம் பண்ணப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர், ஏரோதியர்கள் அவ்வாறே விரும்புகின்றனர். இன்னும் மற்றவர்களும் அப்படியே விரும்புகின்றனர். இந்நாட்களிலும் அதே விதமாகத் தான் இருக்கிறது. அவர்களால்... தேவன் ஒரு அபிஷேகத்தை அனுப்பி, ஒருத்துவக்கொள்கைகாரர்களை அபிஷேகம் செய்தால், ஓ, என்னே, அவர்கள் இருத்துவக் கொள்கைகாரர்களிடமோ அல்லது திரித்துவக்கொள்கை காரரிடமோ அல்லது வேறு எவரிடமோ, பார்த்தீர்களா? நாங்கள் தான் சரி என்று என்று சொல்லமாட்டார்களா? அசெம்பிளீஸ் சபையினர் ஒருத்துவ காரர்களிடம் நாங்கள் சொன்னதே சரி என்பதை இப்போது பார்த்தீர்களா என்று சொல்லமாட்டார்களா? மெத்தடிஸ்ட் பாப்ட்டிஸ்டுகளிடத்தில்,

"ஓ, நாங்கள் அதை சரியாக பிடித்துவிட்டோம்" என்று கூறுவார்கள். நீங்கள் உங்கள் அமைப்பு அபிஷேகம் பண்ணப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்.

135. ஆனால் தேவன் அவருடைய வார்த்தையை அபிஷேகம் பண்ணுவதாக வாக்களித்துள்ளார். ஆமென்! அது சுட்டெரிப்பதுபோல் கடினமாக இருக்கும் என்பதை நான் அறிவேன், ஆனால் இதுவே சத்தியம். தேவன் ஒருபோதும் மாறுகிறவரல்ல. அவர் அவருடைய வார்த்தையையே அபிஷேகிக்கிறார். ஆம், ஐயா. அபிஷேகம் பண்ணப்பட்ட அந்தக் காலத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்டவை வாக்களிக்கப்பட்டன. வார்த்தையை மட்டுமே தேவன் அபிஷேகம் பண்ணுகிறார். அந்தக் காலத்திற்கென்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை.

136. இன்று அவர்கள் விரும்புவது ஒரு கல்வி முறையை தான். (ஏன்?), தாங்கள் விரும்புகிற எதையும் செய்துகொண்டே, அதேசமயம் தாங்கள் கிறிஸ்தவ அடையாளத்தையும் தக்க வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற் காகத்தான். ஓ, அவர்கள் ஒரு மகத்தான, பெரிய ஏதாவது ஒன்றைப் பெற்றால், அங்கே நீங்கள் சென்றால், நீண்ட வரிசைகளும் மற்றும் உள்ளே சென்று சூயிங்கம் (chawing gum) மென்று கொண்டும், ஒருவரை ஒருவர் பக்கவாட்டில் எட்டி உதைத்துக் கொண்டும், பின்னர் புறப்பட்டு வந்து பொழுதுபோக்கு கூடங்களில் கூடைப்பந்து விளையாடியும் இன்னும் இதுபோன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டும் இருக்க முடிந்தால் அதையே அவர்கள் விரும்புவார்கள். கூடைப்பந்தாட்டதிற்கோ, பேஸ்பாலுக்கோ, கால்பந்தாட்டதிற்கோ அல்லது வேறு எந்த விளையாட்டிற்கோ எனக்கு எதிர்பில்லை. ஆனால் அவைகள் உங்கள் தெய்வமாகி விட்டால் அது ஒரு பெரிய பையில் காற்றடைத்த பையைத் தவிர வேறொன்றுமில்லை. ஆனால், உங்களுக்கு இன்று

தேவையானது என்னவென்று நான் கூறட்டும், இன்று நமக்குத் தேவையானது தேவனுடைய வார்த்தை மட்டுமே, இந்தக் காலத்திற்கென்று அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையே நமக்கு தேவை. அது மறுபடியும், பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொண்டுவரும். ஆம், அதுதான் சரியானது, ஆனால் அவைகள் சபைக்குச் சொந்தமான தல்ல. இல்லை, ஐயா. சபையை ஒன்றாக வைத்திருக்க இப்படிப்பட்ட காரியங்களை நீங்கள் கட்டி எழுப்ப வேண்டிய நிலை வந்துவிட்டால் நீங்கள் அந்த கட்டிடத்தை எரித்துவிடுங்கள். அல்லது அவைகளை உதைத்து வெளி யேற்றிவிடுங்கள்; தேவனுடைய வார்த்தையை மறுபடியும் கொண்டு வருகிற ஏதாவது ஒன்றை உள்ளே கொண்டு வாருங்கள். அவைகள் உலகத்தின் காரியங்கள், தேவனு டைய வார்த்தையுடன் உலக காரியங்களை கலப்படம் செய்தல், நீங்கள் அதை செய்யக்கூடாது. இல்லை, ஐயா.

137. ஆம், ஐயா, இப்பொழுது அவர்கள் ஒரு அமைப்பை விரும்புகின்றனர். உலகமும் ஒரு அமைப்பை தான் எடுத்துக்கொள்கிறது. ஒவ்வொரு சிறிய அமைப்புகள் கூட, ஒவ்வொருவரும், "அது என்னிடமே வரவேண்டும்," "அது எங்களிடத்திற்கே வரவேண்டும்" என்று கூறிக் கொண்டிருக்கின்றன. ஒ அவர்கள் பெரிய பெரிய இயந்திரங்களை (அமைப்புகளை) உருவாக்கி கொண்டு, பிரசங்கிகளை பயிற்றுவித்து, கல்வி கற்பித்து அறிவாற்ற லினால் அவர்களை உருவாக்கி கொண்டிருக்கிறார்கள். நிலைமை எப்படி இருக்கிறது என்றால், ஒரு சாதாரண மனிதன் தன்னுடைய சொற்களும் இலக்கணமும், மிகவும் மோசமாயிருக்கிறது என்று எண்ணி, அப்படிப்பட்ட ஒருவனுக்கு பின்னால் பிரசங்கப் பீடத்தில் ஏறிபோகக் கூட வெட்கப்படுகிறான். ஆனால் இன்று நமக்கு தேவையானது என்ன, கல்வி முறை அல்ல, அது ஒரு வேதாகம தொகுப்புகள் (lectionaries) அல்ல.

138. இன்று நமக்கு வேண்டுவதெல்லாம், தேவனுடைய வல்லமையால் சுவிஷேசம் கையாளப்பட வேண்டும், இந்த மணிநேரத்திற்குரிய தேவனுடைய வார்த்தையை உறுதிப் படுத்த வேண்டும், அப்பொழுது, "கருப்பை" கருப்பு என்றும், "வெள்ளையை" வெள்ளை என்றும் சொல்லத் துணியும் ஒருவன் எழும்புவான், அதாவது சத்தியத்தை அப்படியே எடுத்துரைக்க கூடிய ஒருவர் எழும்ப வேண்டும். அந்த சத்தியம் ஒருவரின் தோலை உரிப்ப தாகவோ அல்லது ஒருவரை அடியோடு உலுக்கி சரிப்ப தாகவோ அல்லது வேறு எதைச் செய்வதாகவோ இருந்தாலும் சரி, அவன் தயக்கமின்றி எழுந்து அறிவிப்பான். சரியாக இந்த மணி நேரம் அதற்காகத் தான் அழைக்கிறது.

139. ஆனால் ஜனங்கள் ஏதோ ஒன்றை விரும்பு கிறார்கள். இன்று ஜனங்கள், பெண்கள், அவர்கள் என்ன விரும்புகிறார்கள். ஒரு ஜனக்கூட்டத்தை, ஒரு மேய்ப்பரை, விரும்புகிறார்கள், அவர் எழுந்து நின்று, "அது பரவாயில்லை. நீங்கள் இதைச் செய்யலாம் அல்லது நீங்கள் அதைச் செய்யலாம் அல்லது எல்லாம் சரியா இருக்கிறது, அதில் ஒன்றும் தவறில்லை" என்று சொல்லக் கூடிய போதகரைத் தான் அவர்கள் விரும்பு கின்றனர். முடியை குட்டையாய் வெட்டிக்கொள்ளவும், முகத்தில் சாயம் பூசிக்கொள்ளவும் அனுமதிக்கும் பிரசங்கி யாருக்கு சுவிசேஷ சவுக்கடி தேவையாய் இருக்கிறது.

இல்லை, "அதற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்?" என்று நீங்கள் சொல்லலாம்.

140. உன்னுடைய வெளித்தோற்றமே, உனக்கு உள்ளே என்ன இருக்கிறது என்பதைப் பிரதிபலிக்கிறது என்பதை நீங்கள் அறியவில்லையா?. நீ அதைச் செய்யக்கூடாது என்று வேதாகமம் கூறவில்லையா? "அப்படிப்பட்ட நிலை யில் ஒரு ஸ்திரி ஜெபம்பண்ணுவது கூட ஒழுங்கல்ல"

141. ஆண்களே நீங்களும் அதுபோன்றே ஏதோ ஒன்றைதான் விரும்புகிறீர்களா? பிரசங்கிமார்களே, உங்களால் அதைக்கூற முடியாது, ஏனென்றால், அவ்வாறு கூறினால், உங்கள் ஐக்கிய சீட்டை இழந்து விடுவீர்கள், அதைக்குறித்து நீங்கள் ஏதாவது ஒன்றை கூறினால், அந்த பெரிய ஆலோசனை சங்கம் உங்களை வெளியே உதைத்து தள்ளிவிடும். ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் ஞானஸ் நானத்தோடு தேவனுடைய வாரத்தையோடு நிலைத்திருப் பதைவிட, ஒரு சங்கத்தின் அட்டையையோ அல்லது ஐக்கிய சீட்டையோ அதிகமாக மதிக்கிறானேயானால் அப்படிப்பட்ட மனிதனுக்கு தேவன் உதவி செய்வாராக. பரிசுத்த வேதாகமத்தை எழுதிய பரிசுத்த ஆவியானவர், தாம் எழுதினதையே எப்படி மறுதலிக்க முடியும்?

142. "நல்லது, அற்புதங்களின் நாட்கள், ஓ, இன்று நமக்குத் தேவையில்லை. தெய்வீக சுகமளித்தல் இப்படிப் பட்ட மற்ற காரியங்கள், அப்படிப்பட்டவை எதுவும் இல்லை. அது குறிசொல்லுதல், அது, ஓ, அது மனோ வசியம் தான்" என்று கூறினார்கள். ஏழ்மையும் வீழச்சியு மடைந்தவர்களாகிய நீங்கள், உங்களுக்கு என்ன நேர்ந்தது? பரிசுத்த ஆவியானவர் உனக்குள் வாசமாயிருந்தால், நமக்குத் தேவையானது சுவிசேஷமே!

143. "பீத்தோவனின் ஜீவன் எனக்குள் இருந்தது" என்று நான் உங்களுக்குச் சொன்னால், நான் இசையை இயற்றுவேன். பீத்தோவன் எனக்குள் ஜீவித்தால், "பீத்தோ வனின் ஜீவியத்தையே நான் வாழ்வேன். ஷேக்ஸ்பியர் எனக்குள் இருந்தால், கவிதைகளை நான் எழுதமுடியும். ஷேக்ஸ்பியர் எனக்குள் ஜீவித்தால், நான் நாடகங்களை எழுதமுடியும்.

144. இயேசு கிறிஸ்து உங்களுக்குள் ஜீவித்தால், அவர் செய்த கிரியைகளையே, நீங்களும் செய்வீர்கள். அவருடைய வார்த்தை- அவரே வார்த்தையாய்

இருக்கிறார், அவர் அளித்த வாக்குத்தத்தத்தின்படியே இந்த நாளில் தன்னைத் தானே உறுதிப்படுத்திக்கொள்ளும். ஆமென், அதற்காகவே தேவன் காத்துக் கொண்டிருக்கிறார். உலகத்தைத் ஒன்றாய் பிடித்து நிறுத்திக் கொண்டிருப்பதும் அதுதான். மத சம்பந்தமான உலகத்தை ஒன்றாக பிடித்து நிறுத்துவதும், அது அவருடைய வார்த்தையாய் இருக்கிறது. ஒவ்வொரு வார்த்தையும் பிடித்து நிறுத்துகிறது. ஆம்.

145. ஜனங்கள் அப்படிப்பட்ட ஒரு அமைப்பை விரும்புகின்றனர். அவர்கள் அதைப் பெற்றுக்கொள்ளப் போகிறார்கள். இப்பொழுதே, அவர்கள் ஏற்கனவே அதில் இருக்கிறார்கள். உலக சபைகளின் ஐக்கியம், அவர்கள் விரும்புவதை அப்படியே கொடுக்கும், அவர்கள் ஒவ் வொருவரையும் ஒன்றிணைக்கும். இந்த பெந்தேகோஸ்தே யினர், இந்த கன்வென்ஷன் கூட்டங்களில் எவ்வாறு அமர்ந்து, வாட்டிகன் பட்டணத்திற்கு சென்று சுற்றறிக்கை கடிதம் ஒன்றை எழுதி, "பரிசுத்த பிதாவாக்கிய போப் பாண்டவர் அவர்களுடைய அருகிலே அமர்ந்திருந்த போது, என் வாழ்நாளிலே நான் அனுபவித்த மிகுந்த ஆவிக்குரிய அனுபவம் அதுவே என்று கூறுகின்றார்களே! ஒரு பெந்தேகோஸ்தேயினாக இருந்து இவ்வாறு எவ்விதம் செய்ய துணிக்கின்றனர்? அது மரித்துப்போன பெந்தே கோஸ்தே இயக்கமே. அதன் ஒட்டுமொத்த காரியமும் மரித்துப் போயிற்று. அது கெட்டுபோயிற்று. அது போய் விட்டது! அது சபைகளின் ஐக்கியக் கூட்டத்திற்கே மீண்டும் திரும்பி சென்றுவிட்டது. அது முற்றிலும் உண்மையாகும்.

146. ஆனால் ஜீவனுள்ள தேவனுடைய சபையாகிய, மணவாட்டியோ, அதேப்போல தடையின்றி முன்னேறிச் செல்கின்றாள். அவள் வார்த்தையினால், எடுத்துக்கொள்ளப் படுதலில் செல்வாள், அது சரியே, வார்த்தையும் வார்த்தையும் ஒன்றாக இணையும். நாம் கிறிஸ்துவில் ஒரு அவயமாக, அங்கமாக இருந்தால், அதன் ஒரு பாகமாக

இருந்தால், நாம் அவருடைய வார்த்தையாய் இருக்க வேண்டும், ஏனென்றால் அவர் வார்த்தையாய் இருக்கிறார். சரியே. ஆம், ஐயா.

147. இந்தக் காலத்திற்கென்று வாக்களிக்கப்பட்ட, அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையை வேண்டாம் என்று அவர்கள் புறக்கணித்துவிட்டார்கள், அவர் எப்போதும் வார்த்தையாய் இருக்கிறார். தேவன் 1946-ஆம் ஆண்டில் இந்த காலத்திற்குறிய ஒரு அபிஷேகம் பெற்ற, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தையை மறுபடியும் அனுப்புவார் என்றால், இந்தக் காலத்திற்கென்று, தொடக்கத்தில் அவர் வந்தபோது அவர் எவ்வாறு இருந்தாரோ அதுபோலவே இருப்பார். எபிரேயர் 13:8 இதை நேரடியாக உங்கள் முன் வைத்து அது, "அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்" என்று கூறுகிறது. அது மிகவும் சரியானது. நாம்... மேலும் அவரும் இந்தக் காலத்திற்கென்று பிதா வாக்குத்தத்தம் செய்த வார்த்தையோடே நிலைத்து நிற்பார். இயேசு வருவாரேயானால், இந்தக் காலத்திற்கென்று அதைக்குறித்து, வார்த்தை என்ன சொல்லபபட்டு இருக்கிறதோ மிகச்சரியாக அவர் அப்படியே இருப்பார்.

148. அவ்வாறுதான் எலியா அவருடைய காலத்தில் இருந்தார். அவ்வாறுதான் மோசே அவருடைய காலத்தில் இருந்தார். அவ்வாறுதான், நோவா அவருடைய காலத்தில் இருந்தார். அவ்வாறுதான், எல்லா இடங்களிலும் வந்த தீர்க்கதரிசிகள் அனைவரும் அவ்வாறே இருந்தார்கள். மேலும் அந்த வார்த்தை, அது தன் முழுமைக்கு வரும் போது, அது முழு வார்த்தையும் நம் மத்தியில் மாம்ச மாக்கப்பட்டது. இந்தக் காலத்தில் வார்த்தை என்னசெய்யும் என்று சொல்லப்பட்டதோ அதை, மிகச்சரியாக அப்படியே செய்தது.

149. அது இன்று வந்தால், இந்தக் காலத்திற்கென்று அவர் செய்யப்போவதாக வாக்குத்தத்தம் செய்திருந்ததை, இயேசு கிறிஸ்து அப்படியே ஜீவித்துக்காட்டுவார்: வார்த்தை கூறியிருக்கிற படியே

150. அவரே வார்த்தையாய் இருந்தார். ஏசாயா 9:6 என்பது இயேசு கிறிஸ்துவாகும். அந்த வார்த்தை மாம்சமாகி நம் மத்தியில் வாசம் செய்தபோது, அதைக் குறித்து எழுதப்பட்டிருந்தபடியே ஜீவித்து வெளிப்படுத் தியது யாத்திராகம புத்தகத்தில் (அல்லது) உபாகமப் புத்தகத்தில் மோசே இவ்வாறு கூறினான். "உன் தேவனாகிய கர்த்தர்" அல்லது உபாகமத்தில், "உங்கள் தேவனாகிய கர்த்தர் என்னைப்போல ஒரு தீர்க்கதரிசியை எழும்பப் பண்ணுவார். அது நிறைவேறும், அவருக்குச் செவி கொடாதே போனவர்கள், ஜனங்களிலிருந்து அறுப்புண்டு போவார்கள்." அவர் வந்தபோது வார்த்தை அவர் என்ன செய்வார் என்று கூறிற்றோ மிகச்சரியாக அதை அவர் செய்தார். ஆனால், அவர்களோ அவரிடத்தில் குறை கண்டுபிடித்தார்கள்,ஏனென்றால் அவர்களுடைய அமைப்பு அந்த வார்த்தையை செயல்படாமல் நிறுத்தி தேவனுடைய வார்த்தையை செயலற்றதாக்கிவிட்டார்கள். பாருங்கள்? அப்படிப்பட்ட காரியங்களை அவர்களால் விசுவாசிக்க முடியவில்லை. அப்படிப்பட்ட கிரியைகளை அவர்களால் விசுவாசிக்க முடியவில்லை, ஏனென்றால் அது காலம் கடந்ததாக இருந்தது, என்று எண்ணினார்கள். ஓ!

151. ஏனென்றால் தம்முடைய வார்த்தை என்றும் மாறாத வார்த்தையாயிருக்கிறது என்று அவர் நிரூபித்தார். அவர் பூமிக்கு இப்போது திரும்பி வந்தால், அந்நாளிலே தம்முடைய வார்த்தையை உறுதிப்படுத்தினதுபோல, இன்றும் தம்முடைய வார்த்தையை அவர் உறுதிப்படுத்து வார், அவர் இன்று பூமிக்கு வந்தால் உலகத்திலுள்ள ஒவ்வொரு ஸ்தாபன அமைப்புகளையும் அவர்

கடுமையாய் கடிந்து கொள்வார், முதலில் அவர் செய்ததும் அதுவே.. அவர் கடுமையாகக் கண்டிப்பார். அவர் முதன் முதலில் வந்த போது எதை எதிர்த்தாரோ, அதைத்தான் இப்பொழுதும் எதிர்ப்பார். அவர் முதலில் செய்தது போலவே, இந்த நேரத்திலும் அவர்கள் அதையே செய்வார். அங்கே அவர் அப்படிச்செய்தார். ஏனென்றால் அவர் அவருடைய வார்த்தையை ஒருபோதும் மாற்று வதில்லை. அவருடைய திட்டத்தை ஒருபோது மாற்ற மாட்டார். அது எப்பொழுதும் மாறாததாயிருக்கும், ஒவ் வொரு காலத்திற்கும், அது அபிஷேகம் செய்யப்பட்ட வார்த்தையாகவே இருக்கிறது. அது சரி.

152. எனவே, மீண்டும் நாம் இந்நாளில் காண்கிறபடியே, அவர் இன்று வருவாராயின், உலகத்தை ஒன்றாய் நிலைப் படுத்துவதற்கென்று அவருக்கிருந்த திட்டத்தை, அந் நாளிலே நிராகரித்ததுபோலவே, இந்நாளிலும் அவர்கள் நிராகரிப்பார்கள்.

153. ஆனால், கவனியுங்கள் முடிக்கிற நேரத்தில் நான் இதைச் சொல்ல விரும்புகிறேன். நமக்கு ஒரு அமைப்பு வாக்குத்தத்தம் பண்ணப்படவில்லை, ஒரு ஸ்தாபனத்தை நமக்கு வாக்குப்பண்ணவில்லை, ஒரு மேலான ஸ்தாபனம், ஒரு உன்னதமான ஒருவகையான திட்டம், இவைகள் நமக்கு வாக்குப்பண்ணபடப்வில்லை. ஆனால், ஒரு இராஜ்ஜியத்தை, ஒரு நித்திய இராஜ்ஜியத்தை நமக்கு வாக்குப்பண்ணியுள்ளார். ஆமென். அதுதான் நமக்கு வாக்குப்பண்ணப்பட்டுள்ளது, இந்த நித்திய இராஜ்ஜியத்தில் நித்திய ஜீவனை உடையவர்களாயிருப்பதற்கே நம் அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த இராஜ்ஜியத்தின் அரசாங் கத்தை நித்திய இராஜாவினால் ஆளுகை செய்யப்படு கிறது. அவர் தம்முடைய நித்திய வார்த்தையை நித்திய ஜீவனுள்ள தமது ஜனங்களுக்கு அளித்திருக்கிறார், நித்திய ஜீவனைப்பெற்ற ஜனங்கள் இவ்வுலகத்திற்குறிய

காரியங்களால் அல்ல, மாறாக "மனிதன் தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையாலும் பிழைப்பான்" என்று எழுதியிருக்கிறதின் பேரில் விருந்துண் கிறார்கள். ஆகவே நாம் இப்பொழுது... நாம் இந்த இராஜ்ஜியத்தை பெற்றிருக்கிறோம், மேலும் நாம் அறிந்திருப்பது என்னவென்றால் "வானமும் பூமியும் ஒழிந்து போகும், ஆனால் இந்த வார்த்தையோ ஒருபோதும் ஒழியாது". இந்த வார்த்தையே அந்த இராஜ்ஜியமாயிருக் கிறது, இதுவே இராஜாவின் இராஜ்ஜியமுமாகும். இதுவே தேவனுடைய அமைப்பும் ஜீவனும் ஆகும். அவையாவும் முழுமையாய் இவ்வார்த்தையிலே அடங்கியிருக்கிறது.

154. தேவன் அவருடைய உலகத்தை ஒரு சபையைக் கொண்டு நியாயந்தீர்ப்பாரானால், எந்த சபையைக்கொண்டு அவர் நியாயந்த்தீர்க்கப் போகிறார்? எத்தனை எத்தனை சபைகள் இருக்கின்றன? நூற்றுக்கணக்கான மற்றும் நூற்றுக்கணக்கான மற்றும் நூற்றுக்கணக்கான வித்தியாச, வித்தியாசமான பல்வேறு ஸ்தாபனங்கள் இருக்கின்றன. கத்தோலிக்கம் சரி என்றால், எந்த கத்தோலிக்கம்? கிரேக்க கத்தோலிக்கம் சரி என்றால், ரோம (கத்தோலிக்கம்) தவறு. ரோம கத்தோலிக்கம் சரி என்றால், கிரேக்க கத்தோலிக்கம் தவறு. ஆகவே நீங்கள் பாருங்கள், மெத்தடிஸ்ட் சரி என்றால், பாப்டிஸ்டுகள் தவறு. பாப்டிஸ்டுகள் சரி என்றால், பெந்தேகோஸ்தேயினர் தவறு. பெந்தேகோஸ்தேயினர் சரி என்றால், பிரஸ்பிட்டேரியன்கள் தவறு. பாருங்கள்? ஆகவே நீங்கள் எல்லோரும் மிகவும் குழம்பிப்போய் விடுகிறீர்கள்.

155. ஆனால் ஒரு சாட்சியும் இல்லாமல் அல்லது ஏதோஒன்று – ஏதோஒன்று - நாம் அதில் நிற்கத்தக்கதாக ஒரு தகுதிநிலை இல்லாமல் தேவன் நம்மை விட்டுவிட வில்லை. இந்த வார்த்தையே அந்த தகுதிநிலை ஆகும். "ஒவ்வொரு மனிதனுடைய வார்த்தையும் பொய்யே,

என்னுடைய வார்த்தையோ சத்தியமாய் இருக்கிறது" என்று அவர் கூறியிருக்கிறார். அது சரி.

156. ஏனென்றால் "வானமும் பூமியும் ஒழிந்து போகும்." இங்கே நமக்கு, "அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜி யத்தை நாம் பெற்றுக்கொள்வோம்" என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆம், ஐயா, இந்த உலகத்தின் இராஜ்ஜி யங்கள் எல்லாம் இப்பொழுது விழுந்து கொண்டிருக்கிறது, இப்பொழுது முழு உலகமே விழுந்து கொண்டிருக்கிறது, அவ்வாறு இருந்தும், நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணப்பட்டுள்ளோம். ஆமென். நாம் ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றிருக்கிறோம். ஆகவே, இந்த உலகம் விழுந்து போகும்போது, நாம் விழுந்து போகாத இந்த இராஜ்ஜியத்திற்குள்ளாக பிறந் திருக்கிறோம். அது தேவனுடைய நித்திய வார்த்தையாகும், நாம் அதன்மேலே நிலைத்து நிற்கிறோம். அது ஒருபோதும் விழுந்து போகாது.

157.பூமியின்மேல் சமாதானத்தை கொண்டு வரப்போகிற தென்று இந்தப் புதிய மார்க்க சம்பந்தமான அமைப்பை பற்றி நாம் அதிகமாய் கேள்விப்படுகிறோம். அது பூமியில் சமாதானத்தைக் கொண்டுவரப்போகிறது என்கின்றனர். கத்தோலிக்கமும், பிராட்டெஸ்டன்ட் சபைகளும் ஒன்று சேரும்போது சமாதானம் உண்டாகும் என்று கூறுகின்றனர். அவர்களில் சிலர் தெய்வீக சுகமளித்தலை விசுவாசிப் பவர்கள், சிலர் அதை விசுவாசிக்கமாட்டார்கள், சிலர் இதை விசுவாசிப்பார்கள், சிலர் அதை விசுவாசிப்பார்கள், ஆயினும் உலகச் சபைகளின் சங்கத்திலே சேர வேண்டு மானால், இதுவரை நீங்கள் வாதாடி நிலைநிறுத்தி வந்த உங்களுடைய சுவிசேஷ நம்பிக்கையை, நீங்கள் விட்டுவிட வேண்டியதாயிருக்கும். ஒவ்வொரு ஸ்தாபனமும் அவ் வமைப்பிற்குள் சேர்ந்தாக வேண்டும். ஆகவே, ஸ்தாபனம் சபிக்கப்பட்டது என்றால், நீங்கள் அதில் சேர்ந்து இருந்

தால், அது என்ன செய்யும்? அது உங்களை நேராக மீண்டும் அதற்குள்ளேயே இழுத்துச் செல்கிறது. ரோம், ஸ்தாபனங்களின் தாயாக இருந்தால், அவள்தான் அந்த மிருகமும், மிருகத்தின் முத்திரையுமாய், பின்னர் அதற்கு ஒரு உருவத்தை உண்டாக்குவார்கள், சங்கம், ஒட்டுமொத்த சபைகள் எல்லாம் சேர்ந்து மிருகத்திற்கு ஒரு உருவத்தை உண்டாக்குவார்கள், ஆகவே சரியாக மறுபடியும் மிருகத் தின் முத்திரை! உலக ஒழுங்கு, ஸ்தாபனங்கள், மிருகத்தின் முத்திரையைக் கொண்டுவர ஒரு அமைப்பை உருவாக்கி மிருகத்தின் முத்திரையை கொண்டு வருகிறார்கள்.

158. இதனை நீங்கள் பார்ப்பது போலவே நானும் பார்க்கிறேன், இப்பொழுது அது வலுக்கட்டாயமாக பலவந்தம் செய்யப்படப்போகிறது. ஏற்கனவே அந்த அமைப்பிற்குள் வராத யாவரும் அதற்குள் கொண்டு வரப் படும்படியாக எல்லாம் ஒழுங்குப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த பெரிய இயந்திரம் அங்கே ஆயத்தமாய் இருக்கிறது. அதன் இயந்திர அமைப்பு அங்கே ஆயத்தமாயிருக்கிறது. இப்போது தனது செயலாற்றும் வல்லமையோடு (dynamics) அதற்குள் பிரவேசிக்கும்படி காத்திருக்கிறது. பாருங்கள்? அது நிகழ்ந்துவிட்டால், ஒரு மனிதனும் சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கக் கூடாது. அந்த அமைப்போடு கூட இணைந் திராத எந்த ஒரு மனிதனும் பிரசங்கிக்க முடியாது. அதுவே மிருகத்தின் முத்திரையாக (அடையாளமாக) இருக்கிறது. மேலும் ஞாபகம்கொள்ளுங்கள், அந்த நேரத்திற்குள் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பாள். ஆகவே அது வெகு சமீபத்தில் இருக்கிறது. சரியே, ஆகவே நாம் எங்கே இருக்கிறோம் என்பதை நீங்கள் காணலாம்.

159. இப்பொழுது நிகழ்ந்துகொண்டிருக்கிற இந்த மாபெரும் வீழ்ச்சியையும், இவையனைத்தும் நடைபெறு கின்றதையும் நீங்கள் தெளிவாக காணலாம். "ஓ, கர்த்தருடைய பரிசுத்தவான்களே விழித்தெழும்புகள், முடிவு

சமீபமாய் இருக்கையில் ஏன் நித்திரை மயக்கமாய் இருக்கிறீர்கள்?'' ஏன் அதை செய்கிறீர்கள்? சில நேரங் களில் உங்களுக்கு கொடுக்கப்பட்ட கிருபையின் நாளை பாவத்தினாலே வீணாக்கிவிடாதீர்கள். ஒருபோதும் அதைச் செய்யாதிருங்கள். ஆம். ஐயா.

160. இப்பொழுது, இந்த அமைப்பு உலக சமாதானத்தைக் கொண்டுவராது. ஒருவேளை இந்த அமைப்பு உலக சமாதானத்தைக் கொண்டுவருமானால், வார்த்தையாகிய சமாதான பிரபுவிற்கு என்ன இடம்? அது தன் போதனையிலே அந்திக்கிறிஸ்துவாக இருக்கிறது. தேவன் எதற்காக நிலைநின்றாரோ அவர் நமக்கு கற்பித்தது எதுவோ அதற்கு முற்றிலும் எதிராகவே அது நிற்கிறது. ஏனெனில் அவர் நமக்கு என்ன கூறினார், ''விசுவாசிக்கிற வர்களை இந்த அடையாளங்கள் பின்தொடரும்,'' ஆனால், அவர்கள் அது முட்டாள்தனம் என்று நம்புகின்றனர். அதுமட்டுமல்ல அப்போஸ்தலர் 2:38 மற்றுமொரு காரியம், இதிலே கூறப்பட்டிருக்கிறவைகள் அவர்களுக்கு அந்நிய மான காரியமாகவே இருக்கிறது. அதைப்பற்றி அவர் களுக்கு ஒன்றுமே தெரியாது. தேவனுடைய முழு வார்த்தை யையும் அவர்கள் அறியதவர்களாய் இருக்கின்றனர். அதனை அவர்கள் நிராகரிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் நடப்பது, II தீமோத்தேயு 3- ஆம் அதிகாரத்தில் தீர்க்க தரிசி சொன்னது மிகச்சரியாக நிறைவேறுகிறது. ''கடைசி நாட்களில்... துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்பு உள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியர்களாயிருப்பார்கள். தேவபக்தி யின் வேஷத்தைத்தரித்து அதின் பலனை மறுதலிக்கிறவர் களாகவும் இருப்பார்கள்.''

161. அந்த ஸ்தாபனங்களின் அமைப்பு முறையே மிருகத்தின் முத்திரையாகும். நீங்கள் அதை அறிவீர்கள். இதை இதற்குமுன் நான் சொன்னதாக நீங்கள் ஒருபோதும்

கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள், அதன் காரணமாகவே நான் இவ்வளவு வலியுறுத்தி எடுத்துரைத்தேன். ஏனென்றால் காலம் ஏறக்குறைய நிறைவடைந்துவிட்டது என்று நான் எண்ணுகிறேன், ஆகவே இதை இனி மறைத்துவைக்காமல், வெளிப்படையாக கூறி, சத்தியத்தை அறிவிப்பதே தக்கதாகும். அதைக்குறித்த சத்தியத்தை சொல்வேன். அங்குதான் அவள் இருக்கிறாள். அது சரியாக மிருகத்தின் முத்திரையிடுதல்(அடையாளமிடுதல்) ஆகும். ரோம் அந்த மிருகமாக இருக்கிறது: அவள் ஸ்தாபனமாக இருக்கிறாள், அவளே முதல் முதல் தோன்றிய ஸ்தாபன அமைப்பாக இருக்கிறது.

162. அவளைவிட்டு வெளியே வந்துவிட்டோம், பெந்தேகோஸ்தே ஜனங்களாகிய நாம் அதில் பங்குபெற வில்லை, உடன்படவும் இல்லை; ஆயினும், , "நாய் தான் கக்கியதினிடத்திற்கே திரும்புவது போலவும், பன்றி தான் புரண்ட சேற்றுக்குத் திரும்பிப்போனது போலும்," மறுபடியும் அதற்குள்ளேயே திரும்பி சென்றுவிட்டோம். இதனால், நம்முடைய பெந்தேகோஸ்தே முறைமையும் முடிந்துபோய்விட்டது என்பது ஒன்றும் அதிசயம் இல்லை. அதைப்போலவே மெத்தடிஸ்டுகள், பாப்டிஸ்டுகள், உலக சபைகளின் ஐக்கியம் மற்றும் எல்லாமும் அப்படியே செய்தார்கள். அவை அனைத்தும் சபைகளின் ஐக்கிய சங்கத்தினால் விழுங்கப்பட்டு கொண்டிருக்கின்றன. இவ்வாறு, மிருகத்திற்கு ஒரு சொரூபத்தை உருவாக்கி அதற்கு அதிகாரத்தை கொடுக்கின்றார்கள். அதனுடைய வல்லமையை அதற்குக் கொடுத்தார்கள். "மரணத்திற்கேது வாய் அதன் தலை காயப்பட்டது, ஆனால் மறுபடியும் அது உயிர்பெற்றது," அஞ்ஞான ரோமாக (pagan rome) இருந்து, போப் ஆட்சியுடைய ரோமாக மாறிவிட்டது. ஓ, என்னே, எவ்வளவாய் பிராட்டஸ்டென்டினர் குருடாயிருக்கிறார்கள்! இப்பொழுதே சரியாக அதன் மத்தியில் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். இப்பொழுது உங்களால் ஒன்றும்

செய்ய முடியாது. அந்த அமைப்பு ஏற்கனவே உருவாக்கப் பட்டுவிட்டது. அதை அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள், ஆனால் அதை ஏற்றுக்கொண்டோம் என்பதைக்கூட அவர்கள் அறியமாட்டார்கள். அவர்கள் அதற்குள்ளேயே இருக்கிறார்கள், அவ்வளவுதான் அதைவிட்டு அவர்களால் வெளியே வரமுடியாது. அது ஏற்கனவே முடிந்துபோயிற்று.

163. ஆயினும், ஜனங்களுக்கு அது அந்நிய காரியம் அல்ல, ஏனெனில் இவைகள் ஏற்கனவே பிரசிங்கிக்கப்பட்டு வந்துள்ளது. ஞாபகம்கொள்ளுங்கள், தேவனே அதற்கு சாட்சி கொடுத்து, அது அவருடைய வார்த்தையால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் என்ன கிரியைகளைச் செய்வேன் என்று சொன்னாரோ, மிகச்சரியாக அவர் அதைச் செய்து நிறைவேற்றினார். ஆகவே, எவருக்கும் இனி சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை. ஆம்

164. அது ஒரு பொய்யான இயந்திர அமைப்பாகும் (mechanics). அது, இயேசு என்ன கூறினாரோ அவ்வாறே அது காரியங்களை கொண்டுவந்தது, "உங்கள் பாரம்பரியங் களினால் தேவனுடைய வார்த்தையை அவமாக்குகிறீர்கள்." அவ்வாறே, உண்மையான வார்த்தையை மறுதலிப்பதினால், அவர்கள் மறுபடியும் ஆதியிலிருந்த அதே நிலைக்கே சென்றுவிட்டார்கள், அவர்களுடைய போதனைகள், தொடக்கத்தில் இருந்தது போலவே இருக்கிறது. மேலும், அது கிறிஸ்துவிற்கு எதிரானதாக இருந்து, இந்தக் காலத்திற்குரிய வார்த்தையை விசுவாசிகளுக்குப் போதித்து, அதையே நிராகரித்து தள்ளிவிடுமாறும் அவர்களிடம் கூறுகிறார்கள்.

165. தேவன் அவருடைய ஜனங்கள் மத்தியில், அவருடைய வார்த்தையை மாம்சமாக வெளிப்படுத்திய போது, இயேசு கிறிஸ்துவின் காலத்தில், முதல் கிறிஸ்மஸ்ஸின் போது, பரிசேயரின் இயக்கங்களும் மற்றும் அவர்களின் எல்லா ஸ்தாபனங்களும் என்ன செய்தன?

அவர்கள் "அவர்களுடைய கூட்டங்களில், ஒரு கூட்டத் திற்குக் கூட போகாதிருங்கள். அவ்வாறு போவீர்களானால், அதை நீங்கள் செய்யும்போது, சபையிலிருந்து நீங்கள் நீக்கப்படுவீர்கள்" என்றார்கள்.

166. அதே காரியம் மறுபடியும் சம்பவிப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? இந்த மனிதன் யார்? இவன் எந்தப் பள்ளியில் கல்வி கற்றவன்? இவனுக்கு எந்த ஐக்கிய சங்கத்தின் அங்கத்தினர் அட்டை இருக்கிறது? இவன் எந்தக் குழுவைச் சேர்ந்தவன்? இவன் எங்கிருந்து வருகிறான்? என்று கேட்கிறார்கள். அவர் அந்நாளில் வந்ததுபோலவே இந்நாளிலும் வந்திருந்தால் அவர்கள் மீண்டும் இவ்வாறே கூறுவார்கள். "இந்த மனிதன் எங்கள்மேல் ஆளுகை செய்ய அனுமதிக்கமாட்டோம்." நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று எங்களுக்கு ஒருவரும் சொல்லத் தேவையில்லை. நாங்கள் ஒருத்துவக் காரர்கள். நாங்கள் திரித்துவக்காரர்கள். நாங்கள் பிரஸ்பிட் டேரியன்கள். நாங்கள் இவ்வாறானவர்கள். ஆகையால் இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

167. நீங்கள் அவ்வாறு ஏற்றுக்கொள்ள மாட்டீர்கள் என்பது எனக்கு தெரியும், ஆனால் நீங்கள் வார்த்தையை (ஏற்றுக்கொள்ளுங்கள்) அல்லது அழிந்து போவீர்கள்! அவ்வளவுதான். ஆனால் அதைத்தவிர்த்து வேறு ஒரு வழியும் இல்லை, அந்த வார்த்தையே நம்மை ஒன்றி ணைத்து நிறுத்துகிறது. தேவனுடைய இராஜ்ஜியம் இந்த உலகத்திற்குரியது அல்ல, அது அல்ல, தேவனுடைய இராஜ்ஜியம் இவ்வுலக முறைமையை சார்ந்தது அல்ல. இயேசு அவ்வாறு கூறினார். "என்னுடைய இராஜ்ஜியம் இவ்வுலகத்திற்குரியது அல்ல, அப்படியிருந்தால், என்னு டைய சீஷர்கள் போராடியிருப்பார்கள்" என்று இயேசு கூறினார். அவரே வார்த்தையாய் இருக்கிறார்.

168. நாம் ஆபிரகாமைப் போன்றவர்களாய் இருக்கிறோம். ஆபிரகாம் வார்த்தையைப் பெற்றுக்கொண்டான். அந்த வார்த்தைக்குப் புறம்பாக எதுவாக இருந்தாலும், அது இல்லாதது போலவே அவன் எண்ணினான். அவ்வாறே தேவனால் உண்மையாய் மறுபடியும் பிறந்த பிள்ளைகள் யாராக இருந்தாலும், தேவனுடைய வார்த்தையை ஏற்றுக் கொள்வார்கள், மேலும், மற்றவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப்பற்றி நான் கவலைப்பட மாட்டேன், வார்த்தைக்கு புறம்பாக எந்த அமைப்புக்கள் என்ன பேசினாலும் சரி, எப்பொழுதும் தேவனுடைய வார்த்தையே சத்திய மாயிருக்கிறது.

169. தேவன் தம்முடைய வாக்குத்தத்தங்கள் அடிப்படையிலேயே உங்களைச் சந்திக்கக் கடமைப்பட்டுள்ளார். அந்த வாக்குத்தங்களுக்கு வெளியே, அவரால் உங்களை சந்திக்க முடியாது, ஏனென்றால் அவருடன் உள்ள தொடர்பிலிருந்து உங்களை துண்டித்துக் கொண்டீர்கள். அதன் காரணமாகவே நம்முடைய உலகம் விழுந்து கொண்டிருக்கிறது. முடிக்கப்போகும் நேரத்தில், இதை நாம் சொல்வோமாக.

170. தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாயிருக்கிற எதுவாயிருந்தாலும் அது இல்லாததுபோலவே, நாம் எண்ணுகின்றோம். மனிதர்களால் உருவாக்கப்பட்ட இத்தகைய கோட்பாடுகளை, நாம் ஒருபோதும் நோக்குவது இல்லை. இல்லை ஐயா. இந்த இராஜ்ஜியத்திற்குள் நாம் ஞானஸ்நானம் பண்ணப்பட்டவர்களாய் இப்பொழுதே இயேசு கிறிஸ்துவுக்குள்ளாக உன்னத ஸ்தலங்களில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம், ஓ, என்னே! அபிஷேகம் பண்ணப்பட்ட நம்முடைய இராஜாவுடன், நாமிருந்து கொண்டு அவருடைய இராஜ்ஜியத்திற்குள் விருந்து புசித்து கொண்டிருக்கிறோம். அந்த வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை அபிஷேகம் பண்ணப்பட்டு, நம் மத்தியில்

உறுதிப்படுத்தப்பட்டுள்ள அந்த வார்த்தையை நாம் புசித்துக்கொண்டிருக்கிறோம். ஆமென் வ்வியூ! அங்குதான் அது. இதோ அவருடைய இராஜ்ஜியத்தின் வாக்குத்தத்தம் நம்முடைய கண்களுக்கு முன்னால் நிறைவேற்றப்பட்டிருக் கிறது, அதிலிருந்து எதுவும் உங்களைத் திருப்ப முடியாது. இல்லை ஐயா.

171. ஆபிரகாம், அவனுடைய மனைவி வயது முதிர்ந்தவளாய் இருந்தாலும், அவனும்கூட நாளுக்குநாள் முதிர்வயதுடையவராய் இருந்தபோதிலும், அது ஒரு துளி கூட அவரை கவலை கொள்ளச் செய்யவில்லை. தேவனு டைய வாக்குத்தத்தை அவன் ஒருபோதும் அவிசுவாசத் தினால் தடுமாற்றம் அடையவில்லை. எத்தனை பேர் "அது நடக்காத காரியம், அவரால் அதை அடைய முடியாது" என்று எவ்வளவுதான் கூறினாலும், எப்படியும் அவன் அதில் நிலைத்து நின்றான். ஏனென்றால்? இராஜா அவனுடன் இருந்தார். அவர் அவனுக்கு தரிசனங்களைக் காண்பித்து, என்ன சம்பவிக்கப் போகிறது என்பதைக் கூறினார், அவர் சொன்ன விதமாகவே நடந்தது, அது தேவன் என்பதை அவன் அறிந்திருந்தான்.

172. தேவன் வாக்குத்தத்தம் செய்யும்போது, நீங்கள் அதைக் காண்கிறீர்கள், அதை அவர் கூறுகிறார், அது நிறைவேறுகிறது, அதை உரைக்கிறார், அது நடக்கிறது, சொல்கிறார், அது நடக்கிறது, அது ஒருபோதும் தோல்வி யடையாது, அதுவே இக்காலத்திற்குரிய தேவன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஓ, இந்தக் காலத்திற்குரிய, அவருடைய வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட வார்த்தை யிலுள்ள, உன்னதமான வாக்குத்தங்களின் பேரில் விருந்து உண்கிறோம், ஓ, உறுதிப்படுத்தப்பட்ட விசுவாசத்தோடு. புதிய வானமும், புதிய பூமியும் வந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்திருக்கிறோம். ஆமென். "ஒரு புதிய வானம், ஒரு புதிய பூமி, ஏனென்றால் இப்பொழுது

காண்கிற முதல் வானமும், முதல் பூமியும் ஒழிந்துபோகும்." ஆனால் இந்தப் புதிய வானத்தையும், புதிய பூமியையும் குறித்து, எபிரேயர் நிரூபத்தில் பவுல் சொல்லியிருக்கிறார், இருபது... 14:25-ல் "நாம் அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றிருக்கிறோம்" என்று பவுல் கூறி யுள்ளார். அதற்குள் நாம் எவ்வாறு வந்தோம்? ஒரு மார்க்க அமைப்பு மூலமாக செல்ல முடியாது; ஆனால், தேவ னுடைய இராஜ்ஜியம் உங்களுக்குள் இருக்கிறதே அந்த இராஜ்ஜியம்! இராஜாவும் அவருடைய வார்த்தையும் ஒன்றுதான், அது உங்களுக்குள் இருந்து, நாம் இப்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கிற இந்தக் காலத்தை உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது. தேவன் இந்தக் காலத்திற்கென்று வாக்குத்தத்தம் செய்தவைகள், இதோ இங்கே நிறைவேறிக் கொண்டிருக்கிறது. நாம் இராஜாவோடு ஜீவிக்கிறோம், உன்னத ஸ்தலங்களில் அவரோடே வீற்றிருந்து, இந்தக் காரியங்களை அவர் செய்து கொண்டிருப்பதை கவனித்துக் கொண்டிருக்கிறோம்.

173. அப்படியிருக்க, அந்த வார்த்தையை விட்டு, எவ்வாறு நாம் மனிதனால் உண்டாக்கப்பட்ட ஒரு முறைமையினிடத்திற்கு திரும்ப முடியும்? அவ்வாறு செய்வதால் என்ன நிகழ்கிறது. அது வார்த்தையை மறுதலிக் கிறதாகும். சத்தியத்தைப் புறக்கணியாமல் நீங்கள் பொய்யை ஏற்றுக்கொள்ள முடியாது. அது முற்றிலும் சரியானது. அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா ? (சபையார் "ஆமென்" என்று கூறுகின்றனர்-ஆசி.)

174. நாங்கள் வாழ்கிற இந்த மணிநேரம், ஓ, தேவனே, உலகம் விழுந்துகொண்டிருக்கிறது! விமானத்தளங்களிலே (hangars) வெடிகுண்டுகள் தொங்கிக்கொண்டிருக்கின்றன, மிகச்சரியாக அந்தக் காரியங்களைச் செய்வதற்கு தொங்கிக் கொண்டிருக்கின்றன.

175. சபை ஆயத்தமாய் இருக்கிறது. அவள் முத்திரை யிடப்பட்டு எடுத்துக்கொள்ளப்படுவதற்கு தயாராய் இருக் கிறாள். ஒரு மிகப்பெரிய ஆவியின் ஊற்றப்படுதல் வரப் போகிறது, ஆம், ஐயா, அது சபையை பற்றிக்கொண்டு, அவளை ஆகாயத்திற்குள், எடுத்துக்கொண்டு செல்லப் போகிறார். அப்படியே சரியாய் செய்வார். ஏனென்றால், பாருங்கள், அந்தச் சபை, வார்த்தை, மணவாட்டி... மேலும், கிறிஸ்து, அவருடைய ஊழியம் அவருடைய மணவாட்டிக் குள் நடைபெறுகிறது, அவள் அவருடைய சரீரமாய் இருக்கிறாள். அதாவது வானத்திற்குரிய சரீரம் அல்லது நான் சொல்ல நினைப்பது என்னவென்றால், அவருடைய இயற்கைக்கு மேம்பட்ட சரீரத்தின் வெளிப்பாடாகவும், அவருடைய ஆவிக்குரிய சரீரமாகவும் பூமியின்மேல் விளங்குகிறாள். அவருடைய ஆவி இங்கிருந்துகொண்டு அவருடைய ஜீவன் ஜீவித்துக் கொண்டு தம்முடைய ஜீவனை வெளிப்படுத்தி விவாவகத்தில் அவரும் சபையும் ஒன்றாகும் வரை அவர் தமது ஜீவனை அவளிலே வெளிப்படுத்திக்கொண்டிருக்கிறார். பாருங்கள், அவர்கள் ஒருவராகிறார்கள். அவர் கடைசி நாட்களில் மிகச்சிறிய சொற்ப எண்ணிக்கை உடையவர்களான ஒரு கூட்டத்தை தம்மோடே எடுத்துக்கொள்கிறார்.

176. இப்பொழுது நித்திரையடைந்த கன்னியர்கள் அனைவரும், காலாகாலமாக மரித்தவர்கள், அவர்கள் அனைவரும் எழுந்திருப்பார்கள், பாருங்கள். இப்பொழுது, ஏழாம் ஜாமத்தில், ஏழாவது சபைக் காலத்தில், கடைசியான, கடைசிக் காலத்தில், லவோதிக்கேயா சபைக் காலத்தில், அதன் முடிவில், அவர்களிலிருந்து மிகச்சிறிய குழுவினர் மட்டுமே உள்ளே சென்றனர். ஆனால், அவரவர் காலத்தில் மரித்த அனைவரையும் அது உயிர்த்தெழுதலில் கொண்டு வருகிறது. அதாவது, தாங்கள் வாழ்ந்த அந்த நாளுக்குரிய தேவனால் நியமிக்கப்பட்டு, அந்நாளில் பிரசங்கிக்கப்பட்ட வார்த்தையின்படி ஜீவித்தவர்கள், உயிர்த்தெழுவார்கள். நாம்

சபையின் காலங்களைக்குறித்து ஆராய்ந்து வந்தபோது ஒவ்வொரு காலத்திலும் அக்காலத்தின் ஜனங்களை சந்திக்க வேண்டிய வார்த்தை எதுவென்பதை தெளிவாகக் கண்டோம். எவ்வாறு லூத்தர் எழுப்பப்பட்டார் என்பதையும் நாம் கண்டோம். லூத்தரின் காலத்தில் மனித முகத்தைக் கொண்ட ஒரு ஜீவன் புறப்பட்டுச்சென்றது, அது அவ்வாறு புறப்பட்டுச் சென்றது, அது "சீர்திருத்தக்காரன்" அதன் பொருள் மனிதன் என்பதாகும். இவ்வாறே ஒவ்வொரு சபைக்காலமும், தேவனுடைய வார்த்தை அக்காலத்திற்காக நிர்ணயித்திருந்த தேவைகளை மிகத்துல்லியமாக சந்தித்தது.

177. அதுபோலவே இந்தக் காலத்திலும், இந்தக் கடைசி நாட்களில் தாம் செய்வேன் என்று தேவன் வாக்குப் பண்ணிய காரியங்கள், அடையாளங்கள், அற்புதங்கள் எல்லாம் மிகச்சரியாக இந்தக் காலத்தை சந்தித்தது. சபையும் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டு இயேசுவுடன் எடுத்துக்கொள்ளப்படுதலே பிரவேசிக்கும். ஏனென்றால், "அசைக்கப்பட முடியாத ஒரு இராஜ்ஜியத்தை நாம் பெற்றுள்ளோம்." அது அசைக்கப்பட முடியாது, "வானமும், பூமியும் ஒழிந்து போகும், ஆனால் இந்த இராஜ்ஜியம் ஒருபோதும் ஒழிந்து போகாது." ஆமென். இன்றிரவு அந்த இராஜ்ஜியத்தில் நான் இருப்பதற்காக மிகுந்த மகிழ்ச்சி யுடையவனாய் இருக்கிறேன், ஆமென், இன்று இரவில், அந்த இராஜ்ஜியத்திற்குள் இருப்பது, மகிழ்ச்சியளிக்கிறது. அதில் இருப்பதற்காக நீங்கள் மகிழ்ச்சி அடையவில் லையா? (சபையார் "ஆமென்" என்று கூறுகின்றனர்-ஆசி) ஓ, என்னே, அந்த இராஜ்ஜியத்திற்குள் இருப்பது. அதுதான்!

178. சற்று யோசித்துப்பாருங்கள், இன்று நீங்கள் உங்களுக்கென்று எப்படிப்பட்ட வாக்குபண்ணுவீர்கள்? இன்னும் பத்து அல்லது பதினைந்து வருடங்களில், உலகம் நிலைத்து இருந்தால், அவ்வாறு நிலைத்திருக்குமானால், ஷிரிவ்போர்ட்டில் உள்ள ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு

ஸ்திரியும், நீங்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துப்பாக் கியைக் கையில் எடுத்துக்கொண்டு, தெருக்களில் செல்ல வேண்டும், உங்களோடுகூட, உங்கள் பையில், உங்களை நீங்களே காத்துக்கொள்வதற்கு அவ்வாறு செய்ய வேண்டும். கொடூரமான அக்கிரமக்காரர்கள் எங்கும் பெருகிவிடுவார்கள். அதை எப்படி தடுத்து நிறுத்தப் போகிறீர்கள்? அதற்காக முயற்சி செய்யுங்கள். நல்லது, முழு...

179. கடந்த வாரம் நான் நியூயார்க்கில் இருந்தேன். அங்கே மைல் கணக்கான தூரம் சென்றபோது, அந்நகரின் வீதிகளில் இளம் வயதுடைய ஒழுக்கக்கேடான இளைஞர் கள் மட்டுமே எங்கும் காணப்பட்டனர். அவர்களின் காதுகளில் கடுக்கண்கள் அணிந்துகொண்டு, சீர்குலைந்த தலைமுடியோடும், நீச்சல் உடையையும் அணிந்திருந்தார் கள். பெண் பிள்ளைகள் பிகினி என்று அழைக்கப்படும் மிகக்குறைந்த ஆடைகளை அணிந்து, பெருவீதியில் அவ்வாறு செல்கிறார்கள். பொது ஜனங்கள் அவர்களுக்கு வழிவிட வேண்டும். ஓ இந்த தேசத்திற்கு என்னவாயிற்று? அது ஏனென்றால் –இது ஒழுக்கச் சீரழிவுற்று, தேவனைப் புறக்கணித்த ஒரு தேசத்தின் அடையாளமாய்,இருக்கிறது.

180. இவ்வாறு எரிந்து அழிந்துபோன சாம்பலின்மேல் நீங்கள் எப்படி கட்டிடம் கட்டமுடியும்? இத்தகைய சூழ்நிலையில் அதை எவ்வாறு நீங்கள் செய்யப் போகிறீர் கள்? வீதிகளில் அக்கிரமக்காரர்கள் சுதந்திரமாய் உலாவி நாட்டின் ஜனாதிபதியைக் கூட அவருடைய வாகனத்தி லேயே சுட்டுக்கொல்லும் நிலை ஏற்பட்டிருக்கையில், ஒரு தேசம் எவ்வாறு நிலைத்திருக்க முடியும்.

181.மற்றொரு இரவில், பலவிதமான குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்த மனிதன், அஞ்சாமலே உள்ளே நுழைந்து டெக்சாஸ் காவல்துறையினரின் நூற்றுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் அங்கு நின்றுகொண்டிருக்கும் போதே

அவர்கள் முன்னிலையிலேயே நடந்து வந்தான். அவனை எல்லோரும் பார்த்துக்கொண்டிருக்கையில் தன்னுடைய துப்பாக்கியை வெளியே இழுத்தான், ஒரு மனிதனைச் சுட்டான், இரக்கமற்ற - ஒரு கொலை, செய்துவிட்டு, அவன் அங்கிருந்து நடந்துசென்றான். பின்னர், அவன் மனநிலை பாதிக்கப்பட்டவன் என்று முறையிட்டு, தண்டனை இல்லாமல் விடுதலையாகி விடுவான்.

182. சரியாக நம்முடைய பட்டணத்தில், சில நாட் களுக்கு முன்பு, ஒருமனிதன் வாகனம் பழுதுப்பார்க்கும் நிலையினுள் நுழைந்தான். அங்கே இருந்த ஒரு கார் விற்பனையாளனை, அவனுக்கு பிடிக்காத காரணத்தினால் தன் துப்பாக்கியை வெளியே எடுத்து, அவனை நான்கு அல்லது ஐந்துமுறை சுட்டான். பின்னர் அவன், தான் ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட பைத்தியக்காரன் என்று கூறிய தால், அவனை விடுதலை செய்துவிட்டார்கள். அந்த மனிதனுக்கு "மனநிலை பாதிப்பு" என்ற காரணத்தை முன்வைத்து விடுதலை வழங்கப்படுமானால், ஆஸ்வால்ட் (Oswald) என்பவனுக்கு ஒரு வாய்ப்பு உண்டு, அவன், தான் ஒரு பைத்தியக்காரன் என்று வாதாடுவதற்கு ஒரு வாய்ப்பு உண்டாயிருந்தது.

183. ஆனால் இதற்கெல்லாம் காரணம் என்ன? இது எந்த நிலைக்கு சென்றுவிட்டது என்பதை நீங்கள் பாருங்கள். ஒட்டுமொத்தமாக எல்லாமே சீரழிவால் நிரம்பி யிருக்கிறது! முழுமையும் குற்றமுள்ளது, முழு உலகமே குற்றமுள்ளதாய் நின்றுகொண்டிருக்கிறது. சபையும் தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளதாய் இருக்கிறது. ஆமென். நாம் விழுந்துகொண்டிருக்கிறோம் என்பதில் வியப்பொன்றுமில்லை!

நாம் ஜெபிப்போமாக...

184. தேவனாகிய கர்த்தாவே, இதோ நாங்கள் இங்கு வந்திருக்கிறோம். பிதாவே அந்த வேளை வந்துவிட்டது.

நாங்கள் நினைப்பதைக்காட்டிலும், நேரம் கடந்துவிட்டிருக் கலாம். ஒருவேளை சீரழிவு மிகவும் ஆழமாக வேரூன்றி யிருக்கலாம். வெட்டுக்கிளியும் பச்சைப்புழுவும் தின்று ஜீவனின் எல்லா அடையாளங்களையும் அழித்துவிட்டிருக் கலாம். கர்த்தாவே நீர் இரக்கமாய் இருக்க வேண்டும் என்று உம்மிடத்தில் ஜெபிக்கிறேன். அருள்செய்யும், கர்த்தாவே, ஒரு ஆணோ, ஒரு பெண்ணோ, ஒரு சிறுவனோ அல்லது சிறுமியோ, இப்பொழுது உம்முடைய பிரசன்னத்தில் இருந்தும், உம்மை அறியாதவராயிருந்தால், அவர்கள் இப்பொழுதே உம்மை ஏற்றுக்கொள்ளட்டும், பிதாவே. அது ஷிரிப்போர்ட்டின், அந்தப் புத்தகத்தில் எழுதப்படுகிற கடைசிப் பெயராக இருக்கட்டும்.

185. நாங்கள் எங்கள் தலைகளைத் தாழ்த்தியிருக்கிற இந்த நேரத்தில், இங்கு அப்படிப்பட்ட யாரேனும் இருந்தால் உங்களுடைய கைகளை உயர்த்தி, "சகோதரன் பிரன் ஹாமே, நீர் சொன்னது உண்மை, சரியானது என்று நான் முற்றிலுமாக அங்கீகரிக்கிறேன். உலகம் விழுந்துகொண்டி ருக்கிறது, ஆனால் நாம் ஒருபோதும் விழுந்துபோகாத ஒரு இராஜ்ஜியத்தை பெற்றிருக்கிறோம். விழுந்து போகாது, என்னைப் பொருத்தமட்டில், நான் இராஜ்ஜியத்திற்குள் இருக்கிறேனா அல்லது இல்லையா என்பதைக்குறித்து நிச்சயமற்றவனாக இருக்கிறேன்," என்று கூறலாம்.

186. நீங்கள் ஏதோ ஒருவகையான உணர்ச்சிவசப்படு தலில் சார்ந்துகொள்ளாதீர்கள். நீங்கள் அந்நிய பாஷையில் பேசுகிறீர்கள் என்பதில் சார்ந்து கொள்ளாதீர்கள். அவை களை நான் விசுவாசிக்கிறேன், நிச்சயமாக அந்நிய பாஷை யில் பேசுவதை நான் விசுவாசிக்கிறேன். ஆனால் பிசாசுகள் அந்நிய பாஷை பேசுவதையும், அதற்கு வியாக்கியானம் கூறுவதையும் நான் கேட்டிருக்கிறேன். மேலும் சூனியக் காரர்கள் அந்நிய பாஷையில் எழுதுவதையும் நான்

கண்டிருக்கிறேன். பாருங்கள். நீங்கள் அதன் மூலமாக செல்ல முடியாது.

187. ஆனால் இயேசு கிறிஸ்துவின் ஜீவன் உங்களுக் குள் இருந்தால், அது, தன்னைத்தானே உங்களில் ஜீவித்து தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் விசுவாசிக்கும். ஏனெனில் அவர் தம்மைத்தாமே மறுதலிக்க முடியாது. அவரே வார்த்தையாய் இருக்கிறார்.

188. இப்பொழுது, அவர் வார்த்தையாய் இருப்பார் என்றால், அவர் உங்களுக்குள் இருப்பார் என்றால், பின்னர் நீங்கள் கூறலாம், "நல்லது, சகோதரன் பிரன்ஹாமே, அதை நான் அப்படியே ஏற்றுக்கொள்ளமாட்டேன். நான் இதை விசுவாசிக்கவில்லை, இந்தக் காரியங்கள் எல்லாம் இந்த நாளுக்குரியது என்று நான் நம்பமாட்டேன் என்று கூறலாம்." ஆனால், அது இந்த நாளுக்கென்று வாக்குப் பண்ணப்பட்டுள்ளது, ஓ, சகோதரனே, நீங்கள் வஞ்சிக்கப் பட்டுவிட்டீர்கள். ஒருவகையான ஆவி உங்களுக்குள் இறங்கி, உங்களை வஞ்சித்துவிட்டது.

189. சீமாட்டியே, அது நீங்களாக இருந்தால் அல்லது மனிதனாக இருந்தால் அல்லது நீங்கள் யாராக இருந்தாலும் சரி, தேவனுடைய வார்த்தை அனைத்தும் நிஜம். வார்த்தையில் அது நிஜமாயிருக்கிறது. இயேசு கிறிஸ்து எதற்காக மரித்தார். ஒரு சபையை ஆரம்பிப்பதற்காக அல்ல அல்லது ஒரு உணர்ச்சிவசப்பட்ட கூட்டத்தைப் கொண்டிருப்பதற்காக அல்ல, ஆனால் அவருடைய ஆவியை உடைய ஒருக்கூட்டத்தை உடையவராயிருந்து அவருக்குள் ஜீவிப்பவர்களாக இருக்கவேண்டும் என்பதற் காகவே மரித்தார். அவருடைய மணவாட்டி, அவருடைய வார்த்தை அவர்களுக்குள் இருக்கிறது. அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமே. ஆனால் அந்த வார்த்தை உங்கள் மூலமாக அது கிரியை செய் வதில்லை என்பதை நீங்கள் அறிந்திருந்தால் வேதாகமத்தில் உள்ள

சில காரியங்களை உங்களால் இன்னும் முழுமையாக விசுவாசிக்க முடியவில்லை என்பதை உணர்ந்திருந்தால் ஜெபத்தில் நீங்கள் நினைவு கூறப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்களா?இப்பொழுது, எல்லோருடைய கண்களும் மூடி இருக்கட்டும், ஒவ்வொருவருடைய தலைகளும் தாழ்த்தி இருக்கட்டும், இந்த காலம்தாழ்ந்த வேளையில் நான் வியப்படைக்கிறேன்.

190. ஏறக்குறைய உணர்வடையும் காலம் கடந்து போயிருக்கலாம். பாருங்கள், ஏனென்றால் ஒருநேரம் வரும், அப்பொழுது தேவனுடைய ஆவி பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும், அதற்குப்பிறகு எந்த வாய்ப்பும் இருக்காது. சபை சிறிது காலம் இங்கே நிலைத்திருக்கும். அது சரியா, அவள் தொடர்ந்து நித்திய காலமாக இழக்கப்பட்டவர் களுக்கு பிரசங்கித்துக் கொண்டிருப்பாள். ஏனெனில் யுகங்கள் தோறும் வந்த ஒவ்வொரு ஊழியமும் செய்ததுபோல, அதன் இறுதிக்கட்டத்தில் இழந்துபோனவர் களுக்கே பிரசங்கிக்கப்பட்டது. ஒவ்வொரு ஊழியத்தின் கடைசி பகுதியில், நித்திய காலமாக இழக்கப்பட்டவர் களுக்கு பிரசங்கிக்கப்பட்டது. அவ்வாறே, இக்காலத்திலும் ஒரு ஊழியம் இருக்கும். அவர்கள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மறுத்த பிறகு, அந்த ஊழியம் நித்திய காலமாக இழக்கப்பட்டவர்களுக்கே பிரசங்கிக்கப்படும்.

191. ஆனால், இன்றும் உங்கள் இருதயத்தில் ஒருசிறு தீப்பொறியாவது எரிந்து கொண்டு இருக்கிறதுபோல் காணப்பட்டால், அது எதைக் காட்டுகிறது என்றால், கிறிஸ்து உங்களுக்குள் வாசம்பண்ணவும், உலகம் முழுவதும் உங்களுக்கு மரித்ததாயிருக்கவும் நீங்கள் விரும்பினால் உங்களுடைய கரத்தை உயர்த்தி, "சகோதரன் பிரன்ஹாம் உங்கள் ஜெபத்தில் என்னை நினைவுகூறுங்கள்" என்று கூறுங்கள். கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக. ஆம், ஆம். பத்து அல்லது பதினைந்து கரங்கள். நாம் ஜெபிப்பதற்கு

முன் வேறுயாராவது இருக்கிறீர்களா? இப்பொழுது, இன்னும் இரண்டு அல்லது மூன்று நிமிடங்களில் நாம் முடிக்கப்போகிறோம். வாலிப பெண்ணே, தேவன் உன்னை ஆசீர்வதிப்பாராக.

192. சற்றே அதை சிந்தித்துப்பாருங்கள், அதை நினைத்துப்பாருங்கள், இது மிகவும் காலதாமதமாகி விட்டால், என்ன செய்வீர்கள்? அவர் கதவை தட்டுகின்ற கடைசி நபராக நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள்?

193. அவள் (உலகம்) விழுந்துகொண்டிருக்கிறாள், அதை நாம் அறிவோம். நீங்கள் இங்கேயே தங்கியிருக்க முடியாது, அது ஒன்றுமட்டும் நிச்சயம். நீங்கள் இங்கேயே தங்கியிருக்க முடியாது. நீங்கள் சென்று கொண்டிருக் கிறீர்கள். இதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் போய்க்கொண்டிருக்கிறீர்கள். அவ்வாறு நீங்கள் செல்வீர் களேயானால்...

194. ஆகையால், பதற்றப்படாதீர்கள். "நான் இந்தச் சபையைச் சார்ந்தவன்" என்று கூறாதீர்கள். அதைக்குறித்து நிச்சயம் உடையவர்களாயிருங்கள். கிறிஸ்து உங்களுக்குள் ஜீவிக்கவில்லையெனில்,உங்களுக்குள் வாசமாயிராவிட்டால், உன் சிந்தை, உன்னுடைய இருதயம், ஆத்தும, சரீரம் யாவையும், அவர் வாசமாயிருக்கும் வரை நீங்கள்...

195. நீங்கள், "நல்லது, நான் நினைக்கிறேன்..." என்று நீங்கள் கூறலாம். சகோதரனே, உங்களுடைய சொந்த எண்ணங்களுக்கு இங்கே இடமில்லை. கிறிஸ்துவில் இருக்கும் அதே சிந்தை உனக்குள்ளும் இருக்கட்டும்! "இவ்வாறான நாட்கள் இருக்க வேண்டியதில்லை. உனக்குள்ளும் என்று நினைக்கிறேன்... இந்த வார்த்தைக்கு அந்த அர்த்தம் இல்லை என்று எண்ணுகிறேன்." அப்படிப்பட்ட எண்ணங்கள் நம்மில் காணப்படக்கூடாது.

196. கிறிஸ்துவின் சிந்தை நமக்குள் இருந்தால், அந்த வார்த்தை சத்தியம் என்பதை அடையாளம் கண்டு கொள்வோம், அது நம் மூலமாக ஜீவிக்கிறது. நீங்கள் அதற்கு எதையும் செய்யத் தேவையில்லை. அது கிறிஸ்துவாகும்!

197. ஒரு தர்பூசணிக் கொடியிலுள்ள ஜீவனை எடுத்து பூசணிக் கொடியில் வைத்தால், அது தர்ப்பூசணிப் பழங் களையே கொடுக்கும். அதை வேறுவிதமாயிருக்க முடியாது, ஏனென்றால் அதற்குள் இருக்கும் ஜீவன் அப்படிப்பட்டது.

198. நீங்கள், "நல்லது, இந்த வார்த்தையை நான் விசுவாசிக்கமாட்டேன்," என்று சொல்வீர்களானால், அது கிறிஸ்துவின் ஆவியல்ல. பாருங்கள், வேறு ஏதோ ஆவி உங்களுக்குள் இருக்கிறது.

199. நாம் ஜெபிப்பதற்கு முன், வேறு யாராவது இருக்கிறீர்களா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக மற்றும் உங்களை, உங்களை. ஆம், அது நல்லது. இப்பொழுது வேறு யாராவது இருக்கிறீர்களா, சற்றுநேரம் இப்பொழுது வாலிபனே, தேவன் உன்னை ஆசிர்வதிப்பாராக. சரி, வேறு யாராவது இருக்கிறீர்களா? சிறிய சீமாட்டியே. நீங்கள், சகோதரியே. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சரி வேறு யாராவது உண்டா? பின்னால் இருக்கிற உன்னை, தேவன் ஆசீர்வதிப்பாராக.

200. இப்பொழுது பயம்கொள்ள வேண்டாம். இப்பொழுது வெட்கப்படவும் வேண்டாம். நாளை இரவு என்பது மிகவும் காலதாமதமாகிவிடக் கூடும் பாருங்கள்? அது இன்று இரவேகூட இருதயத்துடிப்பு நின்றுபோய் விடும். ஒருவேளை இன்றிரவே அவரை நிராகரிக்கிற உங்கள் கடைசி வாய்ப்பாக இருக்கலாம்.

201. இங்கு இருக்கிறவர்களில் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றிராதவர்கள் எத்தனைபேர்? உங்கள் கரங்களை உயர்த்துங்கள், நீங்கள் அதைப் பெற்றிருக்கவில்லை என்பதை அறிவீர்கள். என்னே! அதுதான் நீங்கள் உள்ளே செல்லும் வழி. பரிசுத்த ஆவியே கிறிஸ்து. அவ்வாறுதான் நீங்கள் இராஜ்ஜியத் திற்குள் முத்திரையிடப்படுகிறீர்கள். எபேசியர் 4:30, "அன்றியும் நீங்கள் மீட்கப்படும் நாளுக்குகென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதீர்கள்." நீங்கள் – வேதாகமத்தைப் பற்றிய உங்கள் எண்ணங்களில் குறித்து, இது சத்தியம் அல்ல" என்று எண்ணமுடையவர்களாக இருந்தால், உங்களுக்குள் இருக்கும் ஆவி கிறிஸ்துவினுடையது அல்ல, ஏனென்றால் கிறிஸ்துவே வார்த்தையாய் இருக்கிறார்.

202. ஒரு இராஜ்ஜியம் இருக்கிறது, அது அசைக்கப்பட முடியாது, அதுதான் வார்த்தை. அதுதான் அந்த அசைக்கப் படாத இராஜ்ஜியம். "வானமும் பூமியும் ஒழிந்துபோகும், என்னுடைய வார்த்தையோ ஒழியாது." அந்த வார்த்தை உங்களுக்குள் இருந்தால்! "நீங்கள் என்னிலும், என் வார்த்தை உங்களிலும் இருந்தால்; நீங்கள் கேட்டுக் கொள்வது எதுவோ, அது உங்களுக்குச் செய்யப்படும். நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்," பரிசுத்த யோவான் 14:12, "நான் செய்த கிரியைகளை நீங்களும் செய்வீர்கள், அவைகளைக் காட்டிலும் பெரிதான கிரியை களையும் செய்வீர்கள், ஏனென்றால் நான் என் பிதாவினிடத்திற்கு போகிறேன். கொஞ்சக்காலத்தில் இந்த உலகம் என்னைக் காணாது: நீங்களோ என்னைக் காண்பீர்கள், ஏனென்றால் நான் உங்களோடு இருப்பேன், உங்களில், உலகத்தின் முடிவுபரியந்தம்."

203. அவருடைய கிரியைகள் எவ்வாறு இருந்தன என்பதை கவனியுங்கள், அவை கடைசி நாட்களில் நம்

மத்தியில் அது திரும்பவும் வந்திருக்கிறதா என்பதை பாருங்கள், அதை அவர்கள் புறக்கணித்தார்களா? உலக முழுவதும்! மறுபடியும் உலகம் விழுந்துகொண்டிருக்கிறது, இந்த கிறிஸ்மஸ், அது அந்தக் கிறிஸ்துமஸ் போலவே இருக்கிறது.

204. எங்கள் பரலோகப் பிதாவே, இன்றிரவில் அநேக கரங்கள் உயர்த்தப்பட்டன, ஒருவேளை முப்பது அல்லது நாற்பதாக இருக்கலாம், இந்த சிறு கூட்ட ஜனங்கள், இன்று இரவு கரங்களை உயர்த்தினர், அவர்கள் எங்கு இருக்க வேண்டுமோ அங்கு அவர்கள் இல்லை என்பதை அறிந்த வர்களாக இருக்கிறார்கள். நீர் அவர்களுக்குள் வாசமா யில்லை என்பதை அறிந்துள்ளனர்; அது முழுமையாக இல்லை. சிலர், ஒருவேளை வேதாகமத்தில் உள்ள சில காரியங்களை பற்றியும் அவர்கள் "நான் இப்பொழுதே... நான் - நான் அதை ஏற்றுக்கொள்கிறேன். ஏனென்றால், நான் அதைச் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறேன்," என்று கூறுகின்றனர்.

205. ஆனால் கர்த்தாவே, நீர் வார்த்தையாய் இருக்கிறீர் என்பதாய் வாக்குப்பண்ணியுள்ளீர், நீர் வார்த்தையாய் இருக்கிறீர். "நான் உங்களிடத்தில் வருவேன், நீங்கள் என்னை அறியும்படி செய்வேன்" உம்முடைய வழிமுறை கள் ஒருபோதும் மாறாது என்பதை நாங்கள் அறிந்திருக் கிறோம்.

206. நீர் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வந்தபோது, "வார்த்தை தீர்க்கதரிசிகளிடம் வந்தது" என்று கூறினீர். அது சம்பவித்தபோது, அவர்கள் தீர்க்கதரிசனம் உரைத்தார்கள், அது நிறைவேறிற்று, ஏனென்றால் அது தேவனாக இருந்தது.

207. இப்பொழுது, நீர் எங்களை அனுப்பும்போது, உலகமெங்கும் போகும்படி கட்டளையிட்டபோது, அவர் களை சீஷராக்கி, "பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல்

வரும்போது, நான் உங்களுக்குப் போதித்தவைகளை உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' என்பதை உணர்கிறோம். அது மறுபடியும் நடக்கிறது! இனிவரும் காரியங்களை உனக்குக் காண்பிப்பார்'' இன்றும் அதே! ''பூர்வ காலங் களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்க தரிசிகள் மூலமாய் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றிய தேவன், இந்தக் கடைசி நாட்களில் அவருடைய குமாரன் கிறிஸ்து இயேசு மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்.'' பரிசுத்த ஆவியானவரே வருகிறார், அவர் எழுதப்பட்ட வார்த்தையை வெளிப்படுத்துகிறவர், அவர் வரும் காரியங் களைக் குறித்து காண்பிப்பவர்! அது, ''தேவனுடைய வார்த்தை,'' எபிரேயர் 4-ல், ''...இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது'' என்று கூறப்பட்டுள்ளது.

208. பாவியான மனிதனே, சபை மனிதனே, இன்று, நீ உட்கார்ந்து பார்த்தும் அதே காரியத்தை செய்துகொண்டி ருக்கிறாய், அதை அசுத்த ஆவி என்று அழைக்கிறாய், கடந்த நாட்களில் அவர்கள் என்ன செய்தார்களோ அதையே செய்கிறாய். ''வீட்டு எஜமானையே பெயல் செபூல் என்று அழைத்தார்களானால்,'' அதை நாம் பார்க்கிறோம்.

209. கர்த்தாவே, தேவனே, இப்பொழுது இதைக் காட்டிலும் மேலானதாய் நாங்கள் என்ன செய்வோம்? தாகமாயிருக்கிற இருதயத்தை உடையவர்கள் தங்கள் கரங்களை உயர்த்தியுள்ளார்கள் கர்த்தாவே, அவர்கள் இப்பொழுதே ஏற்றுக்கொள்ளும், ஒவ்வொரு இருதயத் தையும் உம் அன்பினால் நிரப்பும். அதை அருளிச்செய்யும்.

210. நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்தி இருக்கிற இந்த நேரத்தில், கைகளை உயர்த்தின நீங்கள், மேடைக் கருகில் வர விரும்பினால், மறுக்காமல் - அதை மறுக்க

வேண்டாம், பாருங்கள். இப்பொழுது அடுத்த கணம், இப்பொழுதே சரிப்படுத்திக்கொள்ளுங்கள், துரிதமாக இங்கு வாருங்கள், சற்றுநேரம் நில்லுங்கள். ஒருவேளை நீங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளப்போகும் இரவாக இருக்கக்கூடும்.

211. நண்பர்களே, கவனிங்கள், எல்லா நேரங்களிலும் இது கடைசியாக இருக்கப் போவதில்லை. அது, முடியப் போகிறது. இப்பொழுதே அது முடிவடைகிறது, மேலும் ஏற்கனவே அது முடிவடைந்து விட்டதாயும் இருக்கலாம். ஆனால் கிறிஸ்துவினிடத்தில் வர வேண்டும் என்ற வாஞ்சை உங்களுக்குள் இருக்கும் வரைக்கும், அதற்கான உங்களுடைய முயற்சியும், நிச்சயமாக உங்களை அவ்வழியில் இழுத்துக் கொண்டிருக்கிற ஒன்று இன்னும் இருக்கிறது.

212. இப்பொழுதே நீங்கள் ஜெபத்திற்காக இங்கு வந்து நிற்க மாட்டீர்களா? வாஞ்சையுடைய நீங்கள், நடந்து வந்து பீடத்தை சுற்றிலும், நாம் நம்முடைய தலைகளைத் தாழ்த்திக்கொண்டிருக்கிற நேரத்தில், சற்றுநேரம் நிற்கவும். இப்பொழுது ஜனங்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அது சரியா. பீடத்தைச் சுற்றிலும் வந்து நில்லுங்கள். நீங்கள் சொல்லுங்கள், "உலகம் விழுந்துகொண்டிருக்கிறது, இந்த உலகம் எனக்குள் இருக்க நான் விரும்பவில்லை, எனக்குள் ஒரு இராஜ்ஜியம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன், அது விழுந்து போகாது" என்று கூறுங்கள்.

213. இயேசு இவ்வாறு கூறினார்; "ஒன்றும் இழக்கப் பட்டுப் போவதில்லை. கடைசி நாட்களில் அவர்களை மறுபடியும் எழுப்புவேன். ஆம் அவைகளை நான் எழுப்பு வேன்" என்றார். அவர் அதை வாக்குப் பண்ணியுள்ளார், ஆகவே நீங்கள் விழுந்துபோக முடியாது. தேவன் அதை எழுப்பப்போகிறார், அது என்ன என்பதைப்பற்றியோ, அது

எப்படி நடக்கும் என்பதைப்பற்றியோ நான் கவலைப்படப் போவதில்லை, அவர் நிச்சயமாக அதை எழுப்பப்போகிறார்.

214. மனிதனால் எதையும் முற்றிலும் இல்லாமல் உருவழிந்து போகச் செய்ய முடியாது என்பதை அறிந் திருக்கிறீர்களா? ஒன்றும் முழுவதுமாக போகச் செய்ய நீங்கள் கூறலாம், "அக்கினியைக் குறித்து என்ன, எதை யாவது எரிக்கும்போது என்ன ஆகிறது?" அது அதை முற்றிலுமாக இல்லாமற்போகச் செய்வதில்லை. அதிலுள்ள அணுக்கள், அவற்றை இணைத்திருந்த இரசாயணக் கூறுகளிலிருந்து பிரிக்கின்றன. அதனால் வெப்பம் உண்டா கிறது. பின்னர் அது தன் மூல நிலைக்கே திரும்புகிறது, தொடக்கத்தில் என்னவாக இருந்ததோ அந்த நிலைக்கு; அமிலங்கள், வாயுக்கள், ஒளிகள், இன்னும் ஏதுவாக இருந்தாலும் எதையும் முற்றிலும் அழித்துவிட முடியாது. இந்த உலகம் போதுமான நீண்டகாலம் நிலைத்துவிட்டது என்றால், அது சிறு துண்டு காகிதம்போல் மாறிவிடும் அல்லது மற்றுமொரு மரமாகவோ அல்லது நீங்கள் கொழுத்துகின்ற ஒன்றாகவோ மாறிவிடும். அதன் மூல நிலைக்குத் திரும்பிவிடும். உங்களால் அதை முற்றிலும் இல்லாமற்போகச் செய்ய முடியாது. தேவன் அவ்விதமாக அதை உருவாக்கியுள்ளார்.

215. ஓ, தேவனுடைய சிருஷ்டிப்பை உன்னால் அழிக்க முடியாது, முற்றிலும் உண்மை, ஆகவே, அவர் வாக்குத் தத்தம் பண்ணினதை அதிக அதிகமாய் எழுப்புவார் என்பதில் அதிக நிச்சயமுடையவர்களாயிருக்க வேண்டும்.

216. நீங்கள் வரமாட்டீர்களா? இப்பொழுது இன்னும் அநேகர் இருக்கிறார்களா? ஒரு சிறு குழுவினர் இங்கே இருக்கிறார்கள், பாதிப்பேர்கூட தங்கள் கரங்களை உயர்த்த வில்லை. உங்கள் கரங்களை உயர்த்தினபோது, அதை உண்மையான மனதோடு செய்தீர்கள் என்று நான் எண்ணினேன், குறிப்பாக இப்படிப்பட்ட இந்த செய்தியில்.

217. இங்கிருக்கிற உங்களில் எத்தனைபேர், உங்கள் தலைகளை இப்பொழுது தாழ்த்தியிருக்கும் இவ்வேளையில், தேவன் அவருடைய வாக்குத்தத்தத்தை காத்துக்கொள்ளு கிறார் என்றும், இந்த மேடையிலேயே, இருதயத்தின் இரகசியத்தை பகுத்தறிந்தார் என்றும் அறிந்திருக்கிறீர்கள்? ஒன்று, ஒருசமயம் மட்டுமல்ல, அவர் சொன்ன ஒன்றாகிலும் நடக்காமல் போகவில்லை. அது சத்தியம் என்பதை அறிந் திருக்கிறீர்கள். கூட்டங்களில், எல்லா இடங்களிலும், இயேசு கிறிஸ்து பூமியில் இருந்தபோது செய்த அனைத்தையும் மிகச் சரியாக செய்தார். அதை அவர் மறுபடியும் செய்தார். அதை நீங்கள் அறிவீர்கள். அதைக்குறித்து விழிப்புள்ள வர்களாய் இருக்கிறீர்கள். அவருடைய சுகமாக்குதலைக் குறித்து சிந்தித்து கொண்டிருந்தேன்.

218. இரண்டு வாரங்களுக்குமுன், நான் நியூயார்க்கிற்கு செல்வதற்குமுன், தொண்டையில் புற்றுநோயுடன் ஒரு ஸ்திரி வந்தார்கள். கூட்டத்தில் பரிசுத்த ஆவியானவர் அவளிடத்தில் பேசினார். அவள் இங்கே இருந்தாள், ஞாயிற்றுக்கிழமை, ஒரு சிறு துணியில் அந்த புற்றுக் கட்டியை கொண்டு வந்திருந்தால். அவள் இருமியபோது அந்த புற்றுக்கட்டி வெளியே வந்துவிட்டது. மருத்துவர்கள் அதைப் பார்த்தார்கள், "புற்றுக்கட்டியில் இருந்த ஜீவன் போய்விட்டது, அது வெளியேறிவிட்டது" என்றார்கள். அவள் எல்லாவற்றையும் இருமி வெளியேற்றினாள்.

219. இன்னொரு பெண்மணிக்கு, பெண்சுரப்பியில் புற்றுநோய் இருந்தது. அவள் பெரிதாக்கப்பட்ட புகைப் படத்தையும், அதனுடன் மருத்துவரின் அறிக்கையும் இணைக்கப்பட்டிருந்தது. இரண்டு நாள்கள் கழித்து அந்தப் புற்றுநோயும் அவளுடைய உடலிலிருந்து வெளியேறி விட்டது.

220. அங்கே நின்று கொண்டிருக்கும் ஒரு சிறு பையன், பல மாதங்களாக நினைவாற்றலை முற்றிலும்

இழந்திருந்தான். அது மாதங்கள், மாதங்கள் என்று மாதங்கள் கடந்துவிட்டிருந்தன. கீழே விழுந்து, அவன் தலையின் பின்பக்கத்தில் காயமடைந்தான். அவன் யாரென்று அவனுக்கே தெரியவில்லை அல்லது எங்கே இருந்தான் என்றும் அவனுக்கே தெரியவில்லை. ஒரே ஒரு வார்த்தை சொல்லி, கைகளை அவன் மீது வைத்தபோது, "உன்னு டைய பெயர் என்ன?" என்று கேட்டேன்.

அதற்கு அவன், "பில்லி ட்யூக்ஸ்" (Billy Dukes) என்று கூறினான்.

"உன்னுடைய வயது என்ன?" என்று நான் கேட்டேன்.

அதற்கு அவன், "ஒன்பது வயதாகிறது" என்றான். நான் இப்பொழுது எங்கே இருக்கிறேன்" என்றான்.

221. தேவனுடைய வல்லமை! சில வாரங்களுக்கு முன்பு கொலராடோவில் (Colorada) என்னோடு நீங்கள் இருந் திருந்தால் நன்றாயிருக்கும். அங்கே ஒன்று நடந்தது, அது உங்களை அசைக்கும், அது என்னவென்று அறிந்திருக் கிறீர்களேயானால், நண்பர்களே, நாம் முடிவு நேரத்தில் இருக்கிறோம்.

இன்னும் இதை தள்ளிப் போடாதீர்கள். வாருங்கள். வேறுயாராவது ஒருவர் இருந்தால் மேலே வாருங்கள். வருவீர்களா? நீங்கள் வருவீர்களா?

222. இப்பொழுது, நீங்கள் வராவிட்டால், பாருங்கள், நான் – நான் ஒன்றும் செய்ய முடியாது. நான் – நான் – நான் – நான்... என்னால் முடிந்ததெல்லாம் உங்களுக்கு சத்தியத்தை சொல்வது ஒன்றே. பாருங்கள், அதன்பிறகு உங்களைப் பொறுத்தது. நோவாவைப்போல, அவர் உள்ளே சென்றார், அவருக்கு பின்னால் பேழையின் கதவு மூடப் பட்டது, சற்றுநேரம் ஒன்றுமே நடக்கவில்லை; ஆனால் வெளியிலே உலகம் அழிந்து போயிற்று, அந்த உலகம்

வழக்கம்போலவே தன் வாழ்க்கையை தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தது. பாருங்கள்?

223. இயேசுவை சிலுவையில் அறைந்தபின், பிலாத்து தன்னுடைய வாழ்க்கையை வழக்கம்போலவே தொடர்ந்தன. கர்த்தருக்கு சித்தமானால், இன்னும் சில இரவுகளில் "உங்கள் கைகளில் இரத்தம்" என்ற தலைப்பில் பிரசங்கிப் பேன்.

இப்பொழுது கவனியுங்கள், நாம் முடிப்பதற்கு முன்பாக, வேறு யாராவது இருக்கிறீர்களா?

224. இப்பொழுது, தேவனை அறிந்துள்ள, உண்மை யிலேயே தங்களை கர்த்தருக்கென்று பிரதிஷ்டை செய்து கொண்ட ஆண்களையும், பெண்களையும், நான் ஒன்று கேட்கப் போகிறேன், இங்கே வந்து நில்லுங்கள், இந்த ஜனங்கள் மீது உங்கள் கைகளை வையுங்கள். இப்படிப் பட்ட வாய்ப்பை அவர்கள் பெற்றிருப்பது இதுவே அவர் களுக்கு கடைசித் தருணமாக இருக்கும். ஆகையால் தேவனை அறிந்த பிரதிஷ்டை செய்யப்பட்டவர்களே ஒப்புக்கொடுத்தவர்கள் உங்களில் சிலர், மேலே வந்து இந்த ஜனங்களுடன் நில்லுங்கள். அவர்கள் இளஞ்சிவப்பான நம்முடைய அட்டையை வைத்துள்ளார்கள், ஏறக்குறைய எல்லாருமே, அதன் பொருள் என்னவென்றால் உங்கள் மத்தியில் அந்நியராயிருக்கிறார்கள். அது சரி என்று நினைக்கிறேன், வாருங்கள், வந்து உங்கள் கைகளை அவர்கள் மீது வையுங்கள். ஜீவ கூடாரத்தைச் (Life Tabernacle) சார்ந்த உறுப்பினர்கள் இங்கே வாருங்கள், பிரதான சபையைச் சார்ந்த ஒரு சிலர் இங்கே வர விரும்புகிறீர்களா? வாருங்கள், இதுதான் அந்த மணிநேரம். இந்த ஜனங்களை - நீங்கள் நேசிக்க மாட்டீர்களா? வைக்க மாட்டீர்களா? என்னே! நம்முடைய வைராக்கியம் எங்கே போயிற்று? நம்மை அசைய செய்கிற ஏதோ ஒன்று அது எங்கே இருக்கிறது? என்னவாயிற்று உங்களுக்கு?

இப்பொழுது சபையார் சற்றுநேரம் ஜெபத்திற்காக காத்திருந்தால் நல்லது.

225. இங்கு நின்று கொண்டிருக்கும் ஜனங்களே, இப்பொழுது கவனியுங்கள், உணர்ச்சியின் மேல் சார்ந்து கொள்ளாதீர்கள், இருப்பினும் அதற்குள்ளே உணர்ச்சி வசப்படுதல் இருக்கிறது. நீங்கள் அந்நியபாஷை பேசப் போகிறீர்கள் அல்லது பேசவில்லை. அதைக்குறித்து ஒன்றுமே சிந்தியாதீர்கள். தேவன் அதைப் பொறுப் பெடுத்துக்கொள்வார், பாருங்கள். இயேசு கிறிஸ்து உங்கள் ஜீவியத்தில் வரவேண்டும் என்று கேளுங்கள், உங்கள் மூலமாக அவர் ஜீவிக்கட்டும். உங்கள் சொந்த எண்ணங் களை விரும்பாதீர்கள். அவருடைய சிந்தையே உங்களில் இருக்க வேண்டும், அதையே விரும்புங்கள். "கிறிஸ்துவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." ஓ, இது...

226. இது, நல்லது, கடைசியாக, ஒரு முறை இந்தக் காரியங்களை எல்லாம் கேட்கப் போகிறீர்கள். இப்பொழுது, கவனியுங்கள், எல்லாப் பார்வையாளர்களும், கேட்டுக் கொண்டிருக்கிற அனைவரும் உங்கள் கால்களில் எழுந்து நிற்கவேண்டும் என்று விரும்புகிறேன், வெளியில் இருப் பவர்களும்கூட. இப்பொழுது, பரிசுத்த ஆவியின் அபி ஷேகத்திற்காக இங்கே மேலே வந்துள்ள அன்பான ஜனங் களே, நாளைக்கு நன்றி அறிவிப்புக் கூட்டம், நாளைக்கு ஒரு வேலையும் கிடையாது. இது உங்கள் ஆத்மா, சகோதரனே, சகோதரியே. இது உங்களுடைய நித்தியமாக போய்சேருமிடம். இது, அது இப்பொழுது இருக்க வேண்டும் அல்லது ஒருபோதும் கிடையாது. மேலும் ஒரு சிறிய இழப்பை உங்கள் இருதயத்தில் உணர்ந்து கொள்ளுகிறவர்களாய் இருந்தால்! இந்த சத்தியத்தைக் குறித்து சற்றே சிந்தித்துப் பாருங்கள், அது சரியாக நமக்கு முன்வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் காரியங்களில் மரித்த வர்களாக இராதிருங்கள், ஜனக் கூட்டமே. அது உண்மை.

அது உறுதிப்படுத்தப்பட்ட ஒன்றாகும், உண்மை, எல்லா நேரங்களிலும் பரிபூரணமானது. அது உறுதிப்படுத்தப்பட்ட வார்த்தையாக இருக்கிறது!

227. இங்கே நின்றுகொண்டிருக்கிற ஒரு மனிதனைப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். அவன் பெயர் இப்போது எனக்கு நினைவில் இல்லை. அது பிளேயர் (Blair) என்று நம்புகிறேன், மரியாதைக்குரிய பிளேயர். நான் ஹாட்ஸ் பிரிங் என்னுமிடத்தில் இருந்த போது, அது அநேக நாட்களுக்கு முன்பல்ல, கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களில் ஒரு மனிதனைத் தெரிந்துகொண்டேன், அந்த மனிதன் அங்கே உட்கார்ந்து கொண்டிருந்தான், ஒரு அசுத்த ஆவி அவனைப் பிடிக்கும்படி முயற்சி செய்துகொண்டிருந்தது, என்மீது சந்தேகம் கொள்ளும்படிச் செய்ய முயன்றது. இப்பொழுது என்ன நடந்தது என்பதைக் கவனியுங்கள். "சிறிது நேரத்திற்கு நான் உனக்குத் தேவையாய் இருக் கிறேன், பாருங்கள்." அது நீண்ட காலத்திற்கு முன்பல்ல, அவருடைய மனைவி என்னை அழைப்பது வரைக்கும், சில வாரங்களுக்கு முன்பு, அந்த மனிதன் மரித்துக் கொண்டிருந்தான். பாருங்கள்?

228. அந்த மனிதன் ஏற்றுக்கொண்டான், அது பிசாசு என்பதை அறிந்துகொண்டான், அது ஒருவகையான ஏமாற்றுச்செயல் என்று அவன் எண்ணவேண்டும் என்று பிசாசு முயற்சித்துக் கொண்டிருந்தது. அவன் "ஆனால் அதை எவ்வாறு தெரிந்துகொண்டார்? என்று சிந்தித்தான். ஆகவே, அதன்பின் அவன்... ஆனால் ஜெபத்தின் மூல மாக அந்த அசுத்த ஆவியை அவனிலிருந்து துரத்தி னோம்.

229. அதற்குப்பின் சில வாரங்களுக்கு முன்னால், பாருங்கள், அந்த நேரம் வந்துகொண்டிருக்கிறது என்பதை அறிந்த சாத்தான், அங்கே அவன் சரீரத்தில் ஒரு பக்கம் வீக்கம் கண்டு படுத்திருந்தான். அவருடைய மனைவியோ

அல்லது வேறு யாரோ கூறினார்கள் என்று நான் விசுவாசிக் கிறேன், காய்ச்சல் மிகவும் கொடூரமாக இருந்தது, சுய நினைவை இழந்த நிலையிலும் இருந்தான்; அது என்ன வென்று தெரியவில்லை, அவன் சரிரத்தின் ஒரு பக்கத்தில் தொற்று உண்டாயிருந்து, வீக்கத்தை ஏற்படுத்தியிருந்தது. நான் டூசானில் (Tucsan) இருக்கும்போது, அவனுடைய மனைவி என்னை அழைத்தாள். "சகோதரியே கைகுட்டை வைத்திருக்கிறீர்களா? என்று நான் கேட்டேன். அதற்குப் பதிலாக அவள் வேறொன்று வைத்திருந்தாள் என்று நான் நம்புகிறேன், ஒரு சிறிய கழுத்துதுண்டோ, வேறு ஏதோ ஒரு துணியோ இருந்ததாக நான் நினைக்கிறேன். "நான் அதை காண்கிறேன்," என்று கூறினேன். அதை எடுத்துசென்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சகோ பிளேயர் மேல் போடுங்கள் என்றேன். அவர் அவளிடம் என்னை அழைக்கும்படி கூறினார்.

230. சாத்தான் அவரை அவிசுவாசிக்க செய்வதில் வெற்றி பெற்று அவரை மேற்கொண்டிருந்தால் என்னவா யிருக்கும்? இன்றிரவு தன் இருதயத்தின் மேல் வேதாக மத்தை அணைத்து கொண்டவராய் அவர் இங்கு நின்று கொண்டிருக்க முடியாது. பாருங்கள்?

231. இந்த வார்த்தையை அவிசுவாசிக்கும்படி செய் யவே சாத்தான் முயற்சிக்கிறான். அது சரியே. அவனுக்கு செவி கொடுக்காதீர்கள். "இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராய் இருக்கிறார்" என்பதை ஞாபகம்கொள்ளுங்கள். பாருங்கள், இந்தக் காரியங்கள் அவ்விதமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

232. இப்பொழுது எல்லோரும், பீடத்தண்டையில் இருக்கிற நீங்கள், உங்கள் கரங்களை உயர்த்தி, "கர்த்தராகிய இயேசுவே, இப்பொழுதே எனக்கு உதவிசெய்யும்" என்று கூறுங்கள், ஒவ்வொருவரும் ஜெபியுங்கள்.

233. எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் இங்கே கூடிவந்திருக்கிறோம், ஓ, தேவனே, அது மரணத்திற்கும் ஜீவனுக்கும் இடையேயுள்ளது, இந்த ஜனங்கள் இங்கே நின்று கொண்டிருக்கிறார்கள். இப்பொழுதே பரிசுத்த ஆவி யானவர் அவர்களுடைய ஜீவியத்திற்குள் வருவாராக. தேவனுடைய வல்லமை அவர்களை பீடத்தண்டை கொண்டு வந்துள்ளது, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வல்லமையோடு அவர்களிடத்தில் அந்த வல்லமை வரு வதாக, அவர்கள் வாஞ்சிக்கிற மகத்தான நித்திய ஜீவனை அவர்களுக்கு அருளிச் செய்வீராக. கர்த்தாவே, எல்லா இடங்களிலும் உள்ள சபைகள் மரித்துக் கொண்டிருக் கின்றன, ஆவிக்குரிய தண்ணீர் பூமியிலிருந்து எடுக்கப் பட்டதுபோல் காணப்படுகிறது. அந்த ஊற்றண்டை வருவதற்கு இவர்களுக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கும் போதே, அதை, அருளிச்செய்யும் கர்த்தாவே, அவர் களுடைய வறண்டு போன ஆத்துமா, இன்று இரவில் தேவனுக்காக ஏங்கித் தவித்தும், தாகமாய் இருக்கிற அந்த ஆத்மாக்கள் இப்பொழுது பரிசுத்த ஆவியினால் நிரப்பப் படட்டும். கர்த்தாவே அதை அருளிச்செய்வீராக. உம்மு டைய இரக்கமும் கிருபையும் அவர்களோடு இருப்பதாக.

234. இப்பொழுது - சற்றுநேரம் உங்கள் தலைகள் தாழ்த்தி இருக்கட்டும்... ஜெபித்துக்கொண்டே இருங்கள், ஜெபித்துக்கொண்டே இருங்கள். ஒவ்வொருவரும், பாருங் கள், ஜெபித்துக்கொண்டே இருங்கள், நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். என்னால் முடிந்த எல்லாவற்றையும் நான் செய்வேன், ஆனால் பரிசுத்த ஆவியை நான் கொடுக்க முடியாது. அதைத் தேவனே செய்தல்வேண்டும். கவனி யுங்கள், உங்கள் சிந்தையிலும், உங்களுக்கு முன்பாகவும் கிறிஸ்துவை உருவகப்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கண்களை மூடியிருக்கும் வேளையில் கவனியுங்கள், உங்களால் கிறிஸ்துவைக் காணமுடிகிறதா என்று பாருங்கள். அப்படியானால் அவரிடம் நடந்து செல்லுங்கள்,

"கர்த்தராகிய இயேசுவே, நான் இங்கு இருக்கிறேன். நானும் நீரும் ஒன்றாக இணையப் போகிறோம், இந்த வேளை யிலிருந்து. இன்று இரவில் நீர் சொன்ன வார்த்தை ஒவ்வொன்றையும் நான் எடுத்துக்கொள்கிறேன்" என்று கூறுங்கள். இப்பொழுது அங்கேயே தரித்திருங்கள், அங்கேயே தரித்திருங்கள், இன்று இரவிலும், நாளையும், அதற்கு அடுத்த நாளும் இங்கே இருந்தால், எல்லாம் முடியும் வரை தரித்திருங்கள், தேவன் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் நிரப்புவார் என்ற விசுவாசத்தோடு ஜெபித்துக்கொண்டே இருங்கள்.

235. டான் (Don) இங்கே வாருங்கள், ஜெபத்தில் அவர்களை வழிநடத்துங்கள். டான், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. 

இந்தச் செய்தி புத்தகமானது குமரி மாவட்டம்,
கருங்கல் சபை விசுவாசிகள் மற்றும்
7 Star Ministry மூலமாக
அச்சிடப்படுகிறது.
(சகோ. ஜாஸ்பர் ஜெபமணி : ☎ 9488277207)
(சகோ. கிதியோன்: ☎ 8277704090)

எமது வெளியீடுகள்:

1. ஜீவன் 58–0519
2. பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை... 53–0614
3. தேவனால் அருளப்பட்ட சுகமளித்தலின் வழி 54–0719
4. குருடன் பார்திமேயு 61–0124
5. தேவன் தம்முடைய சிந்தையை... 65–0427
6. ஆவிக்குரிய புத்திரசுவிகாரம் 56–0923
7. உம்முடைய வார்த்தையின்படியே 53–0608E
8. யேகோவாவின் ஏழு கூட்டு நாமங்கள் 55–0120
9. முன்மாரியும் பின்மாரியும் 60–0303
10. அவர் அந்த வழியாக கடந்துபோக... 57–0727
11. யோசேப்பு தன் சகோதரர்களை சந்தித்தல் 56–1230
12. ஒரு வில்லிலிருந்து எய்யப்பட்ட தேவனுடைய... 56–0801

13. மன்னிக்க முடியாத பாவம் 54–1024
14. ஒரு முற்றிலுமானது 63–1201M
15. தேவசித்தம் இல்லாமல் தேவனுக்காக ஒரு சேவை செய்ய முயற்சித்தல் 65–11–27B
16. வெளியே அழைக்கப்பட்டவர்கள் 58–01–09
17. மகத்தான இளவரசனும், ராஜாவுமாகிய மெல்கிசேதேக்கு 55–0109 M
18. இயேசு யார் ? 64–0620M
19. ஒரு விளங்காத சத்தம் 61-0315
20. வழக்கு விசாரணை 64–0419
21. உலகம் மறுபடியும் விழுந்துபோகுதல் 63–1127
22. உன்னதஅழைப்பு (HINDI)
23. ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு (மறுபதிப்பு)
24. ஏழு சபை காலங்களின் வியாக்கியானம் (மறுபதிப்பு)
25. இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்துதல் (மறுபதிப்பு)
26. தானியேலின் எழுபது வாரங்கள் (மறுபதிப்பு)
27. சுகமாகுதலைக் குறித்த சிந்தனைகள் (மறுபதிப்பு)

அடுத்த வெளியீடுகள்:

1. இயற்கைக்கு மேம்பட்டவைகள்: வில்லியம் பிரன்ஹாமின் வாழ்க்கை வரலாறு, பாகம்- 1
2. ஒரு தீர்க்கதரிசியின் தென்ஆப்பிரிக்கப் பயணம்
3. அழுத்தத்தை வெளியேற்றுதல் 63–0113M
4. எல்–ஷடாய் 59–04–16
5. கிறிஸ்து கதவைத் தட்டுகிறார் 58–03–30E

6. கேள்விப்படுதல், பெற்றுக்கொள்ளுதல் மற்றும் செயல்படுதல் 60–0607
7. தெய்வீக ஐக்கியத்திற்கான தேவனுடைய அருளப்பட்ட அணுகுமுறை 60-06-30

இலவசப் பிரதிகளுக்கு:

சகோ. பெனியேல் எபி (கோவை)

போன்: +91 9047268278, 9597378278

website: www.wordoflife.in

Visit The Website

Download PDF

குறிப்புகள்: